www.padippakam.com

பாமா சிறப்புப் பேட்டி



"எழுத்து -
எதிர்ப்புணர்வுக்கான ஆயுதம்"

எழுச்சி

# தலித் முரசு

சமூக நீதித் திங்களிதழ்
சூன் 2001 ■ ரூ. 6





பண்ணைகளை எதிர்க்கும்
தலித் பெண்கள்

## தீவிரவாதிகளாக்கப்பட்ட இஸ்லாமியர்கள்

படிப்பகம்

www.padippakam.com



# தேசியம் பேசும் பிரிவினைவாதிகள் !



தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கென கல்லூரிகள் தனியாக நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவை உறுப்பினர்கள் சிலர் எழுப்பியுள்ளனர். அதற்கு பண்டித மாளவியா, கடும் எதிர்ப்புத் தெரிவித்துப் பேசியுள்ளார். தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரு கல்லூரி அமைத்தால், அது கல்வித் துறையில் பிரிவினை வாதத்தை உருவாக்கும் என்றும் தெரிவித்துள்ளார். "கண்ணாடி வீட்டிற்குள் இருந்து கல்லெறிபவன் முட்டாள்" என்பது எல்லோரும் நன்கறிந்த பழமொழி.

எலி, தன்னுடைய புனித வாழ்வைக் கட்டிக் காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான், தனி வளையில் வாழ்கின்றது என்று நாம் ஒத்துக்கொண்டால், மனித சமூகத்தில் இருந்து முழுமையாகத் தனித்து வாழும் இந்தப் பார்ப்பனர்கள் கூட, புனித வாழ்க்கை வாழ்கிறார்கள் எனலாம். தான் மட்டும் மனித சமூகத்திலிருந்து எல்லா வகையிலும் பிரிந்து வாழ்ந்து கொண்டு, மற்றவர்களுக்கு 'தேசியம்' பற்றி அறிவுறுத்துவதே இந்தப் பார்ப்பனர்களின் இயல்பு.

இந்த மனிதர் எல்லா நேரங்களிலும், 'பனாரஸ் இந்து பல்கலைக் கழகம்' பற்றியே பேசிவருகிறார். இந்தப் பல்கலைக் கழகத்தை நான் ஒரு பிரிவினைவாதப் பல்கலைக் கழகமாகவே கருதுகிறேன். இந்தப் பல்கலைக் கழகம் பிரிவினைவாதப் பல்கலைக்கழகம் அல்ல என்றால், இந்த நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களும் தேசிய பல்கலைக் கழகங்களே. இந்தப் பல்கலைக் கழகம் ஒரு இந்து பல்கலைக் கழகம் கூட அல்ல. இந்த நிறுவனம் ஒரு குறிப்பிட்ட சாதி மக்களுக்கான ஓர் அமைப்பு. இந்தப் பல்கலைக் கழகத்தில், ஒரே ஒரு பார்ப்பனரல்லாதவரையாவது மாளவியாவால் காட்ட முடியுமா? கண்டிப்பாக முடியாது. ஆனால், இந்துக்களுக்கான கல்லூரி என்று மட்டும் சட்டத்தில் வரையறுத்துள்ளனர்.

திரு. அய்யங்கார் (அனந்தசயனம் அய்யங்கார்) தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தனிக்கல்லூரி அமைப்பதை எதிர்த்து இந்த அவையில் பேசியுள்ளார். எவ்வளவு படித்தாலும், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் - எந்த பார்ப்பனக் கல்லூரிகளிலும் பேராசிரியர்களாக வரவே முடியாத நிலை இருப்பதை இவர் மறைத்துப் பேசுவதுதான் அநியாயமாக உள்ளது. சேலத்தில் அண்மையில் நடந்ததை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

12.3.1945 நாளிட்ட 'இந்து' பத்திரிகையில் (சென்னை பதிப்பு) ஒரு விளம்பரம் வந்தது. அதில், 'சேலம் பிராமணர் சங்கம்' என்ற அமைப்பு, "இந்தியா முழுக்க பிராமணர்கள் சங்கம் அமைக்கவும், பிராமணர்கள் நலன் காக்கவும், பிராமணர்களுக்கான கல்லூரிகள், பிராமணர்களுக்கான தொழிற்சாலைகள் உருவாக்க வேண்டும்" என்ற நான்கு திட்டங்களை அறிவித்திருந்தனர். இந்த அமைப்பின் தலைவர், திரு. 'சச்சிஊதமா' சர். சி.பி. ராமசாமி அய்யர் என்ற 'முற்போக்கு மனிதர்' தான்.

எல்லோரும் தேசியம் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால், நடைமுறையில் பிரிவினைவாதிகளாகவே வாழ்கின்றனர். தேசியம் பேசும் யாரும் இதுவரையில், இந்த அவையில் தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றிப் பேசியதில்லை. ஆனால், நான் தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி - அவர்களுக்கான தேவைகளைப் பற்றிப் பேசினால் மட்டும் நீங்கள் என்னை எதிர்க்கிறீர்கள். வெளியில் ஒரு மாதிரியாகவும், அவையில் வேறொரு மாதிரியாகவும் நடிக்கும் நீங்கள்தான் உண்மையான பிரிவினைவாதிகள். என்னுடைய ஒவ்வொரு தீர்மானத்தையும் நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எதிர்க்கின்றீர்கள்.

நான், தனி வாக்குரிமை, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு, கல்வி உதவித் தொகை ஆகியன கேட்கும் போது மட்டும்தான் - இந்த அவையில் உயிருடன் இருப்பது உங்களுக்குத் தெரிகிறது. மற்ற நேரங்களில் நான் இறந்துவிட்டதாகவே நினைத்து நீங்கள் செயல்படுகின்றீர்கள். உங்களுக்கு தேசிய சிந்தனை இருந்தால், தாழ்த்தப்பட்ட மக்களிடம் இவ்வளவு கொடூரமாக நடந்து கொள்வீர்களா?

தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களின் உரிமைகளுக்காக எழுந்து போராட முன்வந்து விட்டார்கள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி உங்களுக்கு ஓர் எச்சரிக்கை விடுக்க விரும்புகிறேன். "நீங்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் நியாயமான கோரிக்கைகளைக்கூட தொடர்ந்து எதிர்ப்பீர்கள் எனில், "நாங்கள் எங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு ரத்தம் சிந்தக் கூட தயங்க மாட்டோம்." ◇

*'பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு' : 10 பக்கம் : 354*

" நான் உங்களுக்குச் சொல்கிறேன். உங்கள் கருணையில் நான் வாழவில்லை; உங்கள் கருணையில் வாழ விரும்பவும் இல்லை. நான் இந்த நாட்டின் குடிமகன். என் சக மனிதர்கள் அனுபவிக்கும் உரிமை, என் சமூக மக்களுக்கும் வேண்டும் என்பதை வலியுறுத்திப் பெறும் உரிமை எனக்கு முழுமையாக உள்ளது. நீங்கள் காட்டும் கருணை எங்களை அடிமையாக்க மட்டுமே பயன்படும். "

படிப்பகம்

www.padippakam.com

புகைப்படம் : மீனா மயில்



மழைக் காலங்கள்
ஓடோடி விட்டன
மகிழ்ச்சியையும்
இழுத்துக் கொண்டு...

கிடைத்ததை
தேக்கி வைத்து
விதைக்கிறேன்


எழுந்து வா
சிரித்து நாட்களாயிற்று



படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்



7


8 சாதி
சேரிகளைக் கொளுத்தி பா.ம.க. வெறியாட்டம்
ஜெயராஜ் ரத்னம்

10 எழுச்சி
பண்ணைகளை எதிர்க்கும் தலித் பெண்கள்
விடியல்

14 எண்ணம்
துரும்பையாவது அசைக்கக் கற்றுக் கொள்ளுங்கள்
எஸ்.வி. ராஜதுரை

16 சாதனை
இசைஞானி பற்றிய ஓர் இசை அலசல்
டாக்டர் கே.ஏ. குணசேகரன்

20 நம்மைச்சுற்றி
செஞ்சீனத்துள் புதைய மறுக்கும் வெள்ளை திபெத்
மாயா

22 மனிதம்
தீவிரவாதிகளாக்கப்பட்ட இஸ்லாமியர்கள்
மீனா மயில்

26 தேடல்
உடையும் சித்திரங்கள்
சுப. வீரபாண்டியன்

28 பேட்டி
"எழுத்து - எதிர்ப்புணர்வுக்கான ஆயுதம்"
பாமா

32 தெளிவு
ஸ்டாலின் ஒரு சகாப்தம்
மதிமாறன்

42 பார்வை
'குமுதம்' - ஆபர்சத்தின் தமிழ் வடிவம்
சிநேகிதி

7 'விபத்து'
'எழில்மிகு சென்னை'
என்ன செய்யப் போகிறதோ?
மீனா மயில்

13 அறிமுகம்
சாமியாராக ஆசையா?
மண்ணாங்கட்டி

19 அறிவாயுதம்
இரட்டை வாக்குரிமைக்கு
மாற்று வழி
சங்கமித்திரை

34 திறனாய்வு
கதைகளே வரலாறு -
வரலாறே கதைகள்
ராஜ் கவுதமன்

36 பதிவு
ஒப்புதல் வாக்குமூலம்
கவுதம சன்னா




10


■ அட்டை வடிவமைப்பு : ஆர்.ஆர். சீனிவாசன்
■ இதழ் வடிவமைப்பு : ஜெமிமா ஆலிஸ்
■ அட்டைப் புகைப்படம் : மீனா மயில்




படிப்பகம்

www.padippakam.com

எழுச்சி
தலித் முரசு

Volume : 4 Issue : 12

ஜுன், 2001
ஆண்டு : 5 - இதழ் : 5

•

ஆசிரியர், வெளியிடுபவர்
பெ. சந்திரசேகரன்

பொறுப்பாசிரியர்
புனித பாண்டியன்

•

ஆண்டுக் கட்டணம் : ரூ. 100/-
நூலகக் கட்டணம் : ரூ. 200/-
வாழ் நாள் கட்டணம் : ரூ.1000/-

•

முகவரி
ஈ-21, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, அண்ணா முதன்மைச் சாலை
கே.கே. நகர், சென்னை - 600 078

தொலைபேசி : 371 66 88
தொலைநகல் : 474 11 88

E-mail : ambedkar@md4.vsnl.net.in

# மறுபரிசீலனை செய்யுங்கள்

நடந்து முடிந்த தேர்தலில், வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தவர்களுக் எல்லா வகையிலும் லாபம் இருக்கிறது. எதிர்க்கட்சியாக இருந்து அடுத்த அய்ந்தாண் களில் பதவியைப் பிடிப்பதற்கு வியூகம் வகுப்பதன் மூலம் - எதிர்க் கட்சிகளுக்கும் லாப இருக்கிறது. ஆனால், இந்த ஆட்சி மாற்றங்கள் உருவாகக் காரணமாக இருந்த அடித்த மக்களுக்கு எந்த லாபமும் இருக்கப் போவதில்லை என்பதைத்தான் கடந்த கால ஆட் மாற்றங்கள் உணர்த்துகின்றன. அவர்கள் தவறைச் சுட்டிக் காட்டி, இவர்கள் ஆட்சிக் வந்தார்களேயொழிய, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நல்லவர்கள் என்று அர்த்தமல்ல.

ஒவ்வொரு ஆட்சி மாற்றத்தின் போதும் ஒடுக்கப்பட்ட மக்கள், பகடைக்காய கத்தான் பயன்படுத்தப் படுகின்றனர். இன்றளவும் இம்மக்களுக்கான நலத் திட்டங்கள் சலுகை ரீதியான திட்டங்களாக - மீண்டும் அண்டி நின்று வாழ்வதற்கான திட்டங்களாக புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்றவர்களும் அறிவிக்கின்றார்களே ஒழிய - உள்ளபடியே இம்மக்களின் சமூக வாழ்வியல் நிலையை உயர்த்துவதற்கான திட்டங்களாக அவை இல்லை.

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள அரசை எப்படி அணுகுவது? எந்தவொரு ஆட்சியும் நாம் விரும்பாத ஆட்சி என்பதாலேயே அவற்றை எதிர்த்தே தீர வேண்டிய அவசியமில்லை. நமக்கான திட்டங்களை நாம் முன்வைப்போம். அதை இந்த அரசு செயல்படுத்துகிறதா, இல்லையா என்பதைப் பொறுத்தே - நமது எதிர்ப்பும் ஆதரவும் அமைய வேண்டும். ஆனால், அதற்காக நம்முடைய உரிமைகளைப் பெறுவதற்கெல்லாம் நாம் கோரிக்கை மனு அளித்து அரசை நம்பியிருக்க வேண்டும் என்று பொருளில்லை. எந்த ஆட்சியாக இருந்தாலும் - போராட வேண்டியவற்றைப் போராடித்தான் பெற்றாக வேண்டும்.

மேற்கு வங்கம், அசாம், கேரளா, புதுவை, தமிழ் நாடு ஆகிய அய்ந்து மாநிலங்களிலும் பா.ஜ.க.வும் அதனுடன் இணைந்த கூட்டணிக் கட்சிகளும் ஆட்சியைப் பிடிக்காதது மட்டுமல்ல; மரண அடியைப் பெற்றிருக்கின்றன. ஆம். பாரதீய ஜனதா என்ற மதவாதக் கட்சியுடன் கூட்டணி வைத்ததாலேயே - கம்யூனிஸ்டுக் கட்சிகள், தமிழ் மாநில காங்கிரஸ் போன்ற கட்சிகளை தி.மு.க இழக்க நேரிட்டது; அதன் மூலம் ஆட்சியையும் இழந்தது. இது, திராவிட கட்சிகளுக்கு மட்டுமல்ல, தலித் கட்சிகளுக்கும் கிடைத்த பாடமாகும். எனவே, பா.ஜ.க.வுடனான கூட்டணியை இவர்கள் மறுபரிசீலனை செய்தாக வேண்டும்.

வெறுமனே பாலங்களைக் கட்டுவது, நகர்ப்புற மேம்பாட்டுக்கான திட்டங்களுக்கு என முக்கியத்துவம் கொடுத்துவிட்டு - அடித்தட்டு மக்களின் வாழ்க்கையோடு விளை யாடினால் - எத்தனை 'தொலைக்காட்சிகள்' இருந்தாலும் அதன் மூலம் மக்கள் எடுக்கும் முடிவை மாற்றிவிட முடியாது என்பதையே தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன.

சாதிக் கட்சிகளுடன் தி.மு.க. கூட்டணி வைத்ததுதான் அதனுடைய இழப்புக்கு முக்கிய காரணம் என்று பொதுவாக சொல்லப்படுகிறது. ஆனால், தலித் கட்சிகளுடன் இணைந்ததுதான் தி.மு.க.வின் தோல்விக்குக் காரணம் என்ற கருத்துருவாக்கம் - சாதி இந்துக்களால் வலிந்து முன்வைக்கப்படுகிறது. ஆனால், சாதியைத் தக்கவைத்துக் கொள்ள உருவான கட்சிகளையும் - சாதியால் கடும் இழப்புக்குள்ளாகி, அதை ஒழித்தே தீர வேண்டிய நிலையில் உள்ள தலித் கட்சிகளையும், இயக்கங்களையும் ஒப்பிடுவது, பிற்போக்குத் தனத்தின் உச்சகட்டம்.

தலித் கட்சிகள் தோல்வியைத் தழுவியது, அரசியல் அரங்கில்தானே தவிர - சமூக அரங்கில் அல்ல. தலித் இயக்கங்கள் துவங்கிய கிளர்ச்சி, போர்க்குணம் என்பது, இன்னும் வீறுகொண்டுதான் நிற்கிறது. தலித் இயக்கங்கள் இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டி யுள்ளது என்பதையே - தேர்தல் முடிவுகள் நமக்கு உணர்த்துகின்றன.

தேர்தல் அரசியல் என்பது, தலித் விடுதலையின் ஒரு பகுதியே; அதுவே முழுமை யானதல்ல என்பதை இனியாவது நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். சமூக, பண் பாட்டுத் தளங்களில் இடையறாது களப்பணியாற்ற வேண்டும். நம்முடைய சமூக நிலையை உயர்த்தாமல், நாம் அரசியல் அதிகாரத்தை ஒருபோதும் கைப்பற்றவே முடியாது என்பதை இந்தத் தேர்தல் உணர்த்தியுள்ளது. •



படிப்பகம்

www.padippakam.com



பா ரதீய ஜனதாதான் முதலில் துவங்கியது. பாபர் மசூதியை டித்த வழக்கில், ஒரு நாள் சிறையில் ருந்த கல்யாண்சிங் முதலமைச்சராகப் தவியேற்றார். இது ஒரு முன்மாதிரியாகிப் பானது. இன்று, மத்திய அமைச்சரவையில் ங்கம் வகிக்கும் பா.ஜ.க. முன்னணித் லைவர்கள் - எல்.கே. அத்வானி, முரளி னோகர் ஜோஷி, உமாபாரதி ஆகிய மூவரும் இதே வழக்கில் குற்றம் சாட்டப்பட்டார்கள்.

அரசியல் ரீதியாக போடப்பட்ட வழக்கு ன்று கூறி இந்த ஒழுங்கீனத்தை பா.ஜ.க. நியாயப்படுத்தியுள்ளது. ஜெயலலிதாவும் அதையேதான் சொல்கிறார். ஊழல்வாதிகள் அவரவர் வழக்குகளைக் குறிப்பிடுகின்றனர். ஊழல், தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற் கான வழிமுறையாகி விட்டது. ஒருவரை யொருவர் குற்றம் சுமத்திக் கொள்வதற்கு பதில், அரசியல் கட்சிகள், ஒரு நெறி முறையை வகுக்க முன்வர வேண்டும்.

- சமூக நீதிக் காவலர் **வி.பி. சிங்**,
'இந்தியா டுடே' இதழுக்கு அளித்த பேட்டியில்.



"கோவிந்தா... கோவிந்தா...
அய்ந்து மாநிலங்களிலும்
அரோகரா - கோவிந்தா"

ச ம்பந்தமில்லாத விவாதங்கள், ஊளையிடுவது போன்ற கூச்சல்கள், மேசையைத் தட்டி ஆர்ப்பரிப்பது போன்ற நடவடிக் கைகள் - மக்களுக்கான பிரதிநிதிகள் கூடியுள்ள அவையில்தான் இருக்கி றோமா அல்லது அரட்டை அடிக்கும் கல்லூரி மாணவர்களுக்கிடையே இருக்கிறோமா என்கிற எண்ணத்தை ஏற்படுத்தியது.

- **இரா. திருமாவளவன்**, அமைப்பாளர், 'விடுதலைச் சிறுத்தைகள்'
சட்டப் பேரவை குறித்து 'குமுதம் ரிப்போர்ட்டரில்'




அ றிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி, மனித இனத்தின் வெற்றியாகக் கருதப்பட்டு வரும் வேளையில், புதிதாக 'எத்தினிக் கிளீனி'ங் என்ற பெயரில் இனவெறி என்ற பழைய அரக்கன் மீண்டும் உயிர்த்தெழுகிறான். இனவெறி, இனப்பாகுபாடு, பிற நாட்டவர் மீது காட்டப்படும் வெறுப்பு, சகிப்புத்தன்மையின்மை ஆகிய வற்றைப் பகுத்தறிய இயலாத சிலர் - இந்த விஷவிதையை நவீன தொழில் நுட்பத்தில் புகுத்தியுள்ளனர்.

- 'அய்க்கிய நாடுகள் அவை' விடுத்துள்ள அறிக்கையில்.

செ ல்வி ஜெயலலிதா மட்டுமல்ல, இப்படி ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டு, எம்.எல்.ஏ. ஆவதற்குக்கூடத் தகுதியில்லாத எந்த ஒரு நபரையும் கவர்னர் பாத்திமா பீவி முதல்வராகப் பொறுப்பேற்க அழைத்திருந்தாலும் - நான் கண்டிப்பாக அதையும் எதிர்த்துதான் இருப்பேன். ஆகவே, இங்கே நபர் முக்கியமல்ல... நம்மை ஆளப் போகிறவர் ஒரு கிரிமினல் குற்றவாளியாக இருக்கக் கூடாது.

- வழக்கறிஞர் **செல்வராஜ்**, முதல்வர் ஜெயலலிதா - முதல்வர்
பதவியை வகிக்கத் தடைகோரும் மனுவில்



படிப்பகம்

www.padippakam.com



# 'எழில்மிகு சென்னை' என்ன செய்யப் போகிறதோ?

பரபரப்பான தேர்தல் நாள் மே 10. புது ஆட்சியைத் தேர்ந்தெடுக்கப் போகிறோமே இருக்காதா? ஒட்டேரி குடிசைப் பகுதி மக்களுக்கும் அதே பரபரப்பு. வாக்களிக்க அனைவருமே போய் விட்டிருந்த சூழலில், ஆளில்லாத ஒரு வீட்டின் கூரை திடீரென தீப்பிடித்து எரிந்தது. அந்நேரம் பார்த்து காற்றும் சதி செய்ய, தீ மாடியிலிருந்து குடிசைகளுக்குப் பரவி, கீழே விழுந்து, நெருப்பு - கம்புகளிலும் பற்றி கீழ் வீடுகளும் எரிந்து, சில நிமிடங்களில் இடமே கறுத்து வெற்றிடமானது.

வீட்டிலிருந்து ஒரு சிலர் தப்பித்து வெளியே ஓடிவந்தனர். அதில் 65 வயது முதியவர், மின்சாரம் பாய்ந்து அங்கேயே இறந்தார். மகள்களின் திருமணத்திற்கு சேர்த்து வைத்த நகை, பணம், புடவைகள், பிள்ளைகளின் படிப்புச் சான்றிதழ்கள், சிறுகச் சிறுக சேமித்து வைத்த உண்டியல் பணம், தாலியை அடகு வைத்து வாங்கிப் போட்ட அரிசி, பருப்பு, தொலைக்காட்சிப் பெட்டி, தையல் எந்திரம், பீரோ, கட்டில் என்று எல்லாமும் சாம்பலாகி விட்டது.

ஒட்டேரி மக்கள் 45 ஆண்டுகளாக இங்கு வசித்து வந்தார்கள். இதுவரை ஒரு சின்ன விபத்தைக் கூட அவர்கள் சந்திக்கவில்லை. அவர்களின் உடைமைகளையும் சேமிப்புகளையும் தைரியமாக குடிசை வீட்டிற்குள்ளேயே வைத்ததன் விளைவு, இன்று எல்லாவற்றையும் இழக்க வேண்டிய நிலை. எல்லா தீ விபத்துகளைப் போலவும் இதுவும் அரசியல் சதிதான் என்று சிலர் கூறுகின்றனர்.

சம்பவம் நடந்து நிறைய நேரமாகியும் பத்திரிகைகள் கூட வராதது - மக்களுக்குப் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தவே, சில நாளிதழ்கள் அலுவலகங்களுக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டிருக்கின்றனர். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, போலிஸ் தகவல் கொடுக்காமல் அந்தப் பக்கம் வரமட்டோம் என்று 'சமூக அக்கறையுள்ள' அந்த நாளிதழ் அலுவலகத்தின் பொறுப்புமிக்க செய்தியாளர் பதிலளித்துள்ளார்.

இது போன்ற விபத்து நடக்கையில் காவல் துறையின் மெத்தனப்போக்கு இல்லையென்றால் எப்படி? ஒரு மணி நேரம் தாமதமாக வந்து குடிநீர் வண்டியும் உள்ளே போக முடியாது என்று காவல் துறை வெளியே நிற்க வைத்துள்ளது. விபத்திற்குப் பின்னும் கூட ஒரு காவலர் கூட சம்பவ இடத்தில் இல்லை. இதனால் இரண்டு நாள் கழித்தும் அதே இடத்தில் தீப் பிடித்தது.

> **முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, போலிஸ் தகவல் கொடுக்காமல் அந்தப் பக்கம் வரமட்டோம் என்று, 'சமூக அக்கறையுள்ள' அந்த நாளிதழ் அலுவலகத்தின் பொறுப்புமிக்க செய்தியாளர் பதிலளித்துள்ளார்.**

மறுநாள், தி.மு.க. பிரமுகர் புரசை ரங்கநாதன் சம்பவ இடத்தைப் பார்வையிட வந்த போது, துணைக்கு வந்த செய்தியாளர்கள் அப்பொழுதும் மக்களிடம் விசாரிக்கவில்லை. விளைவு, பாதிக்கப்பட்ட சுமார் 125 குடும்பத்தின் மொத்த உடைமைகளும் வெறும் அய்ம்பதாயிரம் ரூபாய் மட்டுமே தேறும் என்ற செய்தி வெளியாகிறது.

குடிசைகளுக்குள் என்ன இருந்துவிடப் போகிறது? என்று அந்த செய்தியாளர்கள் நினைத்திருக்கக் கூடும்! யாருமே கண்டுகொள்ளவில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்த நிலையில், 'விடுதலைச் சிறுத்தைகள்' அமைப்பாளர் திருமாவளவன் மக்களைச் சென்று பார்த்து 5,000 ரூபாயும், கூடவே சேலை, வேட்டி, தையல் எந்திரம், குடம் போன்றவற்றை வழங்கிய பிறகுதான் ஓரளவிற்கு சமாதானமாகி இருக்கின்றனர்.

**மே 2001இல் நடைபெற்ற தீ 'விபத்து'கள்**

| நாள் | இடம் | எரிக்கப்பட்ட குடிசைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| மே 22 | அமைந்தகரை | 50 குடிசைகள் |
| மே 10 | ஒட்டேரி | 25 குடிசைகள் + முதியவர் பலி |
| மே 16 | சார்பனாமேடு வேலூர் | 600 குடிசைகள் |
| மே 19 | சோழவரம் | 25 குடிசைகள் |

இதுவரை 'சிங்காரச் சென்னை'க்காக எரிந்த குடிசைகள் இனி 'எழில்மிகு சென்னை'க்காக எரியாமல் இருந்தால் சரி. •

- மீனா மயில்



படிப்பகம்

www.padippakam.com

“என் வாயப் பொத்தி பசங்கள போலிஸ் புடிச்சாங்க” சேரித்தாய் கதறல்



## தேர்தல் வெற்றி

# சேரிகளைக் கொளுத்தி பா.ம.க. வெறியாட்டம்

■ **ஜெயராஜ் ரத்னம்**

வந்தவாசியிலிருந்து

**பா**ட்டாளி மக்கள் கட்சி, வந்தவாசி தொகுதியில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டவுடன், வெற்றியைக் கொண்டாடும் விதமாக அப்பகுதி சேரிமக்கள் மீது கடும் தாக்குதல் நடத்தியுள்ளது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக லோகநாதனும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக முருகவேல்ராசனும், ம.தி.மு.க. சார்பில் ராஜகோபாலும் சுயேட்சையாக வெங்கடேசனும் வந்தவாசி தொகுதியில் போட்டியிட்டனர்.

தி.மு.க. வேட்பாளருக்கு ஆதரவாக, ‘விடுதலைச் சிறுத்தைகள்’ கடும் பிரச்சாரத்தில் ஈடுபட்டது. விளைவு, பா.ம.க. வேட்பாளர் சேரிப் பகுதிக்குள் நுழைய முடியவில்லை. குறிப்பாக வந்தவாசி நகரத்திற்குட்பட்ட கோட்டைகாலனி, மும்முனி, பெரியகாலனி ஆகிய சேரிகளுக்குள் பா.ம.க.வின் சின்னத்தைக் கூட வரைய முடியவில்லை. 13.5.2001 அன்று தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபின், பா.ம.க. வெற்றி பெற்றதைக் கொண்டாடும் விதமாக - மும்முனி கிராமத்தின் நுழைவாயிலில் வைக்கப்பட்ட, ‘விடுதலைச் சிறுத்தைகளி’ன் விளம்பரப் பலகையில் மாட்டுச்சாணத்தைப் பூசியுள்ளனர்.

15.5.2001 அன்று இரவு இச்சம்பவம் நடந்திருப்பதாக பகுதி மக்கள் தெரிவித்தனர். மறுநாள் காலையில் சாணம் அடிக்கப்பட்ட பலகையைக் கண்ட ‘விடுதலைச் சிறுத்தைகளின்’ முகாம் அமைப்பாளர் ஜானகிராமன், மும்முனி ஊராட்சி மன்றத் தலைவர் பார்வதி சின்னச்சாமியிடம் (பா.ம.க.) முறையிட, நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். அதன் பேரில் காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. ஆனால், யாரும் கைது செய்யப்படவில்லை.

இந்நிலையில், மும்முனி கிராமத்தைச் சேர்ந்த பார்த்திபன் என்கிற 10 வயது சிறுவன் டீ வாங்கச் செல்லும்போது, செம்பூரைச் சேர்ந்த வன்னியர்கள் அடித்து விரட்டியுள்ளனர். இதற்கு பதிலடியாக மும்முனி சேரியைச் சேர்ந்த ‘விடுதலைச் சிறுத்தைகள்’ பா.ம.க.வைச் சேர்ந்த சிலர் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிகிறது. இதைக்கண்டித்து, 16ஆம் தேதி பா.ம.க.வினர் சாலை மறியல் மற்றும் பட்டினிப் போராட்டத்திலும் ஈடுபட்டனர். பா.ம.க. எம்.பி. துரை, மன்னப்பன், பிச்சைக்கண்ணு, முத்துக்கருப்பன், செல்வராஜ் ஆகியோர் முன்னின்று இந்த பட்டினிப் போராட்டத்தை நடத்தியதாக பகுதி மக்கள் கூறுகின்றனர். இதன் விளைவாக, மும்முனியைச் சேர்ந்த பார்த்திபன், ‘விடுதலைச் சிறுத்தைகளின்’ முகாம் அமைப்பாளர் ஜானகிராமன், கிருஷ்ணன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இதையடுத்து கோட்டை காலனி, பெரியகாலனி பகுதியிலும் பதட்டம் நிலவியது. வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களிலிருந்து போலிசார் குவிக்கப்பட்டனர். இது ஒருபுறம் நடந்து கொண்டிருக்க, மும்முனி கிராமத்தின் மீது 16ஆம் தேதி மாலை 6மணிக்கு பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த வன்னியர்கள், கடுமையான தாக்குதலை நடத்தியுள்ளனர்.

உண்மையறியும் குழுவைச் சேர்ந்த நாம் மும்முனி கிராமத்திற்குள் நுழைய முயன்றோம். அங்கு பாதுகாப்புக்கு போடப்பட்டிருந்த சப்-இன்ஸ்பெக்டர் கணேஷ், “எஸ்.பி. அல்லது டிஎஸ்.பி.யிடம் அனுமதி பெற்ற பின்புதான் உள்ளே நுழைய முடியும்” என்று கண்டிப்பாக சொல்லி விட்டார். கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் ஜானகிராமனுடைய அம்மா பட்டம்மாள், அழுத வாறே தாக்குதலுக்குள்ளான ஹீரோ ஹோண்டா, பண்டபாத்திரங்கள், சைக்கிள், அடுப்பு எல்லாவற்றையும் நம்மிடம் காட்டினார். “பறத் தேவிடியா மவளே .... எங்களை எதுத்தா உம்மவன் இயக்கம் கட்டுறான்னு” சொல்லி காட்டுமிராண்டித்தனமாக அடித்ததாக சொல்கிறார், பட்டம்மாள். 120 வீடுகளில் வசிக்கும் இந்த தலித் குடியிருப்புகளில், இரண்டு வீடுகளை வன்னியர் தீ வைத்துக் கொளுத்தியுள்ளனர்.

செந்தாமரை (வீட்டு எண் 342) என்கிற பெண்மணியின் வீடு சுத்தமாக தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இச்சம்பவத்தை நேரடியாகப் பார்த்த 68 வயதான பாட்டி கண்ணம்மாள் நம்மிடம் கூறும்போது, “எங்களுக்கு ஓட்டுப் போடவா மாட்டேன்றீங்க - உசுரோட எந்தப் பறையனும் இருக்க முடியாது” என்று மிரட்டி



படிப்பகம்

விட்டுச் சென்றதாகக் கூறினார். இதே தகவலைதான் பலரும் தெரிவித்தனர். நாம் ஒவ்வொரு வீடாகப் போய்பார்த்ததில், சமையல் பாத்திரங்கள், டியூப் லைட், மாட்டுக்கு தண்ணீர் ஊற்றி வைக்கப்படும் குடுவை, சைக்கிள், அடுப்பு ஆகியவை அடித்து நொறுக்கப்பட்டன. ஆடுமாடுகள் கூட விட்டுவைக்கப்படவில்லை.

சாரதா என்கிற பெண்மணி, சமையல் செய்தே 4 நாட்கள் ஆகின்றன. காரணம் பாத்திரங்கள் இல்லை. ''போலிசார் பாதுகாப்புக்கு இருந்தாலும் அதனால் என்ன பயன்?'' என்று கோபத்துடன் கேட்கிறார். ''இவ்வளவு நடந்தும் இதுவரை வருவாய்த் துறையினர் வந்து பார்க்கவில்லை. பாதிப்படைந்தோருக்கு யாரும் ஆறுதல் கூட சொல்ல வரவில்லை'' என்று தி.மு.க. பிரமுகர் ரவி கூறுகிறார்.

இவ்வளவு பெரிய தாக்குதலை நடத்த ஆட்களைத் திரட்டியது, வேலூர் தொகுதி எம்.பி. துரைதான் என்று அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். செம்பூர், சென்னாவரம், அத்திப்பாக்கம், தெள்ளூர், முச்சூர், எரும்பூர் ஆகிய பகுதிகளில் உள்ள வன்னியர்கள்தான் திரண்டு வந்து இந்தத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். இவ்விடத்தைவிட்டு வெளியே வரும்போது, ஒவ்வொரு வீட்டுத் தாய்மார்களும் கதறி அழுதவண்ணமே இருந்தனர்.

இதையடுத்து பெரிய காலனிக்குள் நுழைந்தோம். 500 வீடுகளில் தலித் மக்கள் வசிக்கின்றனர். இங்கு பா.ம.க.வைச் சேர்ந்தவர்கள் தாக்க முயற்சி செய்ததாகவும் ஆனால் முடியவில்லை என்றும், எந்த நேரமும் தாக்குதல் நடத்துவார்கள் என்றும் ஜெயவேல் என்பவர் கூறுகிறார். இரண்டு நாட்களாக படுகாயத்துடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ள குப்பன் கூறும்போது,


''பெரிய காலனிக்குள் யாரோ தாக்குவதற்கு வருகிறார்கள் என்று கேள்விப்பட்டு, வேலை பார்க்கும் இடத்திலிருந்து ஓடிவந்தேன். அப்போது ஒரு போலிஸ்காரர் என் மண்டையில் அடித்தார். ரத்தம் கொட்டியது. அய்யா, நான் வேலை பார்த்துட்டு இப்பத்தான் வர்ரேன் என்று எவ்வளவோ கெஞ்சியும் என்னைவிடவில்லை, கண்மண் தெரியாமல் அடித்தார். எங்க காலனி மக்கள் வந்ததும் - என்னை அப்படியே போட்டுவிட்டு ஓடிவிட்டார்'' என்று கூறும் குப்பன், இன்னொரு குற்றச்சாட்டையும் சுமத்துகிறார்.

அரசு மருத்துவமனை சென்னாவரத்தில் எம்.பி.துரை வீட்டுக்கு எதிரே இருப்பதாகவும், இங்கு சிகிச்சைக்கு சேர்க்கப்படும் காலனிக்காரர்களை எம்.பி. துரை தூண்டுதலின் பேரில் போலிசார் கைது செய்வதாகவும் கூறுகிறார்.

'சமாதானக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் 'விடுதலைச் சிறுத்தைகளை' கைது செய்யும்படி எம்.பி. துரை தூண்டுகிறார்' என்று தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்த தமிழ்வாணன் கூறுகிறார். மேலும், சமாதானக் கூட்டத்தில் எம்.பி.துரை பேசும்போது, 'விடுதலைச்சிறுத்தைகளை' கைது செய்வது குறித்துதான் பேசினார். வேறு எதுவும் பேசவில்லை, பின்பு எப்படி சமாதானம் உருவாகும்'' என்று கேட்கிறார்.

சமாதானக் கூட்டம் முடிந்த பத்தே நிமிடத்தில், வந்தவாசி பஜாரில் உள்ள ஒரு தாழ்த்தப்பட்டவரின் பழக்கடை மண்டியை தீ வைத்துக் கொளுத்தியுள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக யாரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. ஆனால், ஒவ்வொரு சேரியிலும் கைது நடவடிக்கை கூடிக் கொண்டே போகிறது. கோட்டை காலனியைச் சேர்ந்த வேலா, கணேசனைக் கைது செய்த விதம் மிகக் கொடூரமாக இருக்கிறது. இது குறித்து இவரின் தாய் புஷ்பா கூறும்போது, ''ராத்திரி 12மணி இருக்கும் போலிஸ்காரங்க வந்து என் வாயைப் பொத்தி என் பசங்களை பிடிச்சுட்டுப் போனாங்க'' என்று தேம்பித் தேம்பி அழுகிறார்.

**தான் விரும்பிய ஒருவருக்கு ஓட்டுப் போடுவதுதான் ஜனநாயகம். அந்த ஜனநாயகப்படி நடந்து கொண்ட சேரிமக்களின் மீது - மிகக் கொடூரமாகத் தாக்குதல் நடத்தியிருப்பது, வன்மையான கண்டனத்திற்குரியது.**



கோட்டை காலனியில் மட்டும் பாபு, விநாயகம், சுரேஷ், ஏழுமலை, கிட்டு, வேலா, கணேசன், ரவி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இத்தனைக்கும் கோட்டை காலனியில் எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆனால், அதிக மக்கள் தொகையில் இருப்பதால், பிரச்சனையைத் தடுப்பதற்காக கைது நடவடிக்கையில் ஈடுபட்டதாக போலிஸ் தெரிவித்தனர்.

''திருமாவளவனுடைய படம் மீது சாணம் அடித்ததில்தான் பிரச்சனை தொடங்கினாலும், தேர்தலுக்கு முன்பே விதை போடப்பட்டுள்ளது. இரு தரப்பிலும் கைது செய்யப்பட்டுள்ளனர். இப்போது பிரச்சனை கட்டுக்குள் உள்ளது. போதிய போலிசார் பாதுகாப்புக்கு போடப்பட்டுள்ளது'' என்று முடித்துக் கொண்டார்.

மங்கலம் கிராமத்தில் அம்பேத்கர் மன்றமும், கோட்டை காலனியில் ஒரு ஆட்டோவும் தீக்கிரையாகியுள்ளது. இது தொடர்பாக யாரும் கைதாகவில்லையே என்று நாம் எஸ்.பி.யிடம் கேட்டபோது, குற்றவாளிகள் விரைவில் அகப்படுவார்கள் என்று தெரிவித்தனர். கலவரப் பகுதியை விட்டு வெளியேவந்தபோது, ஒரு வித சோகம் நம்மை முற்றுகையிட்டது.

மரத்தை வெட்டுவதும் அப்பாவி மக்களை வெட்டுவதும், வாழும் குடிசைகளைத் தீக்கிரையாக்குவதும், வன்முறையை வளர்ப்பதும் எந்த சனநாயகத்தில் இருக்கிறதோ தெரியவில்லை. பாட்டாளி மக்கள் கட்சியின் முதல் தேர்தல் வெறியாட்டம், வந்தவாசி தொகுதிக்குள் நடந்தேறியுள்ளது.

தான் விரும்பிய ஒருவருக்கு ஓட்டுப் போடுவதுதான் சனநாயகம். அந்த சனநாயகப்படி நடந்து கொண்ட சேரிமக்களின் மீது - மிகக் கொடூரமாகத் தாக்குதல் நடத்தியிருப்பது, வன்மையான கண்டனத்திற்குரியது. புதிதாக பொறுப்பேற்றுள்ள முதல்வர் ஜெயலலிதாதான் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும். கலவரக்காரர்களைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு, எப்படித்தான் நல்லாட்சி புரிவாரோ முதலமைச்சர்? ●

www.padippakam.com



# பண்ணைகளை எதிர்க்கும் தலித் பெண்கள்



தஞ்சை என்றவுடன் பொது மக்களின் நினைவுக்கு வருவது பெரிய கோயிலும், திருவையாறு இசை விழாவும்தான். வரலாற்று ஆர்வலர்கள், சோறுடைத்த சோழ நாட்டின் சிவஸ்தலங்கள் பற்றியும் ஆர்வத்துடன் பேசுவர். ஆனால், இத்தனைக்கும் பின்னால் உள்ள கறுப்பு மக்களின் உழைப்பு எவரின் கண்ணுக்கும் தெரிவதில்லை. எப்பொழுதெல்லாம் அந்த மக்கள் உரிமைகேட்டு எழுந்தார்களோ அப்பொழுதெல்லாம் தாக்கப்பட்டார்கள், எரிக்கப்பட்டார்கள். அன்றைய 'நந்தன்' முதல் நேற்றைய 'வெண்மணி' வரை அதுதான் கதை. ஆனால், அந்த சோக வரலாற்றுக்கு முடிவு கட்டி - வரலாறு படைக்க எழுந்துள்ளார்கள் தலித் மக்கள்... குறிப்பாகப் பெண்கள்.

■ விடியல்



அண்மையில், தஞ்சைப் பகுதியில் திருவிடைமருதூர் மற்றும் சுற்றியுள்ள பகுதியில் கூலிப் போராட்டம் நடைபெற்றது. கூலிப்போராட்டத்தை முன்னின்று நடத்திய வர்கள் தலித் பெண்கள். இப்போராட்டம் வெறும் கூலிப் போராட்டமாக மட்டும் இல்லாமல், பண்ணை ஆதிக்கம் மற்றும் அரசின் கயமைத்தனத்துக்கு எதிரான போராட்ட மாகவும் அமைந்தது.

கோலப்பன் குழு பரிந்துரைப்படி, விவசாயத் தொழிலா ளர்களுக்கான புதிய சட்டக் கூலியை அரசாங்கம் அறிவித்தது. ஆண்களுக்கு 54 ரூபாயும் (6 மணி நேரம்), பெண்களுக்கு 45 ரூபாயும் (5மணி நேரம்) என்றது அரசாணை. இப்படியாக, கூலியில் ஆண் - பெண் சமத்துவத்தைக் கொண்டு வந்துவிட்ட தாக அரசாங்கம் தம்பட்டமடித்தது. தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி, புதிய கூலி அறிவிப்பைத் தன் சாதனை என்று அறிவிக்கவும் செய்தார். ஆனால், அந்தக் கூலி உயர்வு அம் மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை.

1999ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வெளியிட்ட இந்த அரசாணையின் விவரம், மாவட்ட ஆட்சியாளர்களின் அலுவல கங்களுக்கு ஓராண்டாகியும் வந்து சேரவில்லை. இதில் ஆச்ச ரியப்பட ஒன்றும் இல்லை. 'கணினி ஆட்சி', 'காகிதமில்லாத நடைமுறை' பற்றியெல்லாம் பேசும் ஆளும் வர்க்கம், இதுவரை விவசாயிகளுக்கான கூலிச்சட்ட அரசாணையை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்குக் கூட அனுப்பி வைக்க வில்லை. பெண் தொழிலாளர்களின் தொடர்ச்சியான போராட் டம் காரணமாக - அரசாங்க ஆணை, புனித ஜார்ஜ் கோட்டை யின் இருண்ட அறைகளை விட்டு வெளியேறி கலெக்டரை அடைந்தது. இருப்பினும், அது அறிவிக் கப்படவில்லை.

'தமிழக விவசாயத் தொழிலாளர் சங்க'த்தின் கூலிப் போராட்ட நடவடிக் கைகளின் முதல் கட்டத்தின் கடைசி நட வடிக்கையாக 'வேலை நிறுத்த அறிவிப்பு பொதுமாநாடு' கடந்த ஆண்டு செப்டம்பர் 17 அன்று திருப்பனந்தாளில் நடைபெற் றது. இதையடுத்துத் தொடர்ந்த போராட்ட நடவடிக்கைகள், நிர்பந்தங்கள் காரணமாக மாவட்டஆட்சித் தலைவர், கோட்டாட்சி யர்களின் கூட்டத்தைக் கூட்டி அரசு ஆணையினை அறிவிக்க அறிவுறுத்தினார். சங்கத்தின் தொடர் போராட்ட முயற்சி களால், அரசு ஆணையை 'தண்டோரா' மூலம் அறிவிக்கும்படி செய்தது முதல்கட்ட வெற்றி.

ஆட்சியர் அனுமதி பெற்று திருவிடைமருதூர் வட்டாட் சியர் இவ்வாறு அறிவிப்பு செய்த உடனேயே, கிராம நிர்வாக அலுவலர்கள் அறிவிப்பு செய்துவிடவில்லை. சங்கத்திலுள்ள பெண் தொழிலாளர்கள் திரண்டு, கிராம நிர்வாக அலுவலர் களை நிர்பந்தித்தனர். சில இடங்களில் சுற்றிவளைத்து முற்று கையிட்டனர். சூரியனார் கோயில், மணிக்குடி, உக்கடை, கொடியாளம், வேப்பத்தூர் ஆகிய கிராமங்களில் இவ்வாறு நேரடி நடவடிக்கையில் இறங்கிய பின்னரே அதிகாரிகள் 'மைக்' பிரச்சாரம் செய்தனர். மணலூர், கஞ்சனூர் பகுதியில் சங்கத் தலைவர்களின் வற்புறுத்தலுக்குப் பிறகு அறிவிப்பு செய்யப்பட்டது. வாசல்வரை வந்த தண்ணீரை வீட்டுக்குள் கொண்டு வரத் தொழிலாளர்கள் மீண்டும் போராட வேண்டி யிருந்தது.

இந்த அறிவிப்பு செய்யப்பட்டதால், மிராசுதார்கள், அரசி யல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் செய்த பொய்ப் பிரச்சாரம் தவிடு பொடியானது. ''இது ஒன்றும் அரசு அறிவித்தது அல்ல. சங்கத்துக்காரர்களும், சங்கத்துச் சிறுக்கிகளும் கட்டிவிட்ட கதை'' என்ற அவர்களின் எதிர்ப்பிரச்சாரம் வலுவான அடியைச் சந்தித்தது. முதல் கட்டத்தில் எதிர்ப்பு ஏதும் காட்டாமல்



படிப்பகம்

www.padippakam.com



“இந்தப் போராட்டக் களத்தைப் பெண்களே முழுவதுமாக முன்னின்று நடத்தினர். ஆணாதிக்கம் மற்றும் சாதியாதிக்கம் என்ற இரட்டைச் சுமைகளை எதிர்த்த அவர்களின் போராட்டம் - முதல் கட்ட வெற்றியைப் பெற்றுள்ளது”

இருந்த மிராசுதார்கள் களத்தில் இறங்கினர். மாவட்ட ஆட்சித் தலைவர் முதல், தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் கோ.சி.மணி வீடு வரை கார்கள் முற்றுகையிட்டன. மிராசுதார்கள் ஆலோசனை கேட்டு விரைந்தனர்.

சாம, பேத, தான, தண்ட முறைகளைப் பயன்படுத்த பண்ணையார்கள் களத்தில் இறங்கினர். அரசாங்கமோ ஆணையை நடைமுறைப்படுத்துவதற்கு மாறாக அமைதி காத்தது. தொடர்ந்து பெண்கள் ஊர்க்கூட்டங்களை நடத்தினர். இதனை மய்யப்படுத்தி ஈர்ப்பை அதிகமாக்க, செப்டம்பர் 15 அன்று மாபெரும் ஊர்வலம் நடத்தப்பட்டது. 400 பெண் தொழிலாளர்களும் 200 ஆண் தொழிலாளர்களும் பேரணியில் பங்கெடுத்தனர். பேரணியின் முடிவில் தாசில்தார் அலுவலகம் முற்றுகையிடப்பட்டது.

வேலைக்கு அழைத்த மிராசுதார்களிடம் ரூபாய் 45 கூலி தருவதாக இருந்தால் வருகிறோம் என பெண் தொழிலாளர்கள் அறிவித்து விட்டனர். வெளியூரிலிருந்து ஆட்களை அழைத்து வேலை செய்து கொள்கிறோம் என அச்சுறுத்தினர். பெண்கள் அசையவில்லை. கஞ்சனூர் பண்ணையார் முருகன் காட்டமாகக் கேட்டார்: ''கலெக்டர் எங்களைக் கேட்டா உத்தரவு போட்டான். எங்கிட்ட வந்து நேரில் சொல்லட்டும், கூலி தருகிறோம்.'' இப்படி கிராமங்கள் தோறும் பண்ணையார்கள் கூலிக்கோரிக்கையை முரட்டுத்தனமாக நிராகரித்தனர்.

வெகுண்டெழுந்த தலித் பெண் தொழிலாளர்கள், செப்டம்பர் 29அன்று நடந்த விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் திருவிடைமருதூர், திருப்பானந்தாள் ஒன்றியங்களின் கூட்டுக் கூட்டம் வேலை நிறுத்த அறிவிப்பைச் செய்தது. இச்செய்தி ஏடுகளில் இடம்பெற்றது. நிலைமை இன்னும் சூடேறியது. தொழிலாளர்கள் உற்சாகத்துடன் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். இரண்டு ஒன்றியங்களில் உள்ள 45 கிராமங்களுக்கு வேலைநிறுத்தம் பரவியது. ஏறத்தாழ 10,000 ஏக்கர்களில் நடவு வேலை நின்று போனது. செப்டம்பர் 30 அன்று தொடங்கிய வேலை நிறுத்தம் அக்டோபர் 12 வரை நீடித்தது.

''நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்'' என்ற அரசியல் ஆலோசனை கிடைத்தவுடன், மிராசுதார்கள் நேரடி நடவடிக்கையில் இறங்கினர். வெளியூர் தொழிலாளர்களைக் கொண்டு வருவது, சொந்த சாதி (வன்னியர்) பெண்களை ஈடுபடுத்துவது, (தலித்) 'நாட்டாமை'கள் மூலம் அவர்கள் குடும்பப் பிரிவினரை வேலையில் ஈடுபடுத்துவது, விவசாயத் தொழிலாளர்களைக் கொண்டு வேலைசெய்வது போன்ற முயற்சிகளில் இறங்கினர். திருமங்கலக்குடி அடியாட்களைத் துணைக்கு வைத்துக் கொண்டு, சூரியனார் கோயிலில் நடவு முயற்சியில் மிராசுதார்கள் ஈடுபட்டனர்.

ஆண் தொழிலாளர்கள் தடிகளுடனும், பெண் தொழிலாளர்கள் துடைப்பங்களுடனும், மல்லிகா, சாமியம்மா, பாரதி தலைமையில் அணிவகுத்துச் சென்றனர். சூரியனார் கோவில் தொழிலாளர்களுக்கு ஆதரவாக, மணலூர் தொழிலாளர்களும் அணிவகுத்தனர். அடியாட்கள் அவசர அவசரமாகக் கரையேறி மறைந்தனர். எல்லாம் ஓய்ந்த பின்னர் போலிஸ் வந்து சேர்ந்தது. துகிலியின் அழகம்மாவும், வள்ளியும் தொழிலாளர்களுக்குத் தெம்பூட்டி, வயல்களிலிருந்து கரையேறச் செய்தனர். ஆரலூர், உக்கடை, கொடியாளம் பெண் தொழிலாளர்களும் வீடுவீடாக, வயல் வயலாக அலைந்து தொழிலாளர்களைக் கரையேற்றினர். மேற்கூறிய 45 கிராமங்களில் இதுபோன்ற அன்றாட நிகழ்ச்சிகள் அரங்கேறின.

இந்தப் போராட்டங்களில் தலித் பெண்கள் சங்கமும் விவசாயத் தொழிலாளர் சங்கமும், அதனை உருவாக்கிய அரசியல் கட்சியான சி.பி.அய். (எம்.எல்.) கட்சியும் இருந்தன. போதிய சங்க பலம், சமூக பலம் இல்லாத இடங்களில் வேலைநிறுத்தம் சில நாட்களே நீடித்தது. சில கிராமங்களில் 30ரூபாய் பெற்றுக் கொண்டு வேலைக்குத் திரும்பினர்.

தொடர்ந்து ஏறத்தாழ 45 கிராமங்களுக்கு வேலைநிறுத்தம் பரவியது. அவற்றை உள்ளூர் மட்டத்திலேயே முறியடிக்கும் அணுகுமுறையைக் கொண்டிருந்தாலும் - அனைத்து மிராசுதார்களும் ஓர் அணியாகத் திரண்டு நின்றனர். அதிகபட்சம் 5ரூபாய் மட்டுமே கூலி உயர்வு கொடுக்க முடியும் என்று முடிவெடுத்துச் செயல்படுத்த முனைந்தனர். மணலூர் ஊராட்சி மன்றத் தலைவர் தலைமையில் கூடிய மணலூர், கஞ்சனூர் மிராசுதார்கள், இம்முடிவை மாவட்டம் முழுவதும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கோரிக்கை விடுத்தனர். இந்த முயற்சியைத் தவிடுபொடியாக்கும் வகையில் சூரியனார் கோயிலில் முதன்முதலாக 45 ரூபாய் கூலிபெற்று பெண் தொழிலாளர்கள் வென்று காட்டினர்.

கோயிலில் கூட்டம் போட்டு நாட்டாமையுடன் பேசிய மிராசுதார்கள் எப்படியாவது 45 ரூபாய் கோரிக்கையை முறியடிக்க, பெருமுயற்சி எடுத்துக் கொண்டனர். 200 பெண்கள், 100 ஆண்களும் திரண்ட ஊர்க்கூட்டத்தில், ரூபாய்





படிப்பகம்

5க்கு ஒப்புக்கொள்ளுங்கள் என்று வெளிப்படையாகவே நிர்பந்தப்படுத்தினார் நாட்டாமை.

சற்றும் சளைக்காத தொழிலாளர்கள், நாட்டாமை அமைப்பை உறுதியாக ஒரே குரலில் எதிர்த்து நின்றனர். விவசாயத் தொழிலாளர் சங்கத்தையும், உழைக்கும் மக்கள் இயக்கத்தையும் ஊருக்கு எதிராக நிறுத்த முயன்ற நாட்டாமையின் முயற்சியைப் பெண்களும் ஆண்களும் ஆவேசமாக அடித்து நொறுக்கினர். மிராசுதார்களின் ஏஜெண்டான நாட்டாமை தோல்வியை ஒப்புக்கொண்டு கூட்டத்தைக் கலைத்து விட்டார்.

வேலைநிறுத்தம் வெற்றியில் முடிந்தது. பெண்கள் 45 ரூபாய் கூலியைப் பெற்றனர். திருவிடைமருதூர் வட்ட அலுவலகம் முன்பு போக்குவரத்தைத் தடைசெய்த போராட்டம் 3 மணி நேரம் நடந்தது. மறுநாளே முத்தரப்பு பேச்சுவார்த்தைக்கு தாசில்தார் ஏற்பாடு செய்தார். இந்தப் பேச்சு வார்த்தையில், சுமார் 40 கிராமங்களின் மிராசுதார்கள் கலந்து கொண்டனர். ஏற்கெனவே நடந்த கூட்டங்கள் போலில்லாத இந்தக் கூட்டம் - உக்கிரமானதாகவும், கடும் இறுக்கம் கொண்டதாகவும் இருந்தது.





*'கணினி ஆட்சி', 'காகிதமில்லாத நடைமுறை' பற்றியெல்லாம் பேசும் ஆளும் வர்க்கம், இதுவரை விவசாயிகளுக்கான கூலிச்சட்ட அரசாணையை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்குக் கூட அனுப்பி வைக்கவில்லை.*

'கூலியை நடைமுறைப்படுத்த மறுப்பது சட்டவிரோதம்' என்றும் சங்கத்தைப் புறக்கணிக்காது பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறும் அதிகாரி வலியுறுத்தினார். இதன் விளைவாக, சில மிராசுதார்கள் 'வெளிநடப்பு'ச் செய்தனர். உள்ளூர் பலத்தின் அடிப்படையில் தீர்த்துக் கொள்ளுங்கள் என்று அதிகாரி விட்டுவிட்டார் என்பதே உண்மை. ஆனால், மிராசுதார்களுக்கு விட்டுக்கொடுக்காமல் போராட்டத்தைத் தொடரவேண்டும் என்ற வைராக்கியத்தைக் கொண்டுவர இக்கூட்டம் உதவியது.

மணலூர், கஞ்சனூரில் போராட்டம் மேலும் உக்கிரமடைந்தது. பெண் தொழிலாளர்களுக்கு ஆதரவாக ஆண் தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்தில் குதித்தனர். தலித் விவசாயத் தொழிலாளர்கள் மீது மிராசுதார்கள் ஊர்க்கட்டுப்பாட்டைக் கொண்டுவந்தனர். நிலைமை கைமீறிப் போகாமலிருக்க போலிஸ் நிறுத்தப்பட்டது. கஞ்சனூர், மணலூர் திருமாந்துறையும் ஓரணியில் நின்றதால் மிராசுதார்களால் போராட்டத்தை உடைக்க முடியவில்லை. வேலைநிறுத்தம் நடைபெற்ற ஒட்டுமொத்த பகுதிக்கும் தலைமை கொடுத்தது இங்குள்ள (மணலூர், கஞ்சனூர்) மிராசுதார்களே. அதிலும் அவர்கள் தி.மு.க., பா.ம.க., அ.தி.மு.க., ஒன்றியச் செயலாளர்களும் ஆவர்.

மணலூர், கஞ்சனூர், திருமாந்துறை கிராம மக்கள் உறுதியான ஒற்றுமை அடிப்படையிலான எதிர்ப்பில் ஊன்றி நின்றனர். நிர்வாகத்தின் மீது செலுத்தி வந்த தொடர் அழுத்தமும் சேர்ந்து இறுதியாக மணலூர், கஞ்சனூர் மிராசுதார்களை இறங்கிவரச் செய்தது. கும்பகோணம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மாலை 7 மணிக்குத் துவங்கி நள்ளிரவையும் தாண்டி பேச்சுவார்த்தை நடைபெற்றது.

தொழிலாளர் பிரதிநிதிகள் மற்றும் மிராசுதார் பிரதிநிதிகளைத் தனித்தனியாக சந்தித்துப் பேசினார் அதிகாரி. அங்கும் கூட 35ரூபாய்க்கு மேல் கொடுக்க முடியாது என்பதில் மிராசுதார்கள் உடும்புப் பிடியாக இருந்தனர். 35ரூபாய் கூலியை சங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனாலும், தொழிலாளர்களின் வாழ்க்கைச் சிக்கலைக் கருத்தில் கொண்டு தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்புவார்கள். 45ரூபாய்க்கான போராட்டம் தொடரும் என்று சங்கம் அறிவித்தது. 15 நாள் வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்தது.

இந்தப் போராட்டக் களத்தைப் பெண்களே முழுவதும் முன்னின்று நடத்தினர். ஆணாதிக்கம் மற்றும் சாதியாதிக்கம் என்ற இரட்டைச் சுமைகளை எதிர்த்த அவர்களின் போராட்டம், முதல் கட்ட வெற்றியைப் பெற்றுள்ளது என்று சொல்லலாம். ஆனால், அவர்கள் சென்று சேர வேண்டிய தூரம் இன்னும் அதிகம் உள்ளது.

பண்ணைகளின் ஆதிக்கத்தை மட்டுமல்ல; சொந்த ஆண்களின் ஆதிக்கத்தையும் அவர்கள் எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது. கூலிப் போராட்டத்திற்காக மக்களைத் தயார் செய்ய, தலித் பெண்களின் முன்னணிப் படையொன்று அன்றாடம் வேலை செய்தது. வயலுக்குச் சென்று வேலையை முடித்துவிட்டுத் திரும்பிய பெண்கள், உணவு சமைத்து விட்டு மறுபடியும் கிராமங்களுக்கு அணிகளாகச் சென்றனர். நள்ளிரவு வரை பிரச்சாரம் செய்து அமைப்பாக்கிவிட்டு வீடு திரும்புவர். சங்கத்தைச் சேர்ந்த முன்னோடி ஆண்கள் அவர்களுக்குத் துணையாக இருந்தனர் என்றாலும் வீடுகளில் பூகம்பம் வெடிக்காமல் இல்லை.

ஒவ்வொரு முறை எழும்போதும் அடித்து வீழ்த்தப்படுவதுபோல இனியும் நடக்கலாம். கீழவெண்மணி அதனைத்தான் அடையாளப்படுத்தியது. எது நடந்தாலும் ஆயிரம் காலத்து அடிமை இருளை நிதானமாகவும், துணிவாகவும் சந்தித்து வீழ்த்த தலித் பெண்கள் தயாராகி விட்டார்கள். அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ●

# சாமியாராக ஆசையா?




நூல் : **அறிவியலா? அருஞ்செயலா?**
ஆசிரியர் : பி.பிரேமானந்து
பக்கம் : 208 விலை : 50
குலூர் வெளியீடு
8, பால இல்லம், நஞ்சப்பா குடியமைப்பு, குலூர்
கோவை - 641 402

நடசாமியார், நரபலி சாமியார், கஞ்சா சாமியார், ஆபாச சாமியார், ஆயுதக் கடத்தல் சாமியார்.... இப்படி டஜன் கணக்கில் இருக்கும் சாமிகளும், சாமிகளின் பிரதிநிதிகளாக இருக்கும் சாமியார்களும் இன்னபிற பில்லி, சூன்யங்களும் சித்து வேலைகளும், மாய மந்திரங்களும் மக்களைப் பிடித்து ஆட்டுகின்றன.

திருநீரை வரவழைக்கும் சாய்பாபா, வாஜ்பேயியை ஆரகட்டித் தழுவி ஆசீர்வாதம் தரும் அமிர்தானந்த மாயி, ஏசுவின் பெயரால் 'பிசினஸ்' செய்யும் தினகரன், பெர்க்மான்ஸ் மற்றும் முசல்மான்கள் ஆகியோர்களின் பேச்சுக்கும் செயலுக்கும் கூட்டம் கூடி ஆர்ப்பரிக்கும் மக்கள் - ''எப்பவாவது கடவுள் வானத்திலிருந்து குதித்து, நம் கூரையில் விழுந்து எதையாவது தரமாட்டாரா?'' என்று ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். அந்தளவுக்கு மேற்படி ஆசாமிகள் மக்களை ஏங்க வைத்து ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

இதையெல்லாம் பொய் - பித்தலாட்டம் என்று எடுத்துச் சொன்னால், 'எங்கே நீ திருநீரை வரவை', 'நெருப்பில் நட', 'லிங்கத்தை வாந்தி எடு' என்று 'உதார்' விடுவார்கள். ஆனால், அந்த 'உதார்'களுக்கெல்லாம் பதிலடி தருகிறார், கேரளத்து பகுத்தறிவாளர் பிரேமானந்து.

'அறிவியலா? அருஞ்செயலா?' என்கிற இந்தத் தொகுப்பில், சாமியார்களின் தெய்வீக மோசடியை அம்பலப்படுத்துகிறார். 150 விதமான மந்திர சக்தி மூலம் போலிச்சாமியார்களுக்கு சவால் விடுகிறார்.



வாஜ்பேயியை முத்தமிடும் மாயி

சாயிபாபா எப்படி திருநீறு வரவழைக்கிறார், தீப்பெட்டியை எப்படி தோன்றச் செய்து மறையச் செய்வது, கைகளில் எப்படிக் கற்பூரம் கொளுத்துவது, கொதிக்கும் எண்ணெயில் கைகளை முக்குவது, முதுகில் கொக்கி மாட்டி எப்படித் தேர் இழுப்பது, இன்னும் இது போன்ற எண்ணற்ற 'மோடி மஸ்தான்' வேலைகளை அப்படியே செய்து காட்டுகிறார் நூலாசிரியர்.

புத்தகத்தை முழுக்கப் படித்து முடித்தவுடன் மதம் சம்பந்தமாக நமக்கே ஒரு விதமான புரிதல் வரும். ஒவ்வொரு அற்புத செயலுக்கும் செயல் விளக்கம் தந்து - மோசடியை அம்பலப் படுத்துகிறார்.

இலங்கை பகுத்தறிவாளர் டாக்டர் கோவூரின் மாணவரான அய்யா பிரேமானந்து, பாமரருக்கு எளிதில் புரியும் வகையில் இந்நூலைத் தந்திருக்கிறார். இதன் தமிழாக்கத்தைத் தந்திருக்கும் சிங்க ராயரையும் கண்டிப்பாகப் பாராட்டியாக வேண்டும்.

இந்தப் புத்தகத்தைப் படித்து முடிக்கும் ஒருவர், கை தேர்ந்த சாமியாராகவோ மந்திரவாதியாகவோ ஆகலாம். அல்லது ஒரு நல்ல நாத்திகவாதியாகி - மக்களைத் தெளிவிக்கலாம். நீங்களும் படியுங்கள்.

\- மண்ணாங்கட்டி

## சி • ந் • தி • க் • க – செ • ய • ல் • ப • ட •

- நூல் : **நிதிகளின் உலக மயமாக்கம் பற்றிய மக்கள் கையேடு**
  ஆசிரியர் : கவால்ஜித் சிங்
  வெளியீடு : பூவுலகின் நண்பர்கள், 306/6, பெல்லி ஏரியா அண்ணா நகர் (மேற்கு) சென்னை - 600 040
  பக்கம் : 172 விலை : 50
- நூல் : **நாம் இந்துக்கள் அல்லர் - பவுத்தர்கள்**
  ஆசிரியர் : ஏ.பி. வள்ளிநாயகம்
  வெளியீடு : ஜீவசகாப்தன் பதிப்பகம், அலமேலு நகர் ச. ஆலங்குளம், மதுரை - 625 017
  பக்கம் : 44 விலை : 13
- நூல் : **உயிரோடு உலாவ** - இந்தியப் பெண்களின் வாழ்க்கைப் போராட்டமும் சுற்றுப்புறச் சூழலும்
  ஆசிரியர் : வந்தனா சிவா
  வெளியீடு : பூவுலகின் நண்பர்கள்
  பக்கம் : 176 விலை : 60



www.padippakam.com



# துரும்பையாவது அசைக்கக் கற்றுக் கொள்ளுங்கள்

எஸ்.வி. ராஜதுரை

*'தலித் முரசு' மே 2001 இதழில், புலேந்திரன் மற்றும் அ.மார்க்ஸ் ஆகியோர் எழுதியுள்ள இரு கட்டுரைகளுக்கான ஒரு எதிர்வினை இது.*

ஜார்ஜ் புஷ் (இன்றைய 'புஷ்'இன் தந்தை) அமெரிக்க அதிபராக இருந்தபோது, கிளாரன்ஸ் தாமஸ் என்ற கறுப்பரை - அமெரிக்க உச்சநீதி மன்றத்தில் நீதிபதியாக அமர்த்தினார். அமெரிக்க உச்சநீதி மன்ற நீதிபதிப் பதவி அமெரிக்கக் கறுப்பரொருவருக்குக் கிடைத்தது அதுதான் முதல் முறை. ஜார்ஜ் புஷ் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர். அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சிக்குத்தான் ஒப்பீட்டளவில் கறுப்பர்களின் ஆதரவு அதிகம். எனவே, கறுப்பர்களின் நலனில் தனக்குத்தான் அதிக அக்கறை என்று காட்டிக் கொள்ள முடிவு செய்தது குடியரசுக் கட்சி.

கிளாரன்ஸ் தாமஸ், உச்சநீதிமன்ற நீதிபதியாக அமர்த்தப்பட்டதால், ஜனநாயகக் கட்சிக்காரர்களின் வாயை மட்டு மல்ல; அமெரிக்க ஆளுங்கட்சிகளின் வெளிப்படையான மற்றும் மறைமுகமான இனவாதத்தை விமர்சித்து வந்த கறுப்பினத் தலைவர்கள், அவர்களது இயக்கங்கள் ஆகியனவற்றின் வாயையும் ஓரளவு அடக்க முடிந்தது, ஜார்ஜ் புஷ்ஷால்.

> **வெள்ளையரால் தமக்கு ஏற்படுத்தப்பட்ட அரசியல், பொருளியல், பண்பாட்டு, பாலியல் இடர்ப்பாடுகளை எதிர்ப்பதற்கு 'கறுப்பர்களாக' ஒன்று திரண்டவர்கள், தங்களது சமூகத்திற்குள்ளாகவே உருவாகியுள்ள இத்தகைய இடர்ப்பாடுகளையும் அநீதிகளையும் களைந்தெறிய முன்வரவில்லை என்றால், ஒருபுறம் சமூக நீதியைப் பேசிக் கொண்டு மறுபுறம் சமூக அநீதியை நிலைக்கச் செய்து விடுவர்.**

கிளாரன்ஸ் தாமஸ், அமெரிக்க மாகாணமொன்றில் நீதிபதியாகப் பணியாற்றி வந்தபோது, அவரது செயற்பாடுகள் பாராட்டத் தக்கவையாக இருக்கவில்லை. ஆயிரக்கணக்கான வழக்குகளை முடிக்காமலேயே கிடப்பில் போட்டு வைத்திருந்தார். வெள்ளையர்களின் இனவாதத்திற்கு எதிராக அவர் போராடி வந்தவரும் அல்லர். சட்டத்துறையில் பெரும் வல்லுநரும் அல்ல. அவரது ஒரே சாதனை, வெள்ளை இனவாதம் மிகுந்த அமெரிக்கத் தென்மாகாணமொன்றில் பிறந்து வளர்ந்து, வெள்ளையர்களுடன் போட்டி போட்டுச் சட்டப் படிப்பு படித்து முடித்தது மட்டும்தான்.

அவர் உச்சநீதிமன்ற நீதிபதி பதவி ஏற்றுக் கொண்ட பிறகு, முன்பு அவரிடம் உதவியாளராக இருந்துவந்த அனிதா என்ற கறுப்பினப் பெண், கிளாரன்ஸ் தாமஸ் தன்னை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளை எடுத்துக்கூறி, உயர் பதவி எதற்கும் தாமஸ் தகுதியற்றவர் என வழக்குத் தொடர்ந்தார்.

அனிதா விவகாரத்தில் மிகப் பெரும்பாலான கறுப்பினத் தலைவர்கள் மவுனம் சாதித்தனர். ''முதன்முறையாக ஒரு கறுப்பர் உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்தச் சமயத்தில் அனிதா வழக்குத் தொடர்ந்திருப்பது, கறுப்பின மக்களின் நலன்களுக்கும் கவுரவத்திற்கும் ஊறு ஏற்படுத்திவிடும். இதை வெள்ளையர்கள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வர்'' என்பது அவர்களது மவுனத்திற்குப் பின்னால் இருந்த தர்க்க நியாயம்.

இந்த மவுனத்தை உடைக்கத் தீர்மானித்தார் - அமெரிக்காவின் புகழ் பெற்ற கறுப்பினச் சிந்தனையாளர்களிலொருவரான கார்னெல் வெஸ்ட். அவர் முன்வைத்த வாதங்களின் சுருக்கம் கீழ் வருமாறு: வரலாற்றுரீதியாகவே அமெரிக்கக் கறுப்பர்கள் மீதான வெள்ளையரின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு, பாலியல் ஆதிக்கமும் சுரண்டலும் வெள்ளை இனவாதமாகவும் இனவெறியாகவும் வெளிப்பட்டு வந்ததால் - அமெரிக்கச் சமுதாயம் 'வெள்ளையர்', 'கறுப்பர்' எனப் பொதுவாகப் பிளவுபட்டு நிற்க வேண்டியது தவிர்க்க முடியாததாயிற்று.

எனவே, ஒடுக்கப்பட்ட மக்கள் 'கறுப்பர்' என்ற பொதுவான வகையினமாக ஒன்று திரண்டு - வெள்ளையர்ஆதிக்கத்திற்கு முகம் கொடுக்க வேண்டியதும் தவிர்க்க முடியாததாயிற்று. எனினும், கறுப்பர்கள் அனைவரும் ஒரேபடித்தானவர்கள் அல்லர். வரலாற்று வளர்ச்சியில் அவர்களுக்கிடையிலும் அரசியல், பண்பாட்டு வேறுபாடுகள் மட்டுமல்ல, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் உருவாகி வளர்ந்துள்ளன. ஆணாதிக்க மனப்பான்மை என்பது அவர்களிடையேயும் ஆழமாக வேரூன்றியுள்ளது.

எனவே, வெள்ளையரால் தமக்கு ஏற்படுத்தப்பட்ட அரசியல், பொருளியல், பண்பாட்டு, பாலியல் இடர்ப்பாடுகளை எதிர்ப்பதற்கு 'கறுப்பர்களாக' ஒன்று திரண்டவர்கள், தங்களது சமூகத்திற்குள்ளாகவே உருவாகியுள்ள இத்தகைய இடர்ப்பாடுகளையும் அநீதிகளையும் களைந்தெறிய முன்வரவில்லை என்றால், ஒருபுறம் சமூக நீதியைப் பேசிக் கொண்டு மறுபுறம் சமூக அநீதியை நிலைக்கச் செய்து விடுவர்.

மேலும், அமெரிக்காவின் சுரண்டும் பூர்ஷ்வா வர்க்கம், தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் முயற்சியில் - கறுப்பின முதலாளிகளையும் கறுப்பின மேட்டுக்குடியினரையும் உருவாக்கவே விரும்புகிறது. அவர்களைத் தனது வட்டத்திற்குள் உள்ளிழுத்துக் கொள்வதன் மூலம், ஏதோ கறுப்பின மக்களுக்கும் சமத்துவம் வழங்கப்படுவது போன்ற எண்ணத்தைக் குறியீட்டுத் தளத்தில் உருவாக்குகிறது. எனவே, இப்படிப்பட்ட ஒரு சூழலில் 'வெள்ளையர் - கறுப்பர்' என்ற பொத்தாம் பொதுவான பாகுபாட்டுடன் நிறுத்திக் கொள்வது, இடறிவிழச் செய்யும் படுகுழிகளைப் பார்க்க முடியாது செய்துவிடும்.

இத்தகைய புரிதல், அண்ணல் அம்பேத்கரிடமும் பெரியாரிடமும் இருந்தது. தலித் மக்களின் விடுதலையை முதன்மைப்படுத்திய அம்பேத்கர், தலித் மக்களிடையேயும் உள்ள சாதி ஏற்றத் தாழ்வுகள், தீண்டாமை ஆகியனவற்றைக் கண்டனம்



படிப்பகம்

www.padippakam.com

செய்யத் தவறவில்லை. சமூகநீதி என்று சொல்லப்படும் இட ஒதுக்கீடு முதலிய வற்றை சோசலிசம் எனப்படும் பொருளா தாரப் பகிர்வு நீதியுடன் இணைக்கத் தவற வில்லை. தலித் மக்களின் தனிவாக்காளர் தொகுதிக் கோரிக்கையை எதிர்த்த காந்தி யார், மூஞ்செ போன்றோருடன் எம்.சி.ராஜா சேர்ந்து கொண்டபோது, ராஜா ஒரு தலித்



என்பதற்காக அம்பேத்கர் அவரை விட்டு வைக்கவில்லை.

''பார்ப்பனர்கள் நமக்குச் செய்யும் கொடுமையைவிட, நாம் தாழ்த்தப்பட்டோ ருக்குச் செய்யும் கொடுமைகள் அதிகம்'' என்று பெரியாரும் சுயமரியாதை இயக்க முன்னணி வீரர்களும் சூத்திரர்களிடம் பல முறை கூறியுள்ளனர். பார்ப்பனீயத்தின் முதன்மை முகவர்களாகப் பார்ப்பனர்கள் இருந்துவந்த போதிலும் அரசியல், பொருளாதார, சமூக ஒடுக்குமுறைகளைப் பாதுகாக்கும் கருத்தியல் - எல்லா மட்டங்க ளிலும் நீக்கமற நிறைந்திருப்பதை - அம்பேத்கரும் பெரியாரும் இடைவிடாது நினைவூட்டி வந்தனர். சமூக நீதி அல்லது பொது உரிமை என்பதை பொதுவுடைமை என்ற இலக்கை அடைவதற்கான இன்றியமை யாத வழிமுறையாகவே பெரியார் கருதினார்.

இன்று, பார்ப்பனர் - பார்ப்பனரல்லா தார் என்ற பாகுபாடு மிகவும் எளிமைப் படுத்தப்படுகிறது. இதன் மற்றொரு வடிவம் தான் 'சமயச்சார்பான அணி', 'சமயச் சார்பற்ற அணி' என்ற பாகுபாடும். ஒரு அணிக்குப் பார்ப்பனரல்லாதார் - அதிலும் குறிப்பாகப் பார்ப்பனரல்லாதார் இயக்கத் தைச் சேர்ந்தவர் தலைமை தாங்குகிறார் - என்பதனாலேயே அவரது முதுகில் ஏறி உட்கார்ந்து கொண்டிருக்கும் இந்துத்துவமும், ஆதிக்க சாதிப் பிரிவினர்களைத் திருப்தி செய்வதற்காக இத்தனைக் காலம் அவர் பின்பற்றி வந்த தலித் விரோத நிலைப்பாடு களும் - உலகமயமாக்கலை அவர் உற்சாகத் தோடு நடைமுறைப்படுத்திய வேகமும் நீங்கி விடுகின்றன போலும்.

அதே போலவே, 'சமயச் சார்பற்ற அணி' என்ற மந்திரச் சொற்கள் மூலம் ஜெய லலிதா, லல்லுபிரசாத் யாதவ் போன்றோ ரின் தலித் விரோத மனப்பான்மை, அவர் கள் ஊக்குவிக்கும் மூடநம்பிக்கைச் சடங்கு கள், உலக முதலாளியத்திற்கும் உள்ளூர்க் கொடியவர்களுக்கும் அவர் கள் கொடுக்கும் பாதுகாப்புகள், ஜனநா யக மரபுகளை அலட்சியப்படுத்தும் அகம்பாவம் ஆகியனவற்றுக்குக் கருத் தியல் திரை போர்த்தப்படுகிறது. பொதுச் சொத்துகளைக் கொள்ளையடிப்பவர் கள், ஊழல் பெருச்சாளிகள் 'மதச் சார் பற்ற புனித நீரால்' தூய்மைப்படுத்தப் படுகின்றனர்.

இத்தகைய எளிமைப்படுத்தல் களின் மற்றுமொரு வெளிப்பாடே கெயில் ஓம்வெத் - மேதா பட்கர் என்ற பாகுபாடும் ஆகும். நர்மதா அணைத் திட்டத்தினை எதிர்த்துப் போராடுபவர் கள், அணைகள் எதுவும் வேண்டாம் என்று கூறுவதில்லை. எந்தெந்த இடங் களில் எத்தகைய அணைகள் கட்ட வேண்டும்; எங்கு அணைகள் ஏதும் இல்லா மலேயே நீரைப் பயன்படுத்த முடியும் என்ப தற்கான அறிவியல் பூர்வமான மாற்றுத் திட்டங்கள் அவர்களிடம் உள்ளன.

அரசாங்கம் வகுத்துள்ள நர்மதா திட்டம் - பல்லாயிரக்கணக்கான பழங்குடி மக்களை, கிராமப்புற ஏழை மக்களை அவர் களது பாரம்பரிய வாழிடங்களிலிருந்து அகற்றுகிறது. எதிர்வரும் தலைமுறையி னரின் இருப்புக்கு அச்சுறுத்தலாக விளங்கப் போகும் சூழலில் சிக்கல்களை உருவாக்கு கிறது; உலக வங்கி, பன்னாட்டு நிதியம், உள்நாட்டுக் காண்ட்ராக்டர்கள் ஆகியோ ரைக் கொழுக்க வைக்கிறது. மேதா பட்கர் ஒரு பார்ப்பனராக இருக்கலாம். அதன் காரணமாகவே அவர் குவிமய்யப்படுத்தும் கோரிக்கைகள், பார்ப்பனீய நலன்களுக் கானவையாகாது.

கெயில் ஓம்வெத் சிறிது காலத்திற்கு முன்பு இந்திய மக்களை 'இந்தியா - பாரத்' என்று எளிமைப்படுத்தப்பட்ட பாகுபாடு செய்தார். 'நகர்ப்புற இந்தியா', 'கிராமப்புற பாரத்'தைச் சுரண்டுகிறது என்று விளக்கம் கூறினார். ஏதோ நகர்ப்புறமும் கிராமப்புற மும் தமக்குள்ளேயே சாதிய, வர்க்க ஏற்றத் தாழ்வுகள் ஏதுமற்ற ஒரேபடித்தான அலகு களாக இருப்பதுபோல. அதேபோலவே, 'உலகமயமாக்கலும்' புதிய பொருளாதாரக் கொள்கையும் கிராமப்புற ஆந்திர விவசாயி களுக்கு மட்டுமல்லாது, தலித் மக்களுக்கும் 'தடையற்ற சந்தையில்' புதிய வாய்ப்புகளை வழங்கும் என்ற கோட்பாட்டையும் முன் வைத்தார். 'உலக மயமாக்கலுக்கு' வக்கா லத்து வாங்கும் பொருட்டு கருத்துகளை நேர்மையீனத்துடன் திரித்துக் கூறினார்.

கெயில் ஓம்வெத், புலே - அம்பேத்கர் மரபின் முக்கியத்துவத்தை உலகறியச் செய்த வர், பார்ப்பன எதிர்ப்பாளர் என்பதாலேயே அவரது தவறான நிலைப்பாடுகளையும் மோசமான கருத்துகளையும் நாம் ஆதரிக்க வேண்டியதில்லை.

தெஹ்ரி அணை கட்டப்படும் இமய மலைப் பகுதியில் காடுகள், பசுமைகள் எல்லாம் என்றோ அழிக்கப்பட்டு விட்டன. அப்பகுதி இன்று பெரும் தூசி மண்டலமாகி விட்டது. மழைக்கும் ஆற்றுநீர்ப் பெருக்கத் திற்குமான ஆதாரங்கள் இவ்வாறு சுருங்கி விட்டன. அணை கட்டப்படும் பகுதி, நில அதிர்வு மண்டலமொன்றில் உள்ளது. இந்த அணையின் காரணமாக, உத்திராஞ்சலி லுள்ள 'மேல்சாதிக்காரர்கள்' மட்டுமின்றி சமவெளிகளிலுள்ள லட்சக்கணக்கான 'கீழ் சாதி'விவசாயிகளும் கிராமவாசிகளும் பாதிக்கப்படுவர்.

சுந்தர்லால் பகுகுணா, ஒரு பார்ப்பனர். அவர் அரசியல் பார்வையற்ற வெகுளியா கவோ அல்லது உணர்வு பூர்வமான 'இந்துத் துவ' ஆதரவாளராகவோ இருக்கலாம். ஆனால், முலாயம் சிங் யாதவ், வீராங் கனை மாயாவதி மற்றும் இடதுசாரிகள் யாரும் பார்க்கத் தவறிய, பார்க்க விரும்

***தலித் மக்களின் விடுதலையை முதன்மைப்படுத்திய அம்பேத்கர், தலித் மக்களிடையேயும் உள்ள சாதி ஏற்றத் தாழ்வுகள், தீண்டாமை ஆகியனவற்றைக் கண்டனம் செய்யத் தவறவில்லை. சமூகநீதி என்று சொல்லப்படும் இட ஒதுக்கீடு முதலியவற்றை சோசலிசம் எனப்படும் - பொருளா தாரப் பகிர்வு நீதியுடன் இணைக்கத் தவறவில்லை.***

பாத, நீண்டகாலக் கண்ணோட்டத்துடன் பார்க்கையில் - சூத்திரர்கள், தலித் மக்கள் ஆகியோரின் இருப்புக்கே உலை வைக்கிற ஓர் பிரச்சனையைச் சரியாக அடையாளங் கண்டவர், பார்ப்பனரான பகுகுணாதான்.

தலித் இயக்கங்களும் இடதுசாரி இயக் கங்களும் சூழலியல் பிரச்சினைகளைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளும்வரை, அவற்றுக்காக ஒரு துரும்பையாவது அசைக் கக் கற்றுக் கொள்ளும் வரை, பகுகுணாக்கள் தான் அவற்றைப் பேசிவருவர்; அவற்றுக் காகச் செயல்படுவர். ●



படிப்பகம்

www.padippakam.com





# இசைஞானி பற்றிய ஓர் இசை அலசல்

3

■ டாக்டர் கே.ஏ. குணசேகரன்

கலைப்படைப்பில் தனிமங்களின் பங்கீட்டளவு சீராக அமைந்திருக்க வேண்டும். திரைப்படம் என்பது, பேசும் மொழியான கதை, வசனம் வழியாகவும் - பேசாத மொழியான இசை மற்றும் ஓசை வழியாகவும் உள்ள பல தனிமங்களின் வழங்கல் நிலைகளின் தகவுப் பொருத்தப்பாட்டில் அமைகிறது. இசை மேதை இளையராஜா, பேசும் மொழி, பேசாத மொழி எனும் இரு நிலைகளில் தன் ஆளுமையை திரைப்படத்துறையில் பதித்துள்ளார்.

பாடல் என்பது பேசுமொழி, இசை என்பது பேசாத மொழி. திரை இசைப் பாடல் இல்லாத திரைப்படங்கள் நம் தமிழ்ச் சூழலில் - ஏன் இந்தியச் சூழலில் மக்களிடம் வெற்றி பெற முடியவில்லை. பேசும் மொழி - பேசாத மொழி எனும் இருநிலைகளில் இசைஞானி சாதனை செய்துள்ளார்.

இசையை ஒருவர் சொந்தமாக உருவாக்கலாம்; சொந்தமாகப் பாடலை இயற்றலாம்; பாடலாம். நாட்டுப்புற உழைக்கும் மக்கள் பலரும் ஏடறியாதவர்கள், எழுத்தறியாதவர்கள். இருப்பினும் இசைத்திறனும், பாட்டுத் திறனும் கொண்டவர்களாக உள்ளனர்.

ஆனால், குறிப்பிட்ட ஒரு சூழலுக்குத் தக்க இசை, குறிப்பிட்ட ஒரு சூழலுக்குத் தக்க பாடல் செய்யும் திறன் என்பது படித்தவருக்கோ - படிக்காதவருக்கோ எளிதில் வந்துவிடக்கூடியதல்ல. படைப்புத் திறன் என்பது, குறிப்பாக திரைக்கதைப் போக்கு மற்றும் கதாபாத்திரங்கள் சந்திப்பு, பார்வையாளர்களின் ரசனை முறைகள் போன்ற பல்வேறு தளங்களில் தொழிற்படுவது, திரைப்படத்தில் ஒரு பெரிய சவாலை சந்திக்கக் கூடிய முறையாகும்.

திரை இசை அமைப்பாளன், பரந்துபட்ட அறிவாற்றல் உள்ளவனாக இருந்தால் மட்டுமே - மேற்சுட்டிய சவாலை எளிதாக சந்திக்க முடியும். திரை இசையமைப்பாளன், கீழ்க்கண்டத் தனிமங்களை ஆழ்ந்தறிவதோடு குறிப்பிட்ட சூழலுக்குப் பயன்படுத்தக் கூடிய திறன் கொண்டவனாகவும் இருக்க வேண்டும்.

• Highlight the Action • Highlight the Mood • Highlight in interpretation • Prove the period • Show the time • Fill up the Gap • Establish the characters • Remaining the events • Believe the set design

திரைப்படத்தில் நடிப்பு மொழியை நடிகன் எவ்வாறு பயன்படுத்துகிறான் என்ற இலக்கண விதிமுறைகளை இசையமைப்பாளர் நன்கு அறிந்தவராக இருத்தல் வேண்டும். திரைப்படத்தின் கதையோட்டம் எவ்விதம் நகர்த்தப்பட்டுள்ளது; எவ்விதம் கதை சொல்லப்படுகிறது என்பது குறித்த ஞானம், மிகுந்த கலை நுட்பத்தோடு உணர்ந்து கொண்டவராக இசையமைப்பாளர் விளங்க வேண்டும். கதையோட்டம் செல்லும் போக்கில் ரசிகர்களின் மன உணர்வோட்டம் எவ்வாறு ஒத்திசைந்து செல்கிறது என்பது அறி யாமல் போனால், இசையமைப்பாளரால் செவ்வனே இசைய மைத்து வெற்றிகாண முடியாது.

திரைப்பட இயக்குநர், திரைக் கதையில் எக்கருத்தை வலியுறுத்த விரும்புகிறார்; திரைக்கதை வசனம் எழுதிய கதாசிரிய எக்கருத்தை வலியுறுத்த விரும்புகிறார் என்பதை இசையமைப்பாளர் புரிந்து கொண்டால் மட்டுமே - வலியுறுத்த விரும்பும் மய்ய கருத்தினை வளர்த்தெடுக்கும் போக்கில் - இசைமொழிவழியே இசையமைப்பாளர் தனது பங்களிப்பைச் செய்ய முடியும்.

திரைக்கதை வசனம் எழுதியவர், ஒரு கருத்தை மய்யப்படுத்



படிப்பகம்

www.padippakam.com

வெளிப்படுத்த முயற்சித்திருக்கலாம். திரைப்பட இயக்குநர் தனது கருத்தை முன்னிறுத்தி ரசிகர்களிடையே பதிவு செய்ய விரும்பியிருக்கலாம். இவ்விருவரையும் கடந்து இசையமைப்பாளர் தன் கருத்தை வலியுறுத்த விரும்பலாம். அதைச் செய்ய, இசையை / ஓசையை வலுவானதொரு மொழியாகப் பயன்படுத்தலாம். இவ்வாறு திறம்படச் செய்ய, இசையமைப்பாளர் மிகுந்த ஞானம் கொண்டவராக இருத்தல் வேண்டும். வாழ்க்கைத்தரம், சாதி, மதம், கலாச்சாரம், வட்டாரத்தன்மை, வட்டார மொழி நடை, வட்டார அரசியல், மக்களின் உளவியல் மற்றும் பிரச்சினைகளுக்காட்பட்ட உணர்வோட்ட ஓட்டத்தில் ஒன்றிணைபவர்களாக அமைவர்.

திரைக்கதைகளைக் காட்சிப் படுத்துவதில் இடைவெளிகள் இருப்பது தவிர்க்க இயலாதது. சிலவேளைகளில், கால இடைவெளிகள் வழியே முக்கியமான கருத்தை வெளிப்படுத்த இயக்குநர் திட்டமிட்டிருக்கலாம். ஏன் இந்த இடத்தில் இடைவெளி உள்ளது. எதற்காக இந்த இடைவெளி, உள்ளது; இரு நிகழ்வுகளுக்கிடையே இருக்கும் இந்த இடைவெளி எக்கருத்தை ரசிகர்களுக்கு உணர்த்த வேண்டி இடம்பெற்றுள்ளது என உய்த்துணர்ந்து, அந்த இடைவெளியை இசையால் இட்டு நிரப்பிடும்போது, கதையின் உணர்வோட்டம் சிதைவுபடாமல் - ரசிகர்களுக்கு உணர்த்திட, இசையமைப்பாளர் பொறுப்புள்ளவராக அமைகிறார். இந்தவகையில் தான், ஒரு இசையமைப்பாளர் தேர்ந்த இசை மேதையாகிறார். திரைப்படம் தொடங்கி முடியும்வரை இடம் பெறும் எண்ணற்ற இடைவெளிகளை இட்டுநிரப்பும் இசையமைப்பாளர், இசையை 'அ முதல் ஃ' வரை புரிந்து பயன்படுத்தும் வல்லமை பொருந்திய இசையமைப்பாளரே திறம்படச் செய்திட முடியும்.



இசைமேதை இளையராஜா அவர்கள், திரைப்படத்துக்கு இசை அமைக்கும் திறன் பெற்றிருக்கிறார் என்று சொல்வதைவிட, திரைப்படம் இசைமொழியை ஏன் கொண்டிருக்க வேண்டும், திரைப்படத்துக்கான இசை / ஓசை / பாடல் எத்தகைய பங்கினை ஆற்ற முடியும் எனும் ஆக்கமுத்தை அறிந்துள்ளார் என்று சொல்லலாம்.

இடைவெளிகள் உணர்த்தும் மொழி முதன்மையானது. மவுன மொழி என்பது சாதாரணமானது. இசையமைப்புகள் வழியே கதையில் இடம் பெறும் பாத்திரங்களின் குணநலன்களை எடுத்துக் காட்ட முடியும். கதையில் இடம் பெறும் இவர் கதாநாயகன், இவர் வில்லன், இவர் மதிப்புக்குரியவர், இப்பாத்திரம் பொல்லாதது, இக்கதை மாந்தர் இன்ன புத்தி கொண்டவர் எனக்காட்ட முடியும். ஒரு பாத்திரம் நமக்கு படத்தில் அறிமுகமாகும்போதே இவர் சிரிப்பு நடிகர் என ரசிகர்கள் உணரத்தக்க வகையில் - இசை துரித கதியிலும், கிண்டல் தொனிபொதிந்த கீறல் ஒலிக்கற்றை கொண்ட இசைப்பு வழியேயும் உணர்த்தப்படுவதை நாம் உணர முடியும்.

இரு பாத்திரங்கள் அல்லது பல பாத்திரங்கள் ஒரு காட்சியில் பேசும்போது - ஒவ்வொரு பாத்திரமும் எவ்வாறு உடன்பட்டும், முரண்பட்டும் பேசுகிறது அல்லது பேசப் போகிறது என்பதை உணர்த்த, இசை மொழிவழியே ரசிகர்களுக்கு உணர்த்தப்படுகிறது. பல பாத்திரங்கள் சேர்ந்து வெவ்வேறு உணர்வுகள் வெளிப்படும். அப்பாத்திரங்களின் உணர்வோட்டங்கள், கதையின் ஓட்டத்திற்கு அவசியம் என்பதை உணர்ந்த மாத்திரத்தில் இசையை அழுத்தப்படுத்திப் பதிவு செய்து நம்மை கைப்பிடித்துக் கதையோடும், கதை மாந்தர்களோடும் சேர்ந்து செல்ல பயன்படுகிறது. உளவியல் அறிவுடன்கூடிய இசையமைப்பாளருக்கே - இதுபோன்ற சவால்களைச் சந்திக்கவும், வெற்றிபெறவும் முடியும்.

கடந்துபோன காலங்களையும், நினைவுகளையும், நிகழ்ச்சிகளையும், கனவுகளையும் தற்போது நினைவுபடுத்தும் முக்கியமான பணியை - இசை மொழி மிகவும் எளிதாகவும், சரியாகவும் செய்துவிடக் கூடியவல்லமையைக் கொண்டுள்ளது. சின்ன வயதில் பாடிய விளையாட்டுப்பாடல்,

'கண்ணாமூச்சி ரே ரே
காதடச்சான் ரே ரே
ரெண்டு முட்டையத்
தின்னுப் புட்டு
பஞ்சக்கார முட்டையை
புடிச்சுட்டு ஓடிவா

எனும் பாடலை இளமையைக் கடந்த வயதில் பாடும்போது, அந்தப் பசுமையான நினைவுகள் உதிக்கும். மீண்டும் இசைக்கும்போது - காலம், அப்போதைய வயது, சூழல், மனவோட்டம், நிகழ்ச்சி, வயல்கள், வரப்புகள், மனநிலை எனப்பல வகையிலும் வந்து நினைவில் முட்டி மோதும்.

ஆயிரம் மலர்களே மலருங்கள்
அமுத கீதம் பாடுங்கள்
...............................
நீங்களோ நாங்களோ
நெருங்கிவந்து சேருங்கள்

எனும் பாடலை இசையமைத்த இளையராஜா, அந்த இசையை அப்படத்தின் கதை நெடுகிலும் தேவைக்கேற்ப நினைவு படுத்தப்பட்டதை - வெற்றிபெறச் செய்த அவரின் பங்களிப்பினை மறக்க முடியாது.

திரைப்படத்தில் கோட்டை கொத்தளங்கள் காட்சி வரும்போது, அவை காட்சி சோடனைகளாகச் (Setting) செய்து வைக்கப்பட்டிருக்கும் மாயாஜாலப் படங்கள் முதல் குடும்பப் படங்கள் வரை - காட்சிசோடனைகள் செய்யப் படுவது, இயல்பு போலச் செய்தல் என்பது கலைப் படைப்பின் ஆதார நிலை அல்லவா.

'சந்திர மண்டலத்தில் காதல் செய்து களித்திருப்போம்'



படிப்பகம்

www.padippakam.com

எனும் ஒரு பாடல் வரும்போது, சந்திரனின் தோற்றத்தைப் போலியாகச் செய்து காதலர்கள் அதில் விளையாடுவது போன்ற காட்சி அமைப்பது இயல்பு. பொய்யாக, போலியாகச் செய்யப்பட்டிருக்கும் சந்திர மண்டல ஜோடனையை ரசிகர்கள் நம்ப வேண்டும். அதனை நம்பவைப்பதில் - இசைக்கும் பாடலுக்கும் மிகுந்த பங்களிப்பு உண்டு. மிகவும் துக்கம் கொண்ட ஒரு கதாபாத்திரத்தை ரசிகர்களிடம் காட்ட வேண்டி,

ஓடையிலே மண்ணெடுத்து
ஓ(ன்) உருவம் செஞ்சு வச்சேன்

எனும் ஒரு பாடலை, ஒருவர் பின்னணியில் இசைப்பதாகக் காட்சி அமைக்கும்போது அல்லது சோகமான ஒரு இசையைப் புல்லாங்குழலிலோ, நாதசுரத்திலோ, வீணையிலோ வாசிக்கும்போது கதாபாத்திரம் கொண்டுள்ள சோகத்தை ரசிகர்களிடம் காட்சியோடு இசை / பாடல் இயைந்து காட்சிப்படுத்தும்போது 'நம்பவைத்தல்' எனும் கலை எளிதாகச் செயல்படுத்தப்படுகிறது.

சிறிய பொருளைப் பெரிதாகக் காட்ட வேண்டியும், பொய்யான அல்லது போலியான ஒன்றை உயிருள்ளதாக அல்லது உண்மையாகக் காட்ட வேண்டி இசை / ஓசை / பாட்டு மிகப் பெரிய பங்களிப்பினைச் செய்கிறது.

காட்டுவழி போற பொண்ணே
கவலைப்படாதே
காட்டுப்புலி பதுங்கிருக்கும்
கவலைப்படாதே
மம்முட்டியான் பேரு சொன்னா
புலி ஒதுங்கும் பாரு...

எனும் பாடலை இசைக்கும்போது ஒரு பாத்திரத்தை ரசிகர்கள் பெரிதாக உணர்ந்து கொள்ள வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

இசைமேதை இளையராஜா, திரைப்படத்துக்கு இசை அமைக்கும் திறன் பெற்றிருக்கிறார் என்று சொல்வதைவிட திரைப்படம் இசைமொழியை ஏன் கொண்டிருக்க வேண்டும்; திரைப்படத்துக்கான இசை / ஓசை / பாடல் எத்தகைய பங்கினை ஆற்ற முடியும் எனும் ஆக்கு மத்தை அறிந்துள்ளார் என்று சொல்லலாம்.

நடிப்பு மொழி, உணர்வோட்டம், கதை ஓட்டம், கருத்தை வெளிப்படுத்தும் ஆற்றல், காலம், நேரம் இவற்றை இசைத்திறன் வழியே ரசிகர்களுக்கு உணர்த்தும் திறன், காட்சிகள், நிகழ்வுகள் இவற்றுக்கிடையே உள்ள இடைவெளிகளை இட்டு நிரப்பும் பக்குவத் திறன், நடந்ததை, நடப்பதை முன்கூட்டியே வெளிப்படுத்தவும், அழுத்தப்படுத்தி நினைவூட்டவும் இசையமைப்பாளன் கொண்டிருக்கும் நுட்பம், இல்லாததை இருப்பதாகவும், இருப்பதை இல்லாததாகவும் காட்டுவதோடு, போலியானதை உண்மையானதாகக் காட்டுவதற்கான இசையமைப்புத்திறன் என அனைத்து நிலைகளிலும் - இசைஞானி இளையராஜா ஒரு Legent ஆக - ஒரு வழிகாட்டியாக, அகராதியாக ஏனைய இசையமைப்பாளர்களுக்கு விளங்குகிறார்.

இசைஞானி, திரையிசையில் எவ்வாறு தன் அனுபவங்களை வெளிப்படுத்திச் சாதனை செய்துள்ளார் என்பதை அவர் இசையமைத்த திரைப்படங்களின் வழி நின்று எடுத்துக்காட்டி அடுத்த இதழில் விரிவாக அறியலாம். ●


## சுய தொழில் ஆலோசனைகள்

- கம்ப்யூட்டர் மய்யம் ஆரம்பிப்பது எப்படி?
- கம்ப்யூட்டர் டிடிபி (DTP) மய்யம் ஆரம்பிப்பது எப்படி?
- 'இன்டர்நெட் பிரவுசிங் சென்டர்' ஆரம்பிப்பது எப்படி?
- வங்கியில் கடன் (Loan) வாங்குவது எப்படி?
- கம்ப்யூட்டர் மய்யத்தில் அரசு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களைப் பெறுவது எப்படி?
- கம்ப்யூட்டர் துறையில் என்னென்ன படிக்க வேண்டும்?
- பள்ளிகளுக்கு இலவசமாக கம்ப்யூட்டரை வாங்குவது எப்படி?
- வெளிநாடு செல்ல எந்த கம்ப்யூட்டர் கல்வி கற்க வேண்டும்?

மேற்கண்ட கேள்விகளுக்கு, விடைகாண முயலும் இளம் தொழில் ஆர்வலர்கள், ஒரு கேள்விக்கு ரூ. 50அய் "Do well Computer Academy" என்ற பெயருக்கு டி.டி. எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

முகவரி : எம். சுப்பிரமணியன், 'டு வெல் கம்ப்யூட்டர் அகடெமி', பி.எஸ்.ஜே. காம்ப்ளக்ஸ்
4B/7 எம்.கே. ஆஸ்பத்திரி சாலை, பாளையங்கோட்டை - 627 002
தொலைபேசி : 98421-58600

(வி.ம.)




படிப்பகம்

# இரட்டை வாக்குரிமைக்கு மாற்று வழி

■ சங்கமித்திரை

பாக்டர் அம்பேத்கர் நூல் தொகுதிகளில் மிகவும் வித்தியாசமான தமிழ் நூல் தொகுதி 5 ஆகும். காரணம், இதுவரை வெளிவந்த எல்லா தொகுதிகளிலும் அண்ணலின் கருத்துகளோடு உலக அறிஞர்களின் தத்துவங்கள் விவாதிக்கப்பட்டிருக்கும். ஆனால், குறிப்பாக தன்னுடைய சக தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்த தலைவர்களின் கருத்துகள் விவாதிக்கப்படவில்லை. இந்தத் தொகுதியில் மட்டும் அண்ணல் அம்பேத்கரும், ரெட்டமலை சீனிவாசனும் சேர்ந்து தயாரித்த அரசியல் கோரிக்கை ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.

1. சட்ட மன்றங்களில் சிறப்புப் பிரதிநிதித்துவம், 2. மத்தியில் கூட்டாட்சி; அதில் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கான முறையான பங்கு 3. தாழ்த்தப்பட்டவர்கள் யார் என்பதற்கான வரையறை அளித்தல் 4. இந்தியாவில் உள்ள ஒட்டு மொத்த தாழ்த்தப்பட்ட மக்களையும் ஒரே பொதுப் பெயர் கொண்டு அழைப்பது - ஆகிய நான்கு முக்கிய செய்திகளைப் பற்றி இந்தத் தொகுதி விரிவாக அலசுகிறது. புரட்சியாளர் அம்பேத்கருடன், ரெட்டமலை சீனிவாசனும் சேர்ந்து இந்த அறிக்கையைத் தயாரித்திருப்பதால், அறிக்கை முழுக்க நிறைய முரண்பாடுகளும் கருத்து மோதல்களும் காணப்படுகின்றன.

> "தாழ்த்தப்பட்ட மக்கள் சம்பந்தப்பட்ட விவாதங்கள் சட்ட சபைகளில் எழும்போது, அங்கு எழும் கோரிக்கைகளுக்கு ஆதரவாக அல்லது எதிராக வாக்களிக்கும் உரிமையை - தாழ்த்தப்பட்ட உறுப்பினர்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும். அது சாத்தியப்படவில்லை எனில், தாழ்த்தப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கான கோரிக்கையை ஆதரிக்கப் போதுமான அளவில் இருக்கும்படி உயர்த்தப்பட வேண்டும். இவை இரண்டும் செயல்படுத்தப்பட்டால், நான் இரட்டை வாக்குரிமையைக்கூட கைவிடத் தயாராக இருக்கிறேன்."

இந்தியா முழுமைக்கும் ஒரே அளவிலான இட ஒதுக்கீட்டை தாழ்த்தப்பட்டவர்கள் பெற வேண்டும் என்பதில் அம்பேத்கர் குறியாய் இருந்தார். ஆனால், சீனிவாசனோ, தமிழகத்தில் உள்ள பறையர் சாதி மக்கள் 22 சதவிகிதம் இட ஒதுக்கீடு பெற வேண்டும் என்பதில் மட்டுமே கருத்தாய் இருந்தார். சீனிவாசனின் இந்த மாநில எல்லைப் பாசத்தால், தாழ்த்தப்பட்ட மக்களின் இட ஒதுக்கீடு நிர்ணயம் மிகவும் சிக்கல் நிறைந்ததாக மாற்றப்பட்டது.

> "பம்பாய் மாகாணத்துடனேயே சிந்து இணைந்திருக்குமா அல்லது சிந்து தனி மாகாணமாகப் பிரியுமா என்பதை ஆங்கிலேயே அரசு இன்னும் முடிவு செய்யவில்லை. பம்பாய் மாகாணத்துடனேயே சிந்து இணைந்திருந்தால், பம்பாய் வாழ் தாழ்த்தப்பட்ட மக்களின் இட ஒதுக்கீடு, 16 சதவிகிதமாக இருக்கட்டும். சிந்து, தனி மாநிலமாக அறிவிக்கப்பட்டால், பின்னர் பம்பாய் வாழ் தாழ்த்தப்பட்ட மக்கள் தொகையும், சிந்து வாழ் இஸ்லாமியர்களின் தொகையும் - இருசாரர்களின் இட ஒதுக்கீடும் இணையாக இருப்பதுதான் சரியாக இருக்கும்."

தன்னை 'இந்து' என்றும், இந்துக்கள் தங்களை சமமாக நடத்துவார்கள் என்றும் சீனிவாசன் நம்பியதால், சென்னையில் மட்டும் 22 சதவிகித இட ஒதுக்கீடு கேட்டார். ஒரே அறிக்கையில், பம்பாயில் 16 சதவிகித இடஒதுக்கீடு வேண்டும் என்றும் சென்னையில் 22 சதவிகிதம் வேண்டும் என்றும் கோரப்பட்டிருந்தது. இதனால் எழுந்த முரண்பாடுகளினால், ரெட்டமலை சீனிவாசன், அம்பேத்கருடன் சேர்ந்து பணியாற்றுவதை 1935ஆம் ஆண்டு முதல் முழுமையாகத் தவிர்த்தார். இன்றைக்கு மக்கள் அம்பேத்கரை மட்டுமே நினைவில் வைத்துப் போற்றுகின்றனர்.



அம்பேத்கர், தாழ்த்தப்பட்ட மக்களை - 'Depressed Classes' என்று அழைப்பதை விரும்பவில்லை என்பதைக் குறிப்பிட்டுள்ளார். மாறாக, சாதியற்ற மக்கள், இந்து மத எதிர்ப்பாளர்கள் என்ற பொருள்பட ஒரு சொல் உருவாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார். முறையான - நேர்மையான வாழ்க்கை வாழ்பவர்கள் அல்லது திட்டமிட்ட - நன்கு வரையறுக்கப்பட்ட வாழ்க்கையை வாழும் நேர்மையாளர்கள் என்று பொருள்படும்படி 'செட்யூல்டு காஸ்ட்' என்ற பொதுப் பெயரை இந்த அறிக்கையில் அம்பேத்கர் குறிப்பிட்டிருந்தார். ஆனால், அது ரெட்டமலை சீனிவாசனின் நிர்பந்தத்தால் கடைசி நேரத்தில் நீக்கப்பட்டது.

அண்ணல் அம்பேத்கர் - ரெட்டமலை சீனிவாசன் அவர்களைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டியவர்கள், அவசியம் படிக்க வேண்டிய அரிய தொகுப்பு இது. ●

www.padippakam.com

## செஞ்சீனத்துள் புதைய மறுக்கும்

# வெள்ளை திபெத்

'சாதியம் இனவாதத்தைவிடக் கொடுமையானது' என்ற கருத்தை விவாதிக்க ஆகஸ்டு மாத இறுதியில், தென்னாப்பிரிக்காவில் 'அய்க்கிய நாடுகள் அவை', மாநாடு ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது. தலித் மக்களின் பிரச்சினை, முதல் முறையாக உலக அரங்கில் விவாதிக்கப்படவிருக்கிறது. இம்முக்கிய தருணத்தில், பிற நாடுகளில் ஒடுக்குமுறைக்கு ஆளாகும் மக்களைப் பற்றியும் - அவர்கள் அதை எதிர்த்துப் போராடுவது பற்றியும் நாம் அறிந்து கொள்வது மிக மிக அவசியம். அந்த வகையில், அவ்வப்போது சில கட்டுரைகளை வெளியிட இருக்கிறோம்.

■ மாயா

கம்யூனிஸ்ட் நாடான சீனா, தன் அண்டை நாடான திபெத்தை - 1951ஆம் ஆண்டு மே 23அன்று தன்னுடன் இணைத்துக் கொண்டது. இந்நிகழ்ச்சி நடந்து அய்ம்பது ஆண்டுகள் முடிவடைந்ததைக் குறிக்கும் வகையில், சீனாவில் விழா ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. உலகமெங்கிலும் சிதறியடிக்கப்பட்டுள்ள திபெத்தியர்களோ வெறுப்புடன் சீனாவை நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.



திபெத்திய தேசியத்தின் பிறப்பிடம் என்றும் திபெத்திய பண்பாட்டின் தொட்டில் என்றும் அழைக்கப்படும் இடம்

உலக மனித உரிமை இயக்கமான 'அம்னஸ்டி இன்டர்நேஷனல்' அளிக்கும் தகவலின்படி, சீனாவின் பிடியிலிருக்கும் திபெத்தில் - அதிகமான மனித உரிமை மீறல் மற்றும் வன்முறைகள் அரசாங்கத்தினாலேயே கட்டவிழ்க்கப்பட்டு வருகின்றன. நூற்றுக்கணக்கான புத்த துறவிகள் கடுமையான சிறைசூழலில் - அதிகாரிகளின் வன்முறைக்கு பலியாகி வருகின்றனர். திபெத்தியர்களின் மத குருவான தலாய் லாமாவின் படத்தினை வைத்திருந்தாலே தேசத் துரோகம். என்ன நடக்கிறது திபெத்தில்?

சீனாவிற்குத் தென் மேற்கேயுள்ள இமாலயப் பனி மலைகளின் நடுவே - இரண்டரை மில்லியன் சதுர கிலோ மீட்டர் பரப்பில் அமைந்திருக்கும் அழகிய நிலப் பரப்பைக் கொண்ட நாடு திபெத். பெரும்பாலான ஆசிய நாடுகள் அய்ரோப்பியர்களின் கைவசம் போன பொழுது கூட, திபெத் சுதந்திரமான நாடாய் விளங்கி வந்திருக்கிறது. மங்கோலியர்கள், நேப்பாளிய கூர்க்காக்கள், சீனாவின் மாஞ்சு அரசர்களின் படையெடுப்பு, திபெத் வரலாற்றில் சிறிய அளவில் நிகழ்ந்திருந்தாலும் கூட, அது இருபதாம் நூற்றாண்டின் முதற்பாதிவரை - சுதந்திரமான நாடாகவே இயங்கி வந்தது.

திபெத்தியர்கள் பெரும்பாலானோர் புத்த மதத்தினர். அவர்களது மதகுருவான தலாய் லாமாக்களே நாட்டையும் ஆண்டு வந்தார்கள். மக்களிடையே அன்பையும் அறத்தையும் போதித்து வந்த திபெத் நாடு, இரண்டாம் உலகப் போரில் நடுநிலை வகித்தது.

1949ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சியின் மூலம் சீனாவில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய கம்யூனிஸ்ட் அரசாங்கம் - வானொலியில், ''தைவான், ஹைனன், வின்ஜியாஞ், திபெத் மக்களையும் சீனாவின் 'மக்கள் விடுதலை ராணுவம்' சுதந்திரம் அளிக்கத் திட்டமிடுகிறது'' என அறிவித்தது. யாரிடமிருந்து சுதந்திரம் என கம்யூனிஸ்டுகள் விளக்கவுமில்லை, இமாலயப் பனிமலைகளினுள் காரல் மார்க்ஸ் ஊடுருவாத காரணத்தினால், திபெத்தியர்கள் சீனாவின் உரையைப் புரிந்து கொள்ளவும் இயலவில்லை.

1950ஆம் ஆண்டு அக்டோபர் 7அன்று 40,000 பேர்கொண்ட சீனப் படை, திபெத்தினுள் நுழைந்தது. 8,000 ராணுவ வீரர்களைக் கொண்டிருந்த திபெத் ராணுவம், அன்னிய ஆக்கிரமிப்பை முறியடிக்க முடியாமல் தோற்றது. திபெத் நகரமான கெம்டோ, சீனர்களால் கைப்பற்றப்பட்டது. இந்தப் போரில் நான்காயிரம் திபெத்திய ராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பதினாறு வயதேயான திபெத்திய மத குருவும் அரசியல் தலைவருமான பதினான்காவது தலாய் லாமா, பாதுகாப்பிற்காக தலைநகரான லாசாவிலிருந்து இந்திய எல்லைப் பகுதியிலிருக்கும் த்ரோமா நகருக்கு இடம் பெயர்ந்தார்.

1951ஆம் ஆண்டு தலாய் லாமாவி னால் அமைக்கப் பெற்ற அய்ந்து நப குழு ஒன்று, சீன அரசாங்கத்தோடு பேச் வார்த்தை மூலம் உடன்பாடு காண பெ ஜிங் நகருக்குச் சென்றது. சர்வதேச வி முறைகளை மீறி, திபெத்திய தூதுக் கு வினரை சீன அரசாங்கம் மிரட்டி 'ப னேழு அம்ச ஒப்பந்தத்தில்' கையெழுத்



படிப்பகம்

www.padippakam.com

ங்கிக் கொண்டது. எந்த ஒப்பந்தத் லும் கையெழுத்திடும் அதிகாரம் ந்தக் குழுவிற்கு இல்லையென்பது ஒரு றமிருக்க, மிரட்டலின் மூலம் வாங்கப் பட்ட கையெழுத்து என திபெத்திய அரசாங்கம் மறுப்புத் தெரிவித்தும், சீன ராணுவம் திபெத்திய தலைநகரம் லாசாவைக் கைப்பற்றியதோடு - முழு திபெத்தையும் மெல்ல ஆக்கிரமிக்கத் தொடங்கியது. திபெத்தை சீனா ஆக்கிரமித்ததை, அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளும் கண்டித்தன. ஆனால், வளர்ந்து வரும் பெரும் நாடான சீனாவை எதிர்த்து திபெத்திற்கு உதவ யாரும் முன்வரவில்லை.

கிழக்கு திபெத்தில் சீன ராணுவத்தினர் புரிந்துவந்த அராஜக செயலால், திபெத்தியர்கள் தலைநகரான லாசாவில் ஆயிரக்கணக்கில் குவியத் தொடங்கினர். சீன ராணுவம் நாடெங்கும் பரவி திபெத்தியர்களைத் துன்புறுத்தி வந்ததினால், 1959ஆம் ஆண்டு மார்ச் மாதம் திபெத்திய மக்கள் சீனாவின் ராணுவத்தினரை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்தார்கள். ஓர் ஆண்டுக்கு மேல் நீடித்த கிளர்ச்சியில் 87,000 திபெத்தியர்கள் கொல்லப்பட்டனர். தலாய் லாமா ஆயிரக்கணக்கான அகதிகளோடு இந்தியாவில் தஞ்சம் புகுந்தார்.

அன்றையிலிருந்து திபெத் நாட்டை விட்டு அகதிகளாய் வெளியேறும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்தபடி இருக்கிறது. ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட புத்த மடங்கள், வரலாற்றுத் தலங்கள் சீனர்களால் அழிக்கப்பட்டு விட்டன. நான்காயிரத்துக்கும் மேற்பட்ட திபெத்தியர்கள் சிறைகளில் வாடுகிறார்கள். திபெத்திய பெண்கள் கட்டாயக் கருக் கலைப்புக்கு உள்ளாக்கப் படுகிறார்கள்.

**தி**பெத்தியர்களில் உள்ள கர்மா கதியு குழுவின் மதத்தலைவர் பதினேழாவது கர்மபா லாமா, அண்மைக்காலமாய் செய்திகளில் அடிபட்டு வருகிறார். 1999ஆம் ஆண்டு சீனாவிலிருந்து தப்பித்து வந்த பதினைந்தே வயதான கர்மபா லாமா, இந்தியாவிற்கும் சீனாவிற்கும் உள்ள உறவில் விரிசல் ஏற்படக் காரணமானார். சீனாவைப் பகைத்துக் கொள்ள விரும்பாத இந்திய அரசு இன்றுவரை கர்மபா லாமாவை, சிக்கிம் மாநிலத்தில் உள்ள அவரது தலைமை மடத்திற்குச் செல்ல அனுமதி மறுத்து வருகிறது.

1.2 மில்லியன் திபெத்தியர்கள் சீனாவின் ஆக்கிரமிப்பு முயற்சியின் நேரடி விளைவாக இறந்திருக்கிறார்கள்.

சீனா, அணுக் கழிவுகளைக் கொட்டும் குப்பைக் கூடையாக திபெத்தை பயன்படுத்துகிறது. திபெத்தின் சுற்றுப்புறச் சூழல் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. 1,75,000 பேர் அகதிகளாகியிருக்கிறார்கள். (இந்தியாவில் மட்டும் ஒரு லட்சம் திபெத்திய அகதிகள் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள்)

திபெத்திய உணர்வை அறவே ஒழித்திட சீன அரசாங்கம் இரு வழிகளில் முயன்று வருகின்றது. உண்மையான திபெத்திய எல்லைகள் மாற்றப்பட்டு, திபெத்திய இடங்கள் சீனாவுடன் இணைக்கப்பெற்றும், சீனாவிலிருக்கும் சில இடங்கள் திபெத் எல்லையுடன் இணைக்கப்பட்டும் - புதிய தன்னாட்சி திபெத் மாகாணத்தை சீன அரசு உருவாக்கியுள்ளது. அய்ம்பது ஆண்டுகளாக சீன மக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக திபெத்தினுள் அனுப்பியும், திபெத்தியர்களை சீனாவெங்கும் பரப்பியும் திபெத் என்ற நாட்டை முழுவதுமாய் அழித்துவிட முனைந்துள்ளது.

1949இல் நடைபெற்ற நான்காவது ஜெனிவா ஒப்பந்தத்தின் 49ஆவது சட்டப் பிரிவு, ''ஆட்சி செலுத்தும் நாடு, அதன் ஆட்சிப் பகுதிக்குள் அதன் சொந்த பொது மக்களின் பகுதியினரை நாடு கடத்தவோ குடியேற்றம் செய்யவோ கூடாது'' என வலியுறுத்துகிறது. அதனை மீறும் வகையில் சீன மக்களை திபெத்தினுள் குடியமர்த்தும் சீனாவின் திட்டத்தினால் இன்று திபெத்தில் (சீன அரசாங்கம் வரையறுத்திருக்கும் திபெத்தில்) ஆறு மில்லியன் திபெத்தியர்களின் எண்ணிக்கையை மிஞ்சும் வகையில் - 7.5 மில்லியன் சீனர்கள் குடியேறியிருக்கிறார்கள்.

திபெத்திய பண்பாடு, கல்வி, மதம் அனைத்தும் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகிறது. சீனாவெங்கும் உள்ள சிறுபான்மை திபெத்தியர்கள் அடக்கு முறையின் கீழ் வாழ்வதாகத் தகவல்கள் வந்த வண்ணம் உள்ளன. ஒன்பது வயதேயான குழந்தைகள் கூட சீன அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என ஒரு அறிக்கை சொல்கிறது. அய்க்கிய நாடுகளின் மனித உரிமை கமிஷன், ஜெனிவாவில் நடத்தவிருக்கும் ஆண்டுக் கூட்டத்தில் இந்த அறிக்கையை வெளியிடப் போகிறது.

சீனாவில் பந்தாடப்படும் திபெத்திய மக்களைப் போலவே அகதிகளாய் வெளியேறிய திபெத்தியர்களும் பல நாடுகளில் பரவியிருக்கிறார்கள். எனினும் காலங்காலமாய் அவர்களோடு ஊறியிருக்கும் மத உணர்வும் பதினான்காவது தலாய் லாமா இந்தியாவில் நிறுவியிருக்கும் திபெத்திய அரசாங்கமும் அவர்களை நாற்பதாண்டுகள் கழித்தும் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட வைத்துள்ளது.



தலாய் லாமா வரையறுத்துள்ள அய்ந்து அம்ச அமைதித் திட்டத்தை முன்னிறுத்தி உலகமெங்கிலும் உள்ள திபெத்தியர்கள் அறவழிப் போராட்டங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள். 1959, 61, 65 ஆம் ஆண்டுகளில் அய்க்கிய நாடுகள் சபை திபெத் நாட்டிற்கு ஆதரவாகத் தீர்மானம் நிறைவேற்றியது. தலாய் லாமாவின் பணியைப் பாராட்டி அவருக்கு 1989ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு அளிக்கப்பட்டது. தலாய் லாமாவின் போராட்டத்தை பல நாடுகள் அங்கீகரித்து வருகின்றன. எனினும், சீன அரசு தன் நிலையிலிருந்து சிறிதும் மாறவில்லை. தலாய் லாமாவிற்கு அடுத்த பெரும் பொறுப்பு வகிக்கும் ஆறே வயதான பஞ்சன் லாமாவை கைது செய்து சாதனை செய்திருக்கிறது.

திபெத்தை தன்னுடன் இணைத்து அய்ம்பதாண்டு காலம் கடந்து விட்டதை சீனா கொண்டாடி வரும் வேளையில், தலாய் லாமா அமெரிக்காவில் தனது கொள்கை விளக்கப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறார். திபெத் பற்றிய முடிவை திபெத் மக்களே தேர்ந்தெடுக்கும் தலாய் லாமாவின் திட்டத்திற்கு - இன்றுவரை சீன அரசாங்கத்திடமிருந்து பதில் இல்லை.



படிப்பகம்

www.padippakam.com



பரம்பரை பரம்பரையாக நீங்கள் முதுகு வளைய கும்பிடு போட்டிருக்கிறீர்களா? ஊர்க் கோயிலில் உங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறதா? இரட்டைத் தம்ளரில், நெளிந்து போன அலுமினிய தம்ளர் உங்களுடையதா? பறையடிக்கவும், பிணம் தூக்கவும் மலமள்ளவும் வற்புறுத்தப்படுகின்றீர்களா? பெரிய வீட்டுப் பிள்ளைகள் நாக்கூசாமல் 'வாடா போடா' என்று அழைக்க, நீங்கள் அவர்களுக்கு 'அய்யா' என்று மரியாதை கொடுத்திருக்கிறீர்களா?... உங்கள் வீட்டுப் பெண்கள் பாலியல் வல்லுறவிற்கு உள்ளாகியிருக்கிறார்களா? இந்த அனுபவங்கள் இல்லையென்றாலோ, அதையெல்லாம் கண்டுகொள்ளவே இல்லையென்றாலோ இந்து மதம் உங்களை சுகப்படுத்தும்; அதனால் மதமாற்றம் என்பது, பெருங்குற்றமாக உங்களுக்குத் தெரியக்கூடும்.

■ மீனா மயில்



# தீவிரவாதிகளாக்கப்பட்ட இஸ்லாமியர்கள்

மேற்சொன்ன அடிமைத்தனம் அனைத்தையும் அனுபவிக்கும் தலித் மக்கள், அடிமைத்தனத்தை போதிக்கும் இந்து மதத்தை விட்டு வெளியேறுவது - உங்களுக்கு அயோக்கியத்தனமானதாகப் படலாம். ஆனால், அதற்காக இங்கு யாரும் வருத்தப்படப் போவதில்லை.

தலித் மக்கள் இசுலாத்தைத் தழுவுவதென்பது, இன்று நேற்று நடக்கிற விஷயமில்லை. நபிகள் நாயகத்தின் தோழர்கள் 'சிலை வணக்கம் கூடாது', 'ஓரிறை வழிபாடு', 'உலக மனிதர்கள் அனைவரும் சமமானவர்களே' - போன்ற கொள்கைகளோடு - உலகமெங்கும் கரையோரப் பகுதிகளில் இறங்கினார்கள். வியாபாரம் தான் இசுலாமியர்களின் முக்கியக் குறிக்கோளாக இருந்ததே தவிர, குற்றம் சுமத்தப்பட்டபடி மதப்பிரச்சாரத்தை அவர்கள் செய்யவில்லை. ஆனால், மார்க்கக் கொள்கைகளுக்கேற்ப வாழ்ந்து காட்டினர். அதுவரை பின்பற்றி வந்த மதத்தின் மீது விமர்சனங்களையும், கேள்விகளையும் எழுப்பியவர்களுக்கு - இசுலாமியர்களின் வாழ்க்கை முறை சரியாகப் பட்டதால், இசுலாத்தைத் தழுவத் தொடங்கினர்.

மிகச்சிலராக வந்திறங்கிய இசுலாமியர்கள், நாளடைவில் எண்ணிக்கையில் வளர்ந்ததற்குக் காரணம், இங்கிருந்தவர்கள் இசுலாத்தைப் புரிந்து கொண்டு மதம் மாறியதுதான். தவிரவும், வெள்ளையர்களைப் போல் வியாபாரம் என்ற பெயரில் கிடைத்ததையெல்லாம் சுரண்டி எடுத்துக் கொண்டு இசுலாமியர்கள் ஓடி விடவுமில்லை; யாரையும் அடிமைப் படுத்தவுமில்லை.

அதனால் பிறவி இசுலாமியர்களை விடவும் இந்து சாதியக் கட்டமைப்பில் இருந்து விலகி - இசுலாத்தைத் தழுவியவர்களே பெருமளவில் இன்று இருக்கின்றனர். அதனால் இசுலாமியர்களின் சொந்த மண் இந்தியாவாகிறது.

இசுலாமியர்கள் யாருடனும் வேற்றுமை பாராட்டாததால், இந்து - முஸ்லிம் ஒற்றுமை என்பது அன்றைய நாட்களில் திடமாக இருந்தது. வெள்ளையர்கள் இந்தியாவிற்குள் வந்தபோது, இந்து - முஸ்லிம் ஒற்றுமை அவர்களின் ஆதிக்கத்திற்கு இடைஞ்சலாக இருந்தது. இந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரித்தால் மட்டுமே நினைத்தது நிறைவேறும் என்று வெள்ளையர்கள் திட்டமிட்டுக் காய்களை நகர்த்தத் துவங்கினர்.

**எந்நேரமும் ஆயுதங்களுக்கே பதில் சொல்ல வேண்டியிருந்ததால், இசுலாமியர்கள் "தாங்கள் இந்தியர்கள்தான்" என்பதை நிரூபிக்க நேரமில்லாமல் போயிற்று.**


அதன் விளைவாக, இந்துக்களுக்கு எதிரானவர்களாக இசுலாமிய மன்னர்களும், மக்களும் சித்தரிக்கப்பட்டனர். அதனால் இந்துக்களில் பலர் வெள்ளையர்களுக்கு சொறிந்து விடத் தொடங்கிய பிறகுதான், வெள்ளையர்கள் இருப்பு இங்கே நிரந்தரமாயிற்று. இரண்டு நூற்றாண்டு
களாக விதைக்கப்பட்ட இந்து - முஸ்லிம்
பிரிவினை, வெள்ளையர்கள் இங்கி
ருந்து துரத்தியடிக்கப்பட்ட பிறகு கூட
இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையி
மூலம் பகைமை என்பது நிரந்தரமா
கப்பட்டது. வெள்ளையர்கள் விட்டு
சென்ற ஆதிக்கத்தை இந்துக்கள் கை
லெடுத்துக் கொண்டு, இன்றுவரை சி
பான்மையினரான இசுலாமியர்களை
சூரையாடுவதென்பது சாதாரண நி
வாகி விட்டது.

இசுலாமியர்கள் தங்கள் சொந்த ம
ணிலேயே அந்நியர்களாகப் பார்க்கப்
டனர்; இந்து மத வெறியர்களால் இ



படிப்பகம்

www.padippakam.com



**பாபர் மசூதி இடிக்கப்பட்டதும், அதைத் தொடர்ந்து நடந்த கலவரங்களில் ஏராளமானோர் உயிரிழந்ததும், இன்னும் வட மாநிலங்களில் மசூதிகள் இடிக்கப் பட்டு வருவதும் – இஸ்லாமியர்களுக்கு எத்தகைய வலியை ஏற்படுத்தியிருக்கும் என்று இந்துத்துவவாதிகளால் உணர முடியவில்லை.**

மியர்கள் தீவிரவாதிகளாக்கப்பட்டனர்; இசுலாமியர்கள் அனைவரும் அஞ்சி வாழக்கூடிய நிலையை இந்துத்துவவாதிகள் ஏற்படுத்தினர்; திட்டமிட்டு இசுலாமியர்களின் வரலாறு திரிக்கப்பட்டது. பாடப்புத்தகங்கள் - விடுதலைப் போரில் பங்கெடுத்த இசுலாமியர்களைப் புறக்கணித்துப் பொய் பேசின. எந்நேரமும் ஆயுதங்களுக்கே பதில் சொல்ல வேண்டியிருந்ததால், இசுலாமியர்கள் ''தாங்கள் இந்தியர்கள்தான்'' என்பதை நிரூபிக்க நேரமில்லாமல் போயிற்று. அதனாலேயே சமூக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் தங்களுக்கான அங்கீகாரத்தைப் பெற இசுலாமியர்களுக்கு அவகாசமில்லை.

இன்றைய சூழலில், இசுலாமியர்களுக்கு பல முக்கிய பிரச்சனைகள் இருக்கின்றன. இவை அனைத்துமே இந்துத்துவ வாதிகளால் உருவாக்கப்பட்டது தான். ஒன்று, இசுலாமியர்கள் அந்நியர்களாகவும், தீவிரவாதிகளாகவும் ஆக்கப்பட்டனர். இந்தியாவைப் பொறுத்தவரை, வாழ்வதற்கான உரிமை என்பதே அவர்களுக்கு கேள்விக்குறியாக இருக்கிறது. அவ்வப்பொழுது ஆயிரக்கணக்கானோர் ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி போன்ற இந்துத்துவா அமைப்புகளின் ஆயுதங்களுக்கு இரையாகின்றனர். எதிர்த் தாக்குதலுக்கு ஆயுதத்தை - கையிலெடுத்த இசுலாமியர்களுக்கு 'தீவிரவாதிகள்' என்ற இணைப்பெயர்.

இரண்டாவது பிரச்சனை - கல்வி, வேலைவாய்ப்பில் தனி இட ஒதுக்கீடு இல்லாதது. இங்கு வாய்ப்பில்லாததால் தான் இசுலாமியர்கள் பிழைப்பு நாடி வேறு நாடுகளுக்குச் செல்ல வேண்டிய சூழல். இதனால் வெளிநாட்டிலிருந்து நிறைய பணம் கிடைக்கிறது, ஆயுதங்கள் கிடைக்கிறது என்ற குற்றச்சாட்டுகளையும் சுமக்க வேண்டியிருக்கிறது.

மூன்றாவது, வழிபாட்டுத் தளங்கள் பாதுகாப்பின்மை. மசூதிகள் தொடர்ச்சியாக இடிக்கப்படுவதன் மூலம் இசுலாமியர்களின் வழிபாட்டு உரிமைகள் பறிக்கப்படுகின்றன. பாபர் மசூதி இடிக்கப்பட்டதும், அதைத் தொடர்ந்து நடந்த கலவரங்களில் ஏராளமானோர் உயிரிழந்ததும், இன்னும் வட மாநிலங்களில் மசூதிகள் இடிக்கப்பட்டு வருவதும் - இ லாமியர்களுக்கு எத்தகைய வலியை ஏ படுத்தியிருக்கும் என்று இந்துத்துவவா களால் உணர முடியவில்லை. அத்தகை மக்களின் உணர்வுகளை நசுக்கி ''இ என் வாழ்வின் பொன்னாள்'' என்று அ வானியால் சொல்ல முடிகிறதென்றால் எத்தகைய வெறியை இந்துத்துவவாதி கள் கொண்டிருக்கிறார்கள் என்பது தெ வாகிறதல்லவா? அதோடு விநாயக சதுர் திகளும், ரதயாத்திரைகளும் வன்முறையை தோற்றுவித்து - பல உயிர்களை பலி வாங்குவது, இந்துக் கடவுளுக்கா காணிக்கையாகவே பார்க்கப்படுகின்றது.

இசுலாமியர்களைப் பொறுத்த வரை, அரசியல் பிரதிநிதித்துவம் என்பது வெறும் கண்துடைப்பாகவே இருக்கிறது. இன்று வெற்றிக் கூட்டணியாக தலை தூக்கியிருக்கும் 'மதச்சார்பற்ற கூட்டணிக்கு' அடித்தளம் போட்டது, தமிழக முஸ்லிம் முன்னேற்றக் கழகம்தான். கடந்த 1999 சூலை நான்காம் நாள் - 'முஸ்

## இளைஞர்களை சிந்திக்க விடுங்கள்...

### அவர்கள் இசுலாமியர்களாக இருந்தாலும் கூட

காஷ்மீர் - இந்தியாவின் கொசோவா' என்ற கட்டுரையை செய்தி மடலில் எழுதியதற்காக, 'இந்திய இசுலாமிய மாணவர் இயக்க'த்தைச் சேர்ந்த ஷமீமுல் இசுலாம் என்பவர் அய்.எஸ்.அய். உளவாளி என்று குற்றம் சாட்டி கைது செய்யப்பட்டார். காஷ்மீரில் இசுலாமியர்கள் படும் துயரங்கள் பற்றி சில நாளேடுகளில் வெளிவந்த செய்திகளைக் குறிப்பிட்டு அக்கட்டுரையை ஷமீமுல் இஸ்லாம் எழுதியிருந்தார். அவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து பத்திரிகைகளும் தொலைக் காட்சிகளும் அவரை தீவிரவாதியாகவும் தேசவிரோதியாகவும் சித்தரித்தன.



ஷமிமுல்லாவின் பெற்றோர்

இது, காயல் பட்டிணம் இசுலாமியர்களைப் பெரிதும் புண்படுத்தியது. இன்னும் ஷமீமுல் இஸ்லாம் விடுதலையாகாதது குறித்து அவரின் தந்தை ஷாகுல் ஹமீது கூறுகையில், ''இந்தியாவை மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று கூறுகிறோம். ஆனால், ஜனநாயகத்தைக் கட்டிக்காக்கிற நாடாக இது இல்லை. நீ சொல்லக் கூடிய ஒவ்வொரு வார்த்தையின் கடைசி எழுத்து வரைக்கும் நான் எதிர்க்கிறேன். ஆனால் அப்படி சொல்லக் கூடிய வார்த்தையில், உனக்கிருக்கின்ற உரிமையை முதலுரிமை கொடுத்துக் காப்பேன்'' இது தான் ஜனநாயகம். இங்கு என்ன நடக்கிறது?

தேசப்பிதாவைக் கொன்று விட்டு, தேசியக் கொடியை எரிச்சிட்டு, தேசிய கீதத்தை அவமதிச்சிட்டு, தேசப் படத்தையும் கால்களுக்கடியில் போட்டு மிதித்துவிட்டு, தேசதியாகிகளையெல்லாம் என்ன சொல்ல முடியுமோ அதைச் சொல்லி கொச்சைப் படுத்திவிட்டு, ஆகஸ்டு 15 அன்று செங்கோட்டையில் கொடியேற்றக்கூடிய கொடுமை, இந்த நாட்டில் தான் நடக்கிறது.

''என் மகன் சமூக சேவை செய்பவர். இளைஞர்கள் சில நல்ல சமூக மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான வேலைகளை செய்கிறார்கள். அது முப்பது வயசுக்குரிய வேகம்; அதை செய்யவிடுங்கள். அதைத் தடுக்கப் போய்தானே ஆயுதங்களைத் தூக்கி கொண்டு தீவிரவாதியாகிறான். அதனால், ஜனநாயக உரிமையைப் பறிக்காதீர்கள்'' என்றார்.

தற்பொழுது ஓராண்டு கடந்து விட்ட நிலையில், ஷமீமுல் இஸ்லாம் தீவிரவாதியாக சிறையில் இருக்கிறார். இது போல் நிறைய இசுலாமியர்கள் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்ட நிலையில் - தீவிரவாதிகளாக சித்தரிக்கப்படுகிறார்கள். ■



படிப்பகம்

www.padippakam.com

# இஸ்லாம் பெண்களை அடிமைப்படுத்துகிறது?

இசுலாம், பெண்களை அடிமைப்படுத்துகிறது என்றால் துணிந்து எந்த இசுலாமியரும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். மற்ற மதங்களுடன் ஒப்பிடும் போது இசுலாம் - கல்வியுரிமை, மறுமணம் செய்து கொள்வதற்கான உரிமை, சொத்துரிமை போன்றவற்றைத் தருகிறது என்று வாதிட்டாலும் கூட, இசுலாம் சில கட்டளைகளின் மூலம் பெண்களை நிச்சயம் அடிமைப்படுத்துகிறது. 'பர்தா' ஒரு விஷயமே அல்ல. பர்தா பாலியல் ரீதியாக நிறைய பிரச்சனைகளைத் தவிர்க்கிறது என்றும் பெண்களே வாதிடுகின்றனர்.

இங்கு மீண்டும் பெண்கள் தங்கள் உடல் மீது கவனமாக இருக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. பெண் என்பவள் உடலாகப் பார்க்கப்படும் சூழல் என்றைக்கு மாற்றப்படுகிறதோ அன்று தான் அவள் மீதான போதையும் தெளியும். இசுலாம் நளினமான, அதிர்ந்து பேசக்கூடாத, வெளி ஆண்களிடம் முகம் காட்டாத பெண்களாகத்தான் இருக்கச் சொல்கிறது. இந்து மதம் கூட பெண்களை இப்படித்தான் வைத்திருக்கிறது.

காயல்பட்டிணத்தில் இருக்கும் 'ஆயிஷா சித்தியாக்கா பெண்கள் கல்லூரி'யில் பெண்களுக்கு இசுலாம் சொல்லித் தரப்படுகிறது. அதோடு பட்டப்படிப்பிற்கும் இக்கல்லூரியே வழிவகை செய்து தருகிறது. பத்தாண்டுகளுக்கு முன்பு இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இங்கு வரும் பெண்களுக்கு - வரதட்சணை வாங்கக் கூடாது என்றும் 'மகார்' வாங்கித்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதும் சொல்லித் தரப்படுகிறது.

அதோடு சாதி, மத பேதம் கூடாது என்பதும் வலியுறுத்தப்படுகிறது. இக்கல்லூரிப் பெண்கள் கிராமங்களுக்குச் சென்று தலித் மக்களை சந்தித்து (குடும்பத்தை எதிர்த்து) பேசுகின்றனர். வெவ்வேறு சாதிகளிலிருந்தும் இசுலாத்தைத் தழுவிய மாணவிகள் பழைய சாதி உணர்வுகளைக் களைந்து ஒரே சமூகமாக இருக்கின்றனர் என்றாலும் கூட, இசுலாம் பெண்களை அடிமைப்படுத்துகிறது என்ற கருத்தை மட்டும் ஒத்துக் கொள்ள மறுக்கின்றனர்.



காயல்பட்டிணம் ஆயிஷா சித்தியாக்கா கல்லூரி ஆசிரியர்கள்

லிம்கள் வாழ்வுரிமை மாநாட்டை' த.மு.மு.க. நடத்தியது. அதில் ஜெயலலிதா, மூப்பனார் உள்ளிட்ட அனைத்துத் தலைவர்களும் பங்கேற்றனர். கல்வி, வேலைவாய்ப்பில் கேரளா, கர்நாடகம் போன்ற மாநிலங்களைப் போல தனி இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்; அதிக எண்ணிக்கையில் இசுலாமியர்களை நிறுத்த வேண்டும் என்ற 2 நிபந்தனைகளை த.மு.மு.க. விதித்தது. ஜெயலலிதா ஒத்துக் கொண்டதாக எழுதி கையெழுத்துப் போட்டுக் கொடுத்தும் கூட, நிலைமை என்னவாயிற்று? இசுலாமியர்களை ஊறுகாயைப் போல் பயன்படுத்திக் கொள்ளும் கலை - எல்லா அரசியல் வாதிகளுக்குமே தெரிந்திருக்கிறது.

கடந்த நாற்பதாண்டுகளாக தி.மு.க.வை ஆதரித்து வந்ததற்கு பதிலாக, தனியாக ஒரு கட்சியை உருவாக்கி இருந்திருந்தால் கூட, இன்று ஒரு வலுவான அரசியல் அடித்தளம் இசுலாமியர்களுக்கு ஏற்பட்டிருக்கும்.

இன்று இசுலாமியர்களுக்கு எதிராக தொடரும் வன்முறைகளுக்கு சரியான தீர்வு காண முடியாமல் போவதற்கு இதுவும் ஒரு காரணம். வெறும் மூன்று சதவிகிதமே இருக்கும் பார்ப்பனர்களால் - அத்தனைத் துறையையும் ஆக்கிரமித்து அரசியல் அதிகாரத்தையும் கைப்பற்றி எல்லா மக்களையும் அடிமையாக நடத்த முடிகிறது என்றால், சிறுபான்மையினரும் தலித் மக்களும் சரியாக திட்டமிடவில்லை; இல்லை என்றால் அதற்கான முயற்சிகளை சரியாக மேற்கொள்ளவில்லை என்றே எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்துத்துவவாதிகள் இசுலாமியர்களை ஏன் குறிவைத்துத் தாக்குகிறார்கள் என்பது எல்லோருக்குமே தெரிந்த விஷயம். இந்து மதத்தைத் தவிர வேறு எந்த மதமும் வளர்ந்து விடக் கூடாது என்பதில் அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ்., விஷ்வ இந்து பரிஷத் போன்ற அமைப்புகள், சிறுபான்மையினர் மற்றும் தலித் எதிர்ப்பு விஷயங்களுக்கு ஒன்று கூடி விடுகின்றன. ஆனால், நம்மில் ஒரு பொது கண்டனக் கூட்டத்திற்கு ஆள் திரட்டுவதென்பது, பெரும் மலையைப் புரட்டுகின்ற விஷயமாக இருக்கிறது. "அவர் வந்தால் இவர் வரமாட்டார், அந்த அமைப்புக்கும் நமக்கும் ஒத்துப் போகாதே"... இப்படி யோசிக்கிறோம் நாம். எப்படி உருவாக்குவது, இந்து மதவாதிகளுக்கெதிரான சமூக மாற்றத்தை?

இசுலாத்தில் வலியுறுத்தப்படும் சமத்துவத்தைக் கண்டு தலித் மக்கள் அதிகளவில் இசுலாத்தைத் தழுவுகின்றனர். எங்கே இசுலாம் இந்தியாவில் வேரூன்றி விடுமோ என்ற பயம்தான் - இந்து மத வெறியர்கள் இப்படி நடந்து கொள்வதற்கும் காரணமாக இருக்கிறது.

இந்து மதம் - வர்ணாசிரம முறையைக் கட்டிக்காத்து சாதியை வலியுறுத்துகிறது. இந்துக் கடவுளர்களில் ஒருவர் ஊருக்கு நடுவிலும், இன்னொருவர் ஊருக்கு வெளியிலும் நிறுத்தப்படுகின்றனர். (கடவுளர்களுக்கே இந்த நிலை!) இசுலாத்தில் ஒரேயொருவர்தான் கடவுள். அந்தக் கடவுளும் - மனிதர்கள் எல்லோரும் சமமானவர்கள் என்கிறார். சாதியின் கொடுமையை அனுபவித்த தலித் மக்கள், இதை உணரும் போதுதான் - இந்து மதத்தை விட்டு வெளியேறி இசுலாத்தைத் தழுவுகின்றனர்.

1981இல் உலகப் பார்வையை தன் பக்கம் திருப்பிய மீனாட்சிபுரம் தலித் மக்கள், இசுலாத்தைத் தழுவியதற்குக் காரணம் இந்த உணர்தல்தான். கீழக்கரையைச் சுற்றியுள்ள சுமார் நாற்பத்தைந்து கிராம மக்களும் இசுலாத்தைத் தழுவியதற்குக் காரணமும் இந்தப் புரிதல் தான்.

இருபது ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் மீனாட்சிபுரம், கீழக்கரை ஆகிய பகுதியில் வசிக்கும் இசுலாமியர்கள் (தலித்தாக இருந்து இசுலாத்தைத் தழுவியவர்கள்) வாழ்வியல் நிலை எப்படியிருக்கிறது என்பது குறித்து மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த முகமது பாரூக் என்பவர் கூறுகையில், "இசுலாத்தில் சாதிப் பாகுபாடு இல்லைங்கறத தெரிஞ்சு தான் மதம் மாறினோம். இன்று





படிப்பகம்

www.padippakam.com

வரை எந்த இசுலாமியரும் எங்களை வித்தியாசமாக நடத்தவில்லை. தொழுகைக்குப் போனால், எங்களுக்குப் பின்னால் வந்தவர்கள் பிறவி இசுலாமியர்களாக இருந்தால் கூட, எங்கள் பாதங்களில் தலைவைத்துதான் தொழுகின்றனர். இது, இந்து மதத்தில் தலித்தாக இருந்தால் முடியுமா? எங்களுக்கு வேண்டியது சமூக அங்கீகாரம். அது இசுலாத்தில் கிடைக்கிறது'' என்றார்.

என்றும்போல் இம்மக்களின் பொருளாதாரமும் அடிப்படை வசதிகளும் மோசமாகவே இருக்கிறது என்றாலும் சமூக அங்கீகாரம் கிடைக்கிறதே என்கின்ற திருப்தியைப் பார்க்க முடிகிறது.

இசுலாத்திலும் பாகுபாடு இருக்கிறது என்ற குற்றச்சாட்டு ஒரு சாராரிடம் இருக்கிறது. இசுலாமியர்களில் ராவுத்தர், மரைக்காயர், சாய்பு, பாய், லெப்பை போன்ற பிரிவுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இவை, இந்து மதத்தில் இருப்பது போல் - பார்ப்பனர், செட்டியார், முதலியார் போன்ற சாதிப் பெயர்கள் இல்லை. அவரவர் வணிக வழக்குக்கேற்ப இசுலாமியர்களை இப்படியும் அழைக்கின்றனர். இதில் லெப்பை என்றழைக்கப்படுபவர்கள் - ராவுத்தர், மரைக்காயர் போன்றவர் வீடுகளில் பெண்ணெடுக்க முடியாது என்ற கருத்தும் நிலவுகிறது. மீனாட்சிபுரத்தைப் பொறுத்தவரை, இந்த எல்லைகளை கடந்து ராவுத்தர், மரைக்காயர் வீடுகளில் பெண்ணெடுத்து, பெண் கொடுத்துள்ளார்கள்.

கீழக்கரையில் இசுலாத்தைத் தழுவிய தலித் மக்களும் இசுலாமியர்களுடனான உறவு சுமூகமாகவே இருக்கிறது. ஆனால், மதம் மாறாத தலித் மக்களிடம் இசுலாமியர்கள் எந்த கொடுக்கல் வாங்கலும் வைத்துக் கொள்வதில்லை. இசுலாம் எந்த பாகுபாட்டையும் அனுமதிக்கவில்லை என்றாலும் கூட, இசுலாமியர்கள் அதை சரியாக நடைமுறைப்படுத்த முடியவில்லையோ என்ற நெருடல் இருக்கத்தான் செய்கிறது.

கவிஞர் இன்குலாப் சொல்வது போல், ''இசுலாம் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால், இசுலாமியர்களால் பரந்த மனப்பான்மையோடு வேறுபாடுகளைக் களைந்து இருக்க முடியவில்லையோ'' என்ற சந்தேகம் எழுகின்றது.

அண்மையில் கீழக்கரை அருகேயுள்ள காஞ்சிராங்குடியில் வாழும் இசுலாமியர்கள், மேலவலசை கிராம தலித் மக்களின் குடியிருப்புகளை அடித்து நொறுக்கி அவ்வூர்ப் பெண்களைக் கட்டையாலும் கற்களாலும் தாக்கியுள்ளனர். அதோடு சாதிப் பெயரையும் சொல்லி அசிங்கமாகத் திட்டியுள்ளனர். காஞ்சிராங்குடியில் ஆட்டோ ஓட்டும் ஒரு தலித் இளைஞர், இசுலாமியர் அழைத்ததற்கு வர மறுத்ததற்காக, குடிபோதையில் இருந்த இசுலாமியர்கள் அந்த கிராமத்தையே அழிக்கும் அளவிற்குத் துணிந்துள்ளனர்.



**இசுலாம் எந்த பாகுபாட்டையும் அனுமதிக்க வில்லை என்றாலும் கூட, இசுலாமியர்கள் அதை சரியாக நடைமுறைப்படுத்த முடிய வில்லையோ என்ற நெருடல் இருக்கத்தான் செய்கிறது.**

மேலவலசை மக்கள் தற்பொழுது காஞ்சிராங்குடி பக்கம் போகவே பயந்து எந்த வேலையும் இல்லாமல் அன்றாடத் தேவையையே பூர்த்தி செய்ய முடியாமல் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். இந்தப் பூசல் ஏற்படுவதற்கு முன்பு வரை எந்தப் பாகுபாடும் இல்லாமல் ஒற்றுமையாக வாழ்ந்து வந்ததாக, மேலவலசை கிராம தலித் மக்கள் ஒத்துக் கொள்கின்றனர்.

திடீரென ஏற்பட்ட தனி மனிதப் பிரச்சினையை சாதிக் கலவரமாக்கிய இசுலாமியர்களின் அடிமனதில் பாகுபாடு, வேற்றுமை இருக்கிறது என்றுதான் மேலவலசை கிராம மக்கள் எடுத்துக் கொள்ள நேர்ந்திருக்கும். இசுலாத்தைப் புரிந்து அய்ந்து நேரமும் தொழுகை நடத்தும் இசுலாமியர்கள், இந்த சம்பவத்திற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

அதோடு, மதம் மாறுகிற தலித் மக்கள் மசூதியில் கீழ் நிலை வேலைகளைத் தான் செய்கின்றனர், இசுலாத்திற்கு மாறினாலும் மசூதியில் பிணம் தூக்கத்தான் அனுமதிக்கப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டும் இருக்கத்தான் செய்கிறது. கீழக்கரை 'புதிய தமிழகம்' கட்சியின் நகரச் செயலாளர் தர்மலிங்கம், கீழக்கரையில் இசுலாத்திற்கு மாறிய தலித் மக்களின் நிலை மோசமாக இருப்பதாகவே தெரிவித்தார்.

கீழக்கரையை சேர்ந்த முபாரக் என்பவர் கூறுகையில், ''90சதவிகிதம் இசுலாமியர்கள் இசுலாத்தைப் பின்பற்றவில்லைதான். இசுலாமியர்களிலும் எல்லாவிதமான தவறுகளையும் செய்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அதை மாற்றுவதற்கான முயற்சியை - இசுலாத்தைப் புரிந்து கொண்டவர்கள்தான் மேற்கொள்ள வேண்டும்'' என்றார்.

இசுலாமியர்கள் மீது என்ன தான் குற்றம் சாட்டலாம் என்று காத்திருக்கும் இந்துத்துவவாதிகளுக்கு இது போன்ற சம்பவங்கள் பெரிய பலமாகும். அதே சமயம் சமூக அங்கீகாரம் வேண்டி இசுலாத்தைத் தழுவும் தலித் மக்களுக்கும் காஞ்சிராங்குடி சம்பவம் பெரிய அவநம்பிக்கையாக இருக்கும். தலித் மக்கள் சாதி ரீதியாக ஒடுக்கப்படுகின்றனர். இசுலாமியர்கள் மத ரீதியாக ஒடுக்கப்படுகின்றனர். இவர்கள் இருவரும் ஒன்றிணைந்து விடக் கூடாது என்பதில் இந்து மத வெறியர்கள் தெளிவாக இருக்கின்றனர். அதையும் மீறி தலித் மக்கள் பெருமளவில் இசுலாத்தைத் தழுவுகின்றனர். ஒடுக்குமுறையை அழிப்பதற்குத் துணை நிற்பதற்காகவாவது இசுலாமியர்கள், இஸ்லாம் சொல்கிற நெறிகளைப் பின்பற்றினாலே போதும்.


இந்து மதம் என்ற இறுகிய மண்ணின் பிடியில் இறுகிப் போய்கிடக்கும் விதைகளான தலித் மக்கள், ஏதோ ஒரு உந்துதலில் அசைந்து மண்ணை முட்டி மேலெழும்புவதென்பது சாதாரண விஷயமல்ல. சமூக அங்கீகாரம் எதிர்பார்த்தும், தீண்டாமைக் கொடுமையிலிருந்து விடுபட வேண்டியும் - மதமாற்றம் செய்துக் கொண்டபின்பும் கூட, அங்கும் தான் எதிர்பார்த்த சமூக அங்கீகாரம் கிடைக்காமலோ, மீண்டும் அடிமைத்தனம் திணிக்கப்படுகிற சூழலோ ஏற்படுமானால் - நிச்சயம் மதமும் பொய் கடவுளும் பொய் என்ற கருத்தை மக்கள் ஏற்றுக் கொள்வதை யாராலும் தடுக்க முடியாது. •



படிப்பகம்

www.padippakam.com





டாக்டர் அம்பேத்கர் நிறுவிய 'சமதா சைனிக் தள்' படையினருடன் அம்பேத்கர்



# உடையும் சித்திரங்கள்

■ சுப. வீரபாண்டியன்

கடந்த ஏப்ரல் 14 அன்று, அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக, நானும் கவிஞர் அறிவுமதியும் மேட்டூர் அருகில் உள்ள கொளத்தூருக்குச் சென்றிருந்தோம். கொட்டும் மழை, மின்வெட்டு முதலான தடைகள் பல கடந்து, சிறப்பாகப் பொதுக்கூட்டம் நடந்து முடிந்தது.

கூட்டம் தொடங்குவதற்கு முன், நானும் அறிவுமதியும், அண்ணன் கொளத்தூர் மணி அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தோம். அப்போது அம்பேத்கரின் அடிப்படை முழக்கம் ஒன்று குறித்து மணி அண்ணன் கூறிய செய்தி, எங்கள் சிந்தனையைத் தூண்டுவதாக இருந்தது.

"கற்பி, ஒன்றுசேர், போராடு" என்றுதான் அம்பேத்கரின் அறிவுரை அச்சிடப்பட்டுள்ளதை நான் பல இடங்களில் படித்துள்ளேன். அவர் சொன்னார், "இந்த வரிசை எப்படியோ மாறிப்போய் உள்ளது. எல்லோரும் இப்படித்தான் எழுதுகின்றனர். ஆனால், அம்பேத்கரோ – "கற்பி, போராடு, ஒன்றுசேர்" என்றுதான் எழுதியுள்ளார். இரண்டுக்குமிடையில், நாம் எண்ணிப் பார்த்தால், பெரிய வேறுபாடு இருப்பதையும் உணரலாம்."

அவர் சொல்வது சரிதான். வரிசை மாற்றம், இங்கே பொருள் மாற்றத்திற்கு வழிவிடுகின்றது. 'ஒன்று சேர்ந்த பிறகு போராடுவது' என்பதுதான் சரியான வழிமுறை என்று நாம் எண்ணிக் கொண்டுள்ளோம். ஆனால், யாரெல்லாம் ஒன்று சேர வேண்டும் அல்லது ஒன்று சேர முடியும் என்ற கேள்வி ஒன்றும் உள்ளது. நம்மை ஒன்றுபடுத்துகின்ற கூறு எது என்பது மிக முகாமையானது.

சாதி என்னும் கூறு, பலரை இங்கே மிக விரைவில் ஒன்றுபடுத்துகின்றது. ஆனால், அதுவே, ஒத்த பண்புகள் உள்ள பலரை இங்கே பிரித்து வைக்கின்றது.

நாடு, இனம், மொழி, வர்க்கம், மதம், கட்சி என்னும் எல்லாக் கூறுகளுமே இணைக்கவும் செய்கின்றன, பிரிக்கவும் செய்கின்றன. இணைக்க வேண்டியவர்களை இணைப்பதும் – பிரிக்க வேண்டியவர்களைப் பிரிப்பதும் எவையெவை என்பதுதான் நாம் கண்டறிய வேண்டிய செய்தியாகும்.

பிரிவினையோ, கருத்து வேறுபாடோ இல்லாத உலகு தழுவிய ஒற்றுமை என்பது, வெறுமனே பொத்தாம் பொதுவானதாகவும், கற்பனையாகவுமே இருக்க முடியும். அது நடைமுறைச் சாத்தியமில்லை.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது, ஒருமைப்பாட்டில் குறுகிய வட்டம், பெரிய வட்டம் என்பதெல்லாம் வெற்றுச் சொற்களே என்பது விளங்கும். தேவையான வட்டம், தேவையற்ற வட்டம் என்றும், நட்பு வட்டம், பகை வட்டம் என்றும் முடிவெடுப்பதே சரி.

**அண்ணல் அம்பேத்கர் வலியுறுத்தும் ஒற்றுமை எது? "கற்பி போராடு ஒன்று சேர்" என்று அவர் சொல்லியுள்ள வரிசையில் வைத்துப் பார்த்தால், அவர் முன்மொழியும் ஒற்றுமை 'போராட்ட ஒற்றுமை'யே என்பது நமக்குப் புரியும்.**





படிப்பகம்

www.padippakam.com

அம்பேத்கர் வலியுறுத்தும் ஒற்றுமை எது? 'கற்பி, போராடு, ஒன்று சேர்' என்று அவர் சொல்லியுள்ள வரிசையில் வைததுப் பார்த்தால், அவர் முன்மொழியும் ஒற்றுமை 'போராட்ட ஒற்றுமை'யே என்பது நமக்குப் புரியும். போராட்டத்தால் ஒன்றுபடுவோம் என்பதே அதன் பொருள்.

*எதற்கான போராட்டம்?*

இன்றைய நாடுகள், சமூகங்கள் அனைத்தும் ஏற்றத் தாழ்வுகளாய் நிரம்பிக் கிடக்கின்றன. லஞ்சமும், ஊழலும், சுரண்டலும் இன்றைய வாழ்க்கை முறையாகவே ஆகிவிட்டன.

இவைகளை எதிர்த்துப் போராடுவதும், அப்படித் தனித்தனியாகப் போராடுகின்றவர்கள், ஒருவரையொருவர் கண்டறிந்து பிறகு ஒன்றுபடுவதும்தான் போராட்ட ஒற்றுமை ஆகும். வரலாற்றில் இப்படித்தான் நிகழ்ந்துள்ளது.

சாதியச் சமூக ஒடுக்குமுறைகளை எதிர்த்து, வெவ்வேறு பகுதிகளில் தனித் தனியாகப் போராடிக் கொண்டிருந்த அண்ணல் அம்பேத்கரும், தந்தை பெரியாரும் ஒருவரையொருவர் கண்டறிந்தனர், ஒன்றுபட்டனர்.

ஈழப் போராட்டத்திலும், எழுபதுகளின் தொடக்கத்தில், பல்வேறு குழுக்கள் பல்வேறு பெயர்களில் தனித்தனியே போராடிக் கொண்டிருந்தனர். புலிகள் என்ற பெயரில் அவர்கள் ஒன்றுபட்டது அதற்குப் பிறகுதான்.

எனவே, ஒற்றுமைக்கான முன் நிபந்தனைகளைத் தவற விட்டுவிட்டு, 'எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்' என்று அறிவுரை செய்வது, பல நேரங்களில் பயனற்றே போகும்.

ஒற்றுமை, மனித நேயம் எல்லாமே நல்ல குணங்கள்தாம். எனினும் யாருடன் ஒற்றுமை, யாரிடம் மனித நேயம் என்ற வினாக்களுக்கு வரும் விடைகளைப் பொறுத்தே அவர்களை நாம் மதிப்பிட முடியும்.

அடிபடுகின்றவனுக்கு உடல் வலிக்குமே என்னும் மனித நேயமா அல்லது அடிக்கின்றவனுக்குக் கை வலிக்குமே என்னும் 'மனித நேயமா' - இவற்றுள் எது நம்மிடம் உள்ளது என்பது மிக முக்கியமானது.

இருவருக்காகவும் கவலைப்படும் 'தாராளவாத மனித நேயர்'களும் இங்கு உண்டு.

நாம் எந்தப் பக்கம் என்பதைத் தெளிவாக முடிவெடுக்க வேண்டும். ஒடுக்கப்படும் மக்களிடம் மனித நேயம் கொண்டு அவர்களுக்குக் கற்பித்து, அவர்களுக்காகப் போராடி, அவர்களுடன் ஒன்று சேர்வதே அம்பேத்கர் கூறிய முழக்கச் சொற்களின் அடி நாதம் என்பதை நாம் உணர வேண்டும்.

இந்த உணர்வு என்னிடம் இன்னொரு தெளிவையும் உண்டாக்கியது.

கடந்த ஓரிரு ஆண்டுகளுக்குள், கருத்து வேறுபாடு, தனிமனிதப் புரிதல்கள் இன்மை முதலான காரணங்களால், சில அமைப்புகளிலிருந்தும் சில நண்பர்களிடமிருந்தும் நான் பிரிய நேரிட்டது.

அப்போதெல்லாம் எனக்குள் ஒரு வருத்தம் இருந்தது. உலகத் தமிழர்களை ஒன்றுபடுத்த வேண்டும் என்று விரும்புகின்ற நம் போன்ற தோழர்களாலேயே, நமக்குள் கூட ஒற்றுமையை நிலைநாட்ட முடியவில்லையே என்ற வருத்தம். 'சேர்க்கை எல்லாம் பலம், பிரிவெல்லாம் பலவீனம்' என்று நான் கருதிக் கொண்டிருந்த காரணத்தால், பிரிந்து பிரிந்து நாம் அனைவரும் பலவீனப்படுகின்றோமே என்ற வருத்தம்.

அப்படி வருத்தப்பட வேண்டியதில்லை என்று இப்போது தோன்றுகிறது. சேர்க்கை பலம்தான்; எனினும் சேர்க்கைகள் எல்லாம் பலம் அல்ல. பிரிவு பலவீனம்தான்; எனினும் பிரிவுகள் எல்லாம் பலவீனம் அல்ல.

சேர வேண்டியவர்களோடு சேர்வது பலம். பிரிய வேண்டியவர்களிடமிருந்து பிரிவதும் பலம்.

● ●

நண்பர்களே!

கடந்த பத்து மாதங்களாக, என் நெஞ்சில் எழுந்த சித்திரங்களையும், அவை உடைந்த விதங்களையும் உங்களோடு நான் பகிர்ந்து கொண்டேன்.

இப்போது -

பழைய சித்திரங்கள் மங்கி, புதிய சித்திரங்கள் பொலிவு பெற்றுக் கொண்டுள்ளன.

புதிய சித்திரங்கள், இனி எந்தக் காலத்திலும் உடையாது என்பதற்கும் எவ்வித உத்தரவாதமும் இல்லை.

தோன்றும், வளரும், உடையும், மீண்டும் தோன்றும், வளரும்... இவை தானே சிந்தனைச் சித்திரங்களின் இயல்பு. மாற்றம் ஒன்றைத் தவிர, மாறக்கூடியவைகள்தாமே மற்றவை யாவும்!

ஒன்றே ஒன்று... நம் மாற்றங்கள் வளர்ச்சியை நோக்கிய மாற்றங்களாக இருக்கட்டும். ●

*- முற்றும்*



## கருணாமிர்த சாகரம்

என்னும் இசைத் தமிழ் நூல்

• மொத்த பக்கங்கள்: 1365 • விலை: ரூ. 1,200 • நூல் வேண்டுவோர், 'தமிழ் மண் பதிப்பகம் சென்னை 14' என்ற பெயரில் வங்கி வரைவு எடுத்து அனுப்பவும். முகவரி : தமிழ் மண் பதிப்பகம் 293, திரு.வி.க. நெடுஞ்சாலை, அகமது வணிக வளாகம், ராயப்பேட்டை, சென்னை - 14 தொலைபேசி : 831 21 75

மறைமலை அடிகள், திரு.வி.க. போன்ற தமிழ்ச் சான்றோர்களால் பெரிதும் பாராட்டப் பெற்ற 'கருணாமிர்த சாகரம்' என்னும் இசைத் தமிழ் ஆராய்ச்சி நூல், 1917இல் முதன் முதலாக வெளிவந்தது. இந்நூலை இயற்றியவர் தஞ்சையில் வாழ்ந்த, தமிழ் இசையில் தலைசிறந்து விளங்கிய ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் ஆவர்.

பண்டைத் தமிழகத்தைக் கடல் கொள்வதற்கு முன்பே, அதாவது முதற் சங்க காலத்திற்கு முன்பே இசை பற்றிய நுணுக்கமான ஆராய்ச்சிகளைத் தமிழர்கள் செய்துள்ளனர் என்பதும், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய அய்வகை நிலங்களுக்கும் வெவ்வேறான பண்புகள் இருந்துள்ளன என்பதும், இதுபோன்ற பல அடிப்படைச் செய்திகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

சரிகமபதநி என்ற ஏழு சுரங்களும் தமிழே என்பதையும், சமஸ்கிருதம் அன்று என்பதையும் - உறுதியான சான்றுகளுடன் அறுதியிட்டுக் கூறியுள்ளார் ஆபிரகாம் பண்டிதர்.

இந்நூலின் அருமையும் பெருமையும் கருதி, தமிழ் மொழிக் காவலர் திரு.கோ. இளவழகன் அவர்களின் முயற்சியால் இந்நூல் மறுபதிப்பு செய்யப்பட்டு, விற்பனையில் உள்ளது.

குறிப்பு : நூலகங்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும், இசைச் சங்கங்கள் மற்றும் இசைத் தமிழ் அமைப்புகளுக்கும், விற்பனையாளர்களுக்கும் உரிய கழிவு உண்டு. ■



படிப்பகம்

www.padippakam.com

# "எழுத்து - எதிர்ப்புணர்வுக்கான ஆயுதம்"

பாமா

**சிறுகதை மற்றும் நாவலுக்கென வரையறுக்கப்பட்ட எந்த கட்டமைப்புமின்றி, புது வடிவியல் ரீதியில் - தலித் மொழி, தலித் பெண்ணிய மொழியை நோக்கிப் பயணப்பட்டிருப்பவர் பாமா. இவரது படைப்புகளில் கதாபாத்திரங்களின் எதிர்ப்புணர்வைப் படிக்கும் போது, நமக்கும் அந்த தாக்கம் வந்துவிடுவதைத் தவிர்க்க முடியாது. 2000 ஆண்டின் 'கிராஸ் வேர்ட் புக்' விருதைப் பெற்றிருக்கும் இவர், அவ்விருதை தலித் இலக்கியத்திற்கான அங்கீகாரமாக மட்டுமல்லாமல் - தலித் மக்களுக்கான அங்கீகாரமாகக் கருதுகிறார். 'தலித் முரசு'க்காக அவரை சந்தித்தபோது...**

சந்திப்பு : **கனல்**

***◇ கன்னியாஸ்திரியாக இருந்த நீங்கள், அதிலிருந்து வெளியேறுவதற்கான காரணம் என்ன?***

நான், அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராக இருந்தேன். கன்னியாஸ்திரியாகப் போனால் அதிகாரம் வரும், வசதி இருக்கும், அதன் மூலம் தலித் குழந்தைகளுக்கு, மக்களுக்கு உதவி செய்யலாம் என்று நினைத்தேன். உதவின்னா பொருளாதார உதவியில்லை. அவர்களுக்குச் சிறப்பாக சொல்லிக் கொடுத்து, வாழ்க்கை லட்சியத்தோடு உருவாக்கலாம் என்று நினைத்தேன். அதனால் ஆசிரியர் வேலையை விட்டு விட்டு கன்னியாஸ்திரியாக ஆனேன்.



ஆனால், அங்கு போன பிறகு எனக்கு அந்த மாதிரியான வாய்ப்பு எதுவும் கிடைக்கவில்லை. வசதியான குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிற வாய்ப்புதான் கிடைத்தது. அங்கேயும் நான் ஆசிரியராக மட்டுமே இருக்க முடிந்தது. எனக்கும் மக்களுக்குமான தொடர்பு கொஞ்சம் கொஞ்சமா விடுபட்டுப் போய்விட்டது. எந்த நோக்கத்திற்காக அங்கே போனேனோ அதற்கும் நான் வாழ்ந்த கன்னியாஸ்திரி வாழ்க்கைக்கும் சம்பந்தமில்லாமல் இருந்தது. அது மட்டுமல்ல, ஒதுக்கப்பட்ட மக்களிடம் அவங்களோட நடவடிக்கை என்ன மாதிரி இருக்கிறது என்று பார்க்கிறப்ப - எனக்கு அவர்களோடு கருத்து வேறுபாடு ஏற்பட்டது. பண்பாட்டு ரீதியிலும் நிறைய முரண்பாட்டை உணர்ந்தேன்.

'இன்டர் நேஷனல்' சபையைக் கூட 'லோக்கலைஸ்டு' பண்றாங்கன்னா, இங்க இருக்கிற மக்களோடும் பண்பாட்டோடும் இணைய வேண்டும். ஆனால், அவர்கள் அப்படிச் செய்ய மறுக்கிறார்கள்; நம்மைத்தான் அவர்கள் மாற்றப் பார்க்கிறார்கள்.

***◇ ஒரு தலித் என்கிற முறையில் 'கான்வென்ட்டில்' என்ன மாதிரியான வேறுபாட்டை உணர்ந்தீங்க?***

எனக்குத் தனிப்பட்ட முறையில் எந்த வேறுபாடும் இல்லை. என்னோட சான்றிதழில் சாதி கிடையாது என்பதால், நான் தலித்துன்னு அவர்களுக்குத் தெரியாது. நானே சொன்னால் தான் ஆச்சு. அப்படிச் சொல்வதற்கான சந்தர்ப்பம் வரலை. ஆனால், மற்ற தலித் வேலைக்காரர்கள் மற்றும் வறுமையில் இருப்போர்களிடம் அவர்களுடைய தொடர்பு, அணுகுமுறை எனக்குப் பிடிக்கவில்லை.

பண்பாட்டு ரீதியாகப் பார்க்கும் போது, உதாரணத்துக்கு ஓட்டலல்ல போய் ஆயிரம் இரண்டாயிரம்ன்னு செலவு செய்வது, எனக்கு 'கிரிமினல் வேஸ்டா' தோணுச்சு. அதை வச்சு ஒரு மாதம் இரண்டு மாதத்துக்கு ஒரு குடும்பத்தோட பசியைப் போக்கிடலாம். ஆனால், அது அவர்களுக்கு சாதாரணமாகத் தெரிகிறது. அப்படியொரு வாழ்க்கை வாழ்வதை, ஒரு குற்றமாக உணர்ந்தேன். நான் 'கான்வென்ட்டை' விட்டு வெளியே வருவதற்கு இந்த மாதிரி நிறைய காரணங்கள் இருந்தன.

***◇ இந்து மதம் சாதி அமைப்பைக் கட்டிக் காக்கிறது என்று சொல்லி தொடர்ந்து மதமாற்றம் வலியுறுத்தப்படுகிறது. கிறித்துவமோ இஸ்லாமோ - தலித் மக்களின் நிலைமைகளை மாற்றும் என்று நினைக்கின்றீர்களா?***



படிப்பகம்

www.padippakam.com



மாற்றவில்லை என்பதைத்தான் என்னோட வாழ்க்கையிலேயே பார்த்தேன். என்னைப் பொறுத்தவரைக்கும் எந்த மதமும் விடுதலைக்கான மதம் இல்லை. மதம், மக்களை மழுங்கடிக்கத்தான் செய்கின்றது. அதனால் மதமே வேண்டாம் என்று சொல்கிறேன்.

**◇ உங்களுக்குள் தலித்திய சிந்தனை வந்ததற்கான பின்னணி என்ன?**

தலித்திய சிந்தனை என்பது இறக்குமதி செய்யப்படுவதில்லை. நான் ஒரு தலித். அதைவிட வேறென்ன வேண்டும். நான் பிறந்ததிலிருந்து என்னோட ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒடுக்கப்பட்டுதான் வருகிறேன். நான் படித்து வேலை பார்க்கிறேன் என்பதாலேயே எனக்கு விடுதலை கிடைத்து விடவில்லை. எல்லோரும் சமம் என்று சொல்லிதான் நான் வளர்க்கப்பட்டிருக்கிறேன். எனக்குள் தலித் சிந்தனை முனைப்போடு வந்ததற்கு, என்னுடைய அண்ணன் ராஜ்கவுதமனும் ஒரு காரணம். சின்ன வயசிலிருந்தே அவர் என்னிடம் சொல்வார்: 'பிறப்பால நாம இந்த ஜாதின்னு ஆகியாச்சு. அதை மாற்ற முடியாது. ஆனால், படித்து முன்னேறிட்டோம்னா நம்மைத் தேடி வருவாங்க' என்பார்.

**◇ பேச்சு மொழி - ஒடுக்கப்பட்டவர்களுக்கான மொழி என பழைய இலக்கியங்களிலிருந்து மீடியா வரை சித்தரிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் அதை ஏற்றுக் கொள்கிறீர்களா?**

எனக்கு அதில் உடன்பாடு இல்லை. முதலில் இந்தப் பழைய இலக்கியங்கள் முதல் 'மீடியா' வரை அனைத்தையும் கையில் வைத்திருந்தவர்கள் தலித் அல்லாதவர்கள். (அதாவது பார்ப்பனர்கள், வெள்ளாளர்கள்) மதிப்பீடுகள், பழக்க வழக்கங்கள் என எல்லா விசயத்திலும் கடைசியில் அவங்க சொல்வதுதான் தீர்மானமா வந்திடும். அவங்க என்ன சொல்றாங்களோ அதைத்தான் நாம செய்ய வேண்டும். அவங்க சொல்றாங்க என்பதற்காக, இது இழிவான மொழியாகிவிடாது. பார்ப்பனர்கள் 'அவாள்', 'இவாள்', 'வர்றச்ச', 'போறச்ச'ன்னு பேசுறாங்க. அதை 'மாஸ் மீடியா'வில் காட்டுகிறார்கள். அதையும் நாம் பார்த்து ரசிக்கிறோம். அது மாதிரி நானும் என்னுடைய மொழியை கவுரவமாக மதிக்கிறேன். இது மக்கள் மொழி. இது தான் நல்ல மொழின்னு நினைக்கிறேன்.

**◇ 'கருக்கு' நாவலை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் போது, ஏதாவது மொழிச் சிக்கல் வந்தது என்று சொன்னார்களா?**

மொழிச் சிக்கல் மட்டுமல்ல; சில நிகழ்வுகள், வாழ்க்கைச் சம்பவங்கள் கூட புரியாமல் இருந்தது. ஆனால் நாங்கள் இது குறித்து பலமுறை பேசி முடிவு செய்தோம்.

**◇ இரண்டாயிரம் ஆண்டின் 'கிராஸ் வேர்ட் புக்' விருது உங்களுக்குக் கிடைத்தது, தலித் இலக்கியத்திற்கான அங்கீகாரம் என்று நினைக்கின்றீர்களா?**

தலித் இலக்கியத்திற்கான அங்கீகாரம் என்பதோடு, என் மக்களுக்கு - அவர்களின் வாழ்க்கைக்கு கிடைத்த அங்கீகாரமாகத்தான் நினைக்கிறேன். இலக்கிய ரீதியில் எப்படி எடுத்துக்கிறாங்க என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. என்னுடைய கதை பரவலாக்கப்பட்டு இன்னும் பரந்த வாசகர்களைச் சென்றடைகின்றது என்னும்போது, எனக்கு அது மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றது.

> **"சாதியை ஏத்துக்கும்போது ஒரு வீம்பு, வைராக்கியம் வரத்தான் செய்யுது. யாராவது சாதியைக் கேட்கும் போது, எஸ்.சி.ன்னு சொல்றதா, 'அரிஜன்னு' சொல்றதான்னு கஷ்டமா இருக்கும். ஏதோ தப்பு செய்துவிட்டதுபோல உணர்வு வரும். அதையே, என்ன சாதி என்று கேட்டால் - பறையன் என்றோ, பள்ளன் என்றோ, சக்கிலியன் என்றோ சொல்லிப் பாருங்க. கேட்டவனுக்குப் பட்டுன்னு போயிடும். அதிர்ச்சியை ஏற்படுத்தும். இது கூட ஒரு கலகக் குரல்தான்."**

**◇ தமிழ்ப் பத்திரிகைகள் இந்த விருது பற்றி எந்த செய்தியும் வெளியிடவில்லையே ...?**

பொதுவாக, ஒரு எழுத்தாளராக தமிழக அளவில் நான் தெரிந்திருந்தாலும் கூட, இவங்க தீர்மானித்து வைத்திருக்கின்ற இலக்கிய வட்டத்துக்குள் நான் வரவில்லை; அந்த 'இலக்கிய அரசியலுக்குள்' என்னை நுழைத்துக் கொள்ளவும் இல்லை. அது எனக்குப் பிடிக்காத ஒன்று. அப்படி இருப்பதால் தான் நான் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறேன். இலக்கியக் கூட்டம் என்று சொன்னாலே சண்டை சச்சரவுதான். இப்ப கூட 'சாகித்ய அகாதமி' விருது கொடுத்தது தொடர்பா வர்ற சண்டைகளும், விவாதங்களும் அருவருப்பாக இருக்கின்றது.

**◇ உங்கள் எழுத்து, கட்டுரைத் தன்மையோடு இருக்கிறது என்று வருகின்ற விமர்சனம் பற்றி என்ன சொல்றீங்க?**

என்னுடைய நாவலை நாவலே இல்லை என்றுகூட சொல்றாங்க. ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிற மாதிரி சிறுகதைன்னா இப்படி இருக்க வேண்டும், நாவல்ன்னா இப்படி இருக்க வேண்டும், கவிதைன்னா இப்படி இருக்கணுங்கிற வரைமுறையை வைத்துக் கொண்டு, அதுக்குள்ள கட்டுப்பட்டு எழுத வேண்டாம் என்று தோன்றுகிறது. 'கருக்கு' வேண்டுமென்றே மாற்றி எழுத வேண்டும் என்று தான் அப்படி எழுதினேன். அதை சுய சரிதைன்னும் முத்திரை குத்த முடியாது; அது ஒரு நாவல் என்றும் முத்திரை குத்த முடியாது. ஏற்கனவே இருக்கிற மாதிரியான வடிவம் வைத்துக் கொள்ள வேண்டாம் என்று நினைத்து அப்படி எழுதினேன்.

**◇ விமர்சனங்களை நீங்கள் எப்படி எடுத்துக் கொள்கிறீர்கள்?**

கருத்து ரீதியில் விமர்சனம் செய்தால், அதுக்கு ரொம்ப முக்கியத்துவம் கொடுப்பேன். வடிவம், மொழி, அழகியல் பற்றி விமர்சனம் வந்தால் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டேன். மொழி பற்றி அவங்க விமர்சனம் செய்யும் போதுதான், வீம்பா பேச்சு மொழியிலேயே எழுத வேண்டும் என்று தோன்றும்.

**◇ தமிழ் இலக்கியச் சூழலில் பாமாவின் இடம் என்ன?**

தவிர்க்க முடியாதது; என்னை ஒதுக்கணும்னு சொன்னாக் கூட ஒதுக்க முடியாது.

**◇ எழுத்து உங்களுக்கு என்னவாக இருக்கிறது?**

எதிர்ப்புணர்வைக் காட்டுகிற ஆயுதமாக - விடுதலைக்கான வழியாக இருக்கின்றது. சமூகக் காழ்ப்புணர்ச்சிகளை, முரண்பாடு



படிப்பகம்

> "பெண்களுக்கான மொழியே நமக்குக் கிடையாது. தொல்காப்பியத்திலிருந்து எடுத்துக் கொண்டீர்கள் என்றால் மொழி என்பது ஆண்கள் தங்களுடைய அதிகாரத்தைக் கட்டமைப்பதற்காக உருவாக்கப்பட்டதாக இருக்கிறது. எல்லா இலக்கியங்களிலும் ஆணை மய்யப்படுத்திய மொழியே உள்ளது."

களை மனசுக்குள் அடைத்து வைத்துக் கொள்வது கடினமாக இருக்கின்றது. எழுத்து அதற்கெல்லாம் வடிகாலாக உள்ளது.

**◇ தலித் விடுதலையை எழுத்து மட்டும்தான் தீர்க்குமா?**

எழுத்து மட்டும் தீர்க்காது. எழுத்தும் தீர்க்கும்.

**◇ தலித் அரசியல் பற்றி உங்களுடைய கருத்து என்ன?**

தலித் மக்களுக்கென்று ஒரு கட்சி கண்டிப்பாக வேண்டும். திரும்பத் திரும்ப அம்பேத்கர் அதைத்தான் சொல்கிறார். "அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும்வரை நாம் அடிமைகளாகத்தான் இருப்போம்." எனவே, அடிமைத்தனம் நீங்க வேண்டும் என்றால், அரசியல் அதிகாரம் தேவை. ஆனால், எனக்குள் இருக்கிற ஆதங்கம் என்னவென்றால் - எல்லா தலித் கட்சிகளும் ஒன்று சேர்ந்து செயல்பட்டால் நன்றாக இருக்கும். அதை விட்டுவிட்டு இவங்க ஆளுக்கொரு பிரிவாக இருப்பது வருத்தமாக இருக்கின்றது.

**◇ தலித் அரசியல் மாதிரி மற்ற சாதிக் கட்சிகளுக்கான (பா.ம.க.) தேவையும் இருக்குன்னு நினைக்கிறீர்களா?**

பா.ம.க.வில் ஆரம்பத்தில் தலித் மக்கள் இருந்தார்கள். இப்பதான் அது தனிப்பட்ட வன்னியர் பிரிவா வந்திருக்கு. எப்ப தலித் எழுச்சி வந்துவிடுகிறதோ, அப்பொழுதே அதை அடக்குவதற்கான சக்தியும் முன்பைவிட பலமாக வரும். நமக்கு அரசியல் அதிகாரம் வந்துவிட்டால், நம்மை அவர்களால் ஒதுக்க முடியாது. அப்புறம் எப்படி அவர்கள் தலித் மக்களை வளர விடுவார்கள்; நிமிர விடுவார்கள். அதனால் தேவை என்று இல்லை என்றாலும் நாம் எழுந்திருக்கிறோம் என்று சொன்னாலே - மற்ற சாதிக்காரர்கள் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடுவார்கள்.

**◇ தலித் அரசியலில் பெண்களின் பங்களிப்பு எந்தளவுக்கு உள்ளது?**

அவ்வளவாக இல்லை. தலித் அரசியலைப் பொறுத்தவரை, ஆண்களே இப்பொழுது தான் நுழைஞ்சிருக்காங்க. பெண்களை கொஞ்சம் கொஞ்சமாக உள்ளிழுக்க வேண்டும்.

**◇ சாதியே இல்லாமல் போகணும்னா என்ன வழி?**

இப்ப வர்ற 'அல்டிமேட்' எல்லாமே சாதி ஒழிப்புதான் என்றாலும் கூட, தமிழகச் சூழலில் சாதியைத் தவிர்க்க முடியவில்லை. நான் விரும்பி இந்த சாதியில் வரவில்லை. இவங்க இழிவு என்று சொல்வதால் நான் இழிவாகிவிட மாட்டேன். பார்ப்பனர், நாயுடு, ரெட்டியார் என்று சாதிப் பெயர் போட்டுக் கொள்கிறார்கள். அதைப் போல நானும் சாதியை ஒத்துக் கொள்கிறேன். சாதியை ஏத்துக்கும் போது ஒரு வீம்பு, வைராக்கியம் வரத்தான் செய்யுது. யாராவது சாதியைக் கேட்கும் போது, எஸ்.சி.ன்னு சொல்றதா, 'அரிஜன்னு' சொல்றதான்னு கஷ்டமாக இருக்கும். ஏதோ தப்பு செய்துவிட்டதுபோல உணர்வு வரும். அதையே, என்ன சாதி என்று கேட்டால் - பறையன் என்றோ, பள்ளன் என்றோ, சக்கிலியன் என்றோ சொல்லிப் பாருங்க. கேட்டவனுக்குப் பட்டுன்னு போயிடும். அதிர்ச்சியை ஏற்படுத்தும். இது கூட ஒரு கலகக் குரல்தான்.

**◇ பெண்ணிய எழுத்து, பெண் மொழி என்பது எந்த அளவுக்கு உணரப்பட்டிருக்கிறது?**

பெண்களுக்கான மொழியே நமக்குக் கிடையாது. தொல்காப்பியத்திலிருந்து எடுத்துக் கொண்டீர்கள் என்றால், மொழி என்பது, ஆண்கள் தங்களுடைய அதிகாரத்தைக் கட்டமைப்பதற்காக உருவாக்கப்பட்டதாக இருக்கிறது. எல்லா இலக்கியங்களிலும் ஆணை மய்யப்படுத்திய மொழியே உள்ளது. ஆங்கிலத்தில் பெண் எழுத்தாளர்கள், பெண் எழுத்து எல்லாம் 'ஸ்ட்ராங்கா' வந்துவிட்டது.



ஆனால், இங்கு இப்பொழுது தான் அதைப்பற்றிய சிந்தனை, தெளிவு, கவனம், தேவை உணரப்பட்டிருக்கிறது. அப்படி பெண் மொழி தோன்றும் போது கருத்தாடல், கதை சொல்கிற முறை எல்லாவற்றிலும் வேறுபாடு இருக்கும். இப்பொழுது இருப்பது ஆண் மொழி என்றால், அதற்கு நேரெதிராக அதிகாரக் கட்டமைப்பில் தலைகீழ் மாற்றத்தை ஏற்படுத்துவதாகப் பெண் மொழி இருக்கும்.

**◇ பெண் எழுத்தாளர்கள் நிறைய பேர் எழுத வந்தும் - ஏன் பெண் மொழி உருவாக்கப்படவில்லை?**

பெண் எழுத்தாளர்கள் எழுத ஆரம்பித்தும் - ஆண் மொழியைத்தான் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். குடும்பம், இலக்கியம் எல்லாமே ஆணை மய்யப்படுத்தி இருப்பது தான் அதற்குக் காரணம். பெண் எழுத்தாளர்களும் ஆண் எழுத்தாளர்களையே முன் மாதிரியாக வைத்து எழுதியிருக்கிறார்கள். இப்பதான் வேற மாதிரியாக சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

**◇ தலித் சினிமா, தலித் கலை, தலித் எழுத்து இவற்றைப் பரவலாக மக்கள் மத்தியில் எடுத்துக்கொண்டு போவதில் உள்ள சிக்கல் என்ன?**

வர்ணாசிரம அடிப்படையில் பார்ப்பனர்கள் என்ன வைத்திருக்கிறார்களோ, அது உயர்வாகத்தான் கருதப்படுகிறது. பறையை பார்ப்பனர்கள் அடித்திருந்தார்கள் என்றால், அதுவே உயர்வாக இருந்திருக்கும். கர்நாடக சங்கீதத்தை தலித் மக்கள் வைத்திருந்தார்கள் என்றால், அது இழிவானது என்று ஒதுக்கியிருப்பார்கள். கலை, அடிப்படையில் சாதியை வைத்துதானே தீர்மானிக்கப்படுகின்றது.

மொழிச் சிக்கல்னு சொல்றாங்க. சென்னை மொழி, கோவை மொழி, தேவர், கவுண்டர், பார்ப்பனர் மொழியெல்லாம் மக்கள் மத்தியில் சென்று சேருகின்றது. ஆனால், 'தலித் மொழி' பேசினால் மட்டும் சிக்கல் வருவதாக நினைக்கிறார்கள். ஏன் நம்ம மொழி போய்ச் சேராதா?

**◇ அந்த மொழிகள் எல்லாம் காலங்காலமாக இருப்பதால் அதற்கு அங்கீகாரம் இருக்கிறதா?**

காலங்காலமாக இருந்தால் மட்டும் நீங்கள் அங்கீகாரம் கொடுப்பீர்கள். புதிதாக வந்தால் கொடுக்க மாட்டீர்கள். அப்படியானால் நாங்களும் ஆரம்பித்து அதையே காலங் காலமாகக் கொண்டு வருவோம்.

**◇ ஒதுக்கப்பட்ட எல்லோரும் பெண்கள் உட்பட 'தலித்'என்று சொல்கிறோம். நீங்கள் 'தலித்' என்று யாரை சொல்கிறீர்கள்?**

www.padippakam.com



ஒரு சிலர், ஒதுக்கப்பட்ட - ஒடுக்கப்பட்ட எல்லோரும் தலித் என்று சொல்கிறார்கள். இச்சொல்லுக்கு 'மண்ணின் மாந்தர்கள்' என்று பொருள் வரும். இப்பொழுது பள்ளர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், நாங்க தலித் கிடையாது; தேவேந்திர குல வேளாளர்கள் என்கிறார்கள். தலித் என்றாலே பறையன் என்றுதான் நினைக்கிறார்கள். எது அப்படி நினைக்க வைக்கின்றது? தேவேந்திர குல வேளாளர்கள், நாங்கள் பறையரை விட உயர்ந்தவர்கள் என்று சொல்ல வேண்டும்; அதற்காகத்தானே. டாக்டர் கிருஷ்ணசாமி நல்ல நிலைமையில் இருக்கார் என்பதாலேயே - எல்லா பள்ளர்களும் அப்படியிருக்காங்கன்னு சொல்ல முடியாது. தேவேந்திர குல வேளாளர்கள் என்ற பேரினால், தலித் தன்மை அழிந்து போய்விடும் என்பதும் நடைமுறையில் இல்லையே.

**◇ அவர்களும் ஒடுக்கப்பட்டுத்தானே இருக்காங்க?**

அவர்கள் பிரச்சினையை அனுபவித்தாலும் - நாங்க மாட்டுக்கறி சாப்பிட மாட்டோம், அதனால் நாங்கள் தலித் இல்லை என்று நினைக்கிறாங்க. ஆண்டுகள் ஆக ஆக, உட்பிரிவுகள் அதிகமாகிக் கொண்டே போகின்றதே தவிர குறைந்தபாடில்லை. முன்பு பள்ளன், பறையன், சக்கிலியன் அனைவரும் ஒன்று சேரலாம் எனும் முனைப்போடு இருந்தார்கள். அந்த உத்வேகம் இப்பொழுது இல்லாமல் போய்விட்டது என்று தோன்றுகிறது. தங்களுக்குள்ளேயே தனித்தனி அடையாளங்கள், பண்பாடுகள், இருப்பதாக நினக்கிறார்கள்; அப்படியே இருக்கவும் விரும்புகின்றார்கள்.

**◇ உங்களுக்கு கடவுள் நம்பிக்கை இருக்கின்றதா?**

இருக்கு. இல்லை. இரண்டுமே. நான் கான்வென்ட்டி'லிருந்து வெளியே வந்த பிறகு வெளிச்சடங்குகளில் வெளிப்படையாக ஈடுபட வில்லை. ஆனால், ஏன் கடவுள் நம்பிக்கை இருக்கிறது என்று சொல்கிறேன் என்றால், எனக்கு ஏசு மேல் தனிப்பட்ட பிரியம் இருக்கு. அவருடைய புரட்சிகரமான கருத்துகள், மதிப்பீடுகள் மீது ஒரு ஈர்ப்பு இருக்கின்றது. அவர் வாழ்ந்த காலகட்டத்தில், ஓரங்கட்டப்பட்ட - ஒதுக்கப்பட்ட மக்களிடம்தான் உறவாடியிருக்கிறார். அது எனக்கு அவரிடம் பிடித்த விசயம்.

அம்பேத்கரைக் கூட கடவுள் என்று சொல்கிறார்கள். அதைப் போலத் தான் ஏசுவும். அவர் கருத்துகள் மூலம் எனக்கொரு முன்னுதாரணமாக இருக்கிறார். அதுவும் இல்லாமல் ஏசு எனக்கு முதலில் கடவுளாகத்தானே அறிமுகமானார். கடவுள் நம்ம சக்திக்கு அப்பாற்பட்டது என்னும் போது, என் சக்தியை ஊக்கப்படுத்துவதையும் நான் கடவுள் என்று சொல்கிறேன்.

**◇ ஏசு வேண்டும்; ஆனால் மதம் வேண்டாம் என்றால் எப்படி?**

இல்லை. நீங்க ஏசுவை மதத்துக்குள்ள சிறை வச்சிருக்கீங்க. நான் மதத்துக்குள் இருக்கிற ஏசுவைப் பற்றியே பேசவில்லை. ஏசு என்றாலே மதம்தான் என்று நீங்கள் முடிவு செய்யக் கூடாது. அதைப்போல, ஏசு ஆரம்பித்தது மதம் இல்லை. அது ஒரு இயக்கம். இப்ப இருக்கிற மதவாதிகள், ஏசுவை அவர்களுக்கு ஏற்ற மாதிரி பயன்படுத்திக் கொண்டு அவருடைய புரட்சிகரமான விசயங்களை மக்களிடம் காட்டுவது இல்லை. வரலாற்றில் ஏசுன்னு ஒரு மனிதர் பிறந்து புரட்சிகரமாக வாழ்ந்திருக்கிறார். அவருடைய கருத்துகள் எனக்குப் பிடிக்கிறது. ஆனால், அவரை எனக்கு கடவுளாகக் காட்டினார்கள், எனக்கு ஏசு யார்; மதம் என்ன, போதனைகள் என்ன என்று நன்றாகவே தெரியும். நான் தெளிவாக இருக்கிறேன்.

கீழே இருக்கிற மக்களுக்கு ஒரு நம்பிக்கை தேவைப்படுகிறது. ஏசு வேற, மதம் வேற என்கிற இதே கருத்தை நானும் மக்களிடம் வைத்திருக்கிறேன். அதை அவர்களால் தாங்கிக்க முடியவே இல்லை. அவங்களுக்கு அடிப்படையாக இருக்கிற ஒன்றை உடைச்சிட்டு அதுக்கு மாற்று என்ன கொடுக்கிறீங்க. அவங்களோட நம்பிக்கைகள் சில ஆழமானது; உணர்வுப்பூர்வமானது. அதையெல்லாம் உடனடியாக உடைக்க முடியாது; உடைக்கவும் கூடாது.

**◇ பெண்களுக்கான இட ஒதுக்கீடு உள் ஒதுக்கீடுன்னு பேசினாலும் - அரசியலில் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லையே?**

பொதுவாக இவர்களுக்குப் பெண்கள் வெளியில் வரக்கூடாது. அதுவும் தலித் பெண்கள் இருக்கிற இடமே தெரியக் கூடாது. நியாயப்படிப் பார்த்தால், பெண்களுக்கு 50 சதவிகிதமே கொடுக்க வேண்டும். 33 சதவிகித இட ஒதுக்கீடு கொடுக்கும் போது, தலித் பெண்களுக்கான உள் ஒதுக்கீடு கண்டிப்பாகத் தேவை. அரசு, தலித் மக்களைக் கண்டு கொள்வது இல்லை. நாம் அதற்கெல்லாம் பயந்துக்கிட்டு ஒதுங்கக் கூடாது. நமக்கு நாமே பாதுகாப்பை எப்படி அமைத்துக் கொள்வது என்பதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

**◇ குடும்ப அமைப்பு பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

இப்ப சமுதாயத்தில் இருக்கிற குடும்ப நிறுவன அமைப்பில் எனக்கு உடன்பாடு இல்லை. மறுபடியும் ஆண் தலைமை. எல்லாவற்றையும் தீர்மானிக்கிறவர்களாக ஆண்களே வருகிறார்கள். பெண்கள் இரண்டாம் பட்சம் தான். குடும்ப அமைப்பே வேறு மாதிரி இருக்க வேண்டும். அது எப்படி இருக்கவேண்டும் என்று என்னிடத்தில் கேட்காதீர்கள். ஆனால், இது சரியில்லை என்று மட்டும் தெரியும்.

**◇ ஒரு பெண்ணுக்குத் திருமணம் கண்டிப்பாகத் தேவையா?**

கண்டிப்பாகத் தேவையில்லை. திருமணம் இல்லாமலும் வாழலாம். ஒரு கணவனுக்கு, நல்ல மனைவியை உற்பத்தி செய்கின்ற இடமாக மட்டுமே குடும்பம் இருக்கிறது. அது மாற வேண்டும். ஒரு குடும்பத்தில் ஆண் மாதிரியே பெண்ணும் வளர்க்கப்பட வேண்டும். ஆண் மனிதனாக வளர்க்கப்படுகிறான். பெண் அடிமையாக வளர்க்கப்படுகிறாள். இந்த வளர்ப்பு முறையில் மாற்றம் வர வேண்டும்.

> “கணவனுக்கு நல்ல மனைவியை உற்பத்தி செய்கின்ற இடமாக மட்டுமே குடும்பம் இருக்கிறது. ஒரு குடும்பத்தில் ஆண், மனிதனாக வளர்க்கப்படுகிறான். பெண், அடிமையாக வளர்க்கப்படுகிறாள். இந்த வளர்ப்பு முறையில் மாற்றம் வர வேண்டும்.”

திருமணம் வேண்டாம் என்று சொல்வதால், சமூகத்தை விட்டு ஒதுக்குகிறேன் என்று அர்த்தம் இல்லை. நான் சமூகத்துக்குள்ளே தான் இருக்கிறேன். சில விசயங்களில் அவர்களுடன் ஒத்துப் போக முடியாது. அப்போது நான் விலகிப் போயிடுவேன். ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. சில விஷயங்களை அலட்சியப் படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் அடிபட்டுப் போயிடுவோம். ●



படிப்பகம்

www.padippakam.com

# ஸ்டாலின் ஒரு சகாப்தம்

உலகம் முழுக்க என் மதமா? என் மதமா? என்று உலகம் முழுக்க யூத, கிறித்துவ, இஸ்லாமிய, இந்து மதவாதிகள் முறுக்கிக் கொண்டு நின்றாலும், இவர்கள் சங்கமிக்கிற இடம் ஒன்று உண்டு. அது, கம்யூனிச எதிர்ப்பு. அதிலும் குறிப்பாக ஸ்டாலின் எதிர்ப்பு.

அறிவு ஜீவிகள், கதை மேதைகள், கட்டுரையிலேயே கதை விடுபவர்கள், இன்னும் இலக்கியப் போர்வையோடு வரும் இந்து மத வெறியர்கள் - இவர்கள் ஒருவர் மீது ஒருவர் வார்த்தைச் சேறுகளை வாரி அடித்துக் கொண்டாலும், இவர்கள் ஒன்றுபடுகிற இடம் ஒன்று உண்டு.

அது, ஸ்டாலின் எதிர்ப்பு.

''ஸ்டாலின் ஒரு கொலை காரன்''

''ஸ்டாலின் மக்கள் விரோதி''

''ஸ்டாலின் ஆட்சியில் சுதந்திரம் என்ற பேச்சுக்கே இடம் கிடையாது.''

''ஸ்டாலின் ஆட்சி இரும்புத் திரை''

- என்றெல்லாம் இவர்களால் அவதூறு பரப்பப்படுகிற தலைவர் ஸ்டாலின் ஆட்சியை நேரில் கண்ட சாட்சியாக தலைவர் பெரியார். ஒடுக்கு முறைகளுக்குத் தாய்விடாக இருக்கும் சிறைச்சாலை, ஸ்டாலின் ஆட்சியில் கைதிகளுக்கு விடாகவும் தொழிற்சாலையாகவும் பயன் பட்டது என்று அந்த இரும்புத் திரையை விலக்கிக் காட்டுகிறார்.

ஆம். அமெரிக்கா போன்ற முதலாளித்துவ ஜனநாயக நாடுகளில், சாதாரண குடிமகனுக்கு உள்ள சுதந்திரத்தை விட, சோவியத் நாட்டில் தலைவர் ஸ்டாலின் தலைமையிலான சோசலிச குடியரசில், கைதிகள் கூட எவ்வளவு சுதந்திரமாக நடத்தப்பட்டிருக் கிறார்கள் என்று சாட்சியளிக்கிறார் தலைவர் பெரியார்.

- வே. மதிமாறன்

**'பெரியாரின் அயல் நாட்டுப் பயணக் குறிப்புகள்' என்ற நூலில், தந்தை பெரியார் அவர்கள் கைப்பட எழுதியது :**

28.4.1932

❝ 'Leaforthov' ஜெயில் பார்க்க அழைக்கப்பட்டுப் போனோம். டைரக்டர் அறிமுகம் செய்யப்பட்டு அவர் எல்லாம் காட்டினார். மே Firstக்கு ஆக ஜெயில் அலங் காரம் செய்து கொண்டிருந்தார்கள். கைதிகளுக்கு எவ்வித அடையாளமும் இல்லை. ஜெயில் என்பது பல பேக்ட்டரிகள் இருக்கிறது தான். பனீன், மொப்ளர் பின்னல் நெசவு பார்த்தோம். டைமன் பட்டில் நல்ல வேலைகள் செய்யப்படுகிறது. மற்றும் கோட்டுகள், ஓவர் கோட்டுகள் முதலியவை செய்யப்படுகின்றன.



ஸ்டாலின்

சிறைக்கூட அறைகள் பார்த்தோம்; கட்டில் மேஜை நாற்காலி, கம்மோட், தண்ணீர்க் குழாய், பேசின், உஷ்ணம், புஸ்த்தகங்கள் அலமாரி, ரேடியோ முதலியவைகள் இருக்கின்றன. ஒரு ரூமுக்கு 2 அல்லது மூன்று பேர் உண்டு. ஒரு ரூம் 8 X 16 அளவு. அவர்களுக்கு க்ஷவரம் செய்யும் சலூன் உண்டு. இது அழகாய் இருந்தது. வேலை கற்றுக் கொள்ளும் தொழில் பள்ளிக்கூடங்கள் உண்டு. சையன்சு அறை உண்டு. பத்திரிகைகள் படிக்கும் ரீடிங் ரூம், புஸ்த்தகங்கள் படிக்கும் லைபெரிரி, படிப்புச் சொல்லிக் கொடுக்கும் வகுப்புகள், சித்திர வேலை கற்பித்தல் முதலியவை உண்டு.

இங்கு டிராமா, சினிமா ஆல்கள் பார்த்தோம். 17 ஹ பையன் ஒருவன் பல திருட்டில் அகப்பட்டு 3½ ஹ தண்டனை அடைந்தவனைப் பார்த்து விசாரித் தோம். அவன் 2 ஹ இங்கு இருந்து வேலை பழகி பிறகு தனி பேக்ட்டரிக்கு அனுப்பப்படுவான். இப்போது நெசவு வேலை செய்கிறான். இந்த ஜெயிலில் 600 கைதிகள் உண்டு.

இதை மாதிரி 4 அடுக்கு கட்டடம். இது பரக்ஷிக்கு முன் கட்டப்பட்ட ஜெயில் கட்டடம். சில திருத்தப்பாடு செய்திருக்கிறது. ஆனால், புது ஜெயில்கள் இன்னமும் நன்றாய்க் கட்டப்படுகின்றன. முன் ஒரு அறைக்கு ஒரே கைதி. இவன் எப்போதும் உள்ளேயே இருப்பான். முன்னால் இங்கு சர்ச்சு இருந்தது. இப்போது அது ஆஸ்பத் திரியாய் இருக்கிறது. ராத்திரி காலத்தில்தான் கைதி சிறைக்குள் இருப்பான். அதுவும் இரவு 12½ முதல் 5 மணிவரைதான் இருப்பான்.

ஒரு கைதி 8 மணி நேரம்தான் வேலை செய்ய வேண்டும்; அவர்களுக்கு சாப்பாடு துணி முதலியவை இல்லாமல் ஒரு கைதிக்கு மீ 30 ரூபிள் சம்பளம் உண்டு. அதில் பகுதியை அவன் இஷ்டப்படி செலவு செய்யலாம். அதாவது, இங்கு கடையில் அவனுக்கு வேண்டிய சாமான்கள் வாங்கிக் கொள்ளலாம். மீதி மீ 15 ரூபிள் வீதம் சேர்த்து வைத்து விடுதலை ஆகிப் போகும்போது கையில் கொண்டு போவான். அவர்களுக்குள் அடிக்கடி மீட்டிங்குகள் உண்டு.

தொழில் விஷயமான பிரசங்கம், சோஷியலிஸ்ட் பிரசங்கம் செய்வார்கள். 3 மணி நேரம் படிக்கலாம்; 6 நாளில் 1 நாள் லீவு. ஹ 7 நாள், சிலர் 14 நாள் அவர்கள் வீட்டிற்குப் போய் வரலாம். குடியானவன் கைதி, கூட்டுப் பண்ணையத்துக்காரன் ஹத்தில் மூன்று மீ வீட்டுக்கு வேலைக்குப் போய்வரலாம். தினமும் தாராளமாய் வீட்டுக்குக் கடிதம் எழுதலாம்; பதில் பெறலாம். பத்திரிகை, புஸ்த்தகம் தாராளமாய்ப் பெறலாம்.

சாப்பாடு 2 வேளை; காலை 11 மணிக்கும் மாலை 6 மணிக்கும் சாப்பாடு ட வேண்டியது Freeயாய் வேண்டிய வரை கிடைக்கும். தொழில்சாலை உடை தவிர



படிப்பகம்


www.padippakam.com

மற்ற உடை அவர்கள் சொந்தத்தில் இஷ்டப் படி உடுத்திக் கொள்ளலாம். மே Firstக்கு 100 பேர்களை ஒரு நாள் எல்லாம் வெளியில் போய் வர அனுமதிப்பார்கள். கைதிகளுக்கு என்று தனிப்பத்திரிக்கை உண்டு. அது மீ 3 முறை 5 கோபக் விலை. லைபெரிரியில் 8000 எட்டு ஆயிரம் புஸ்த்தகங்கள் இருக்கின்றன. எல்லாப் பத்திரிகைகளும் வருகின்றன. 100க்கு 82 பேர்கள் ஜெயிலில் பத்திரிகைக்கு சந்தாதாரர்கள். செஸ் முதலிய கேம் விளையாட்டுச் சாமான்கள் இருக்கின்றன.


இங்குள்ள கைதிகள் குற்றம் செய்தால் இங்கேயே கைதிகளுக்குள் எலக்ட் செய்த 'காம்ரேட் கோர்ட்'டில் விசாரித்து நீதி செலுத்துவார்கள். அந்தத் தீர்ப்பு ஒப்புக் கொள்ளாவிட்டால், ஜெயில் அதிகாரிகள் 3 நாள் வரை மூடி வைத்திருக்கும் தண்டனை செய்வார்கள். 12½முதல் 5 வரைதான் ஜெயில் அறை பூட்டி இருக்கும். மற்ற காலங்களில் திறந்தே இருக்கும். பிரரேட் கோர்ட் தண்டனை என்பது குறிப்பிட்ட காலத்துக்கு சில சவுகரியங்கள் இல்லாமல் செய்வது. அவரவர்கள் நடவடிக்கைகளுக்கு ஒரு புஸ்த்தகம் உண்டு. இது போல் மாஸ்கோவில் 6 ஜெயில் இருக்கின்றன. மொத்தம் 4000 நாலாயிரம் கைதிகள் உண்டு.

பெண்களுக்குத் தனி ஜெயில் உண்டு (சில கைதிகள் தங்கள் அறைக்குள் ஸ்ட்டவ் வைத்திருந்தார்கள். மே Firstக்கு தங்கள் தங்கள் அறையை அலங்கரித்துக் கொண்டும் இருந்தார்கள்) மாஸ்கோ ஜில்லா பூராவுக்கும் சுற்றுப்பக்க கிராமங்களும் சேர்ந்து 4000 கைதிகள். இந்த ஜெயிலில் இருந்துபோகும் கைதிகள் நல்ல வேலைக்காரர்களாகி விடுகிறார்கள். ஜெயில் காரணத்தினால் ஒட்டுக்கு அருகதை போய்விடாது.

இந்த டைரக்ட்டர், ரிவிலூஷனுக்கு முன் கொல்லு வேலை செய்து கொண்டிருந்தவர். ஜெயில் திருத்தமெல்லாம் அனேகமாய் இவருடைய முயற்சியிலேயே செய்யப்படுகிறது.



தந்தை பெரியார்



பெரியாரின் கையெழுத்து

இவர் பெயர் மவுலின். ரிவிலூஷனில் இவர் தண்டனை அடைந்து சைபேரியாவில் நாடு கடத்தி வைக்கப்பட்டிருந்தவர்; அரசியல் கைதியாயும் இருந்தவர். தான் போர்ட்சைட் வரை வந்திருப்பதாகச் சொன்னார். இவர் 29 ௵மாக கம்யூனிஸ்ட் பார்ட்டியில் இருந்து வேலை செய்தவர், இவர் ஓல்ட் போல்ஸ்விக் மெம்பர். 15000 தொழிலாளிகளின் ஸ்ட்ரைக்கை லீட் செய்தவர்.

EVR கேள்வி: "இங்கு இவ்வளவு தாராளமாய்க் கைதிகள் விடப்படுகிறார்களே, ஓடிப் போவதில்லையா?" பதில்: "இதிலிருந்து ஒரு தடவை 3 பேர் ஓடிப்போனார்கள். பிறகு தானாகவே வந்து விட்டார்கள். சில சமயங்களில் 100 பேர் 200 பேர் சர்க்கஸ் பார்க்க என்று விடப்படுவார்கள். அவர்கள் காவல் இல்லாமலேயே போய் விட்டுத் தாங்களாகவே திரும்பி வந்துவிடுவார்கள். காரணம், அவர்களது நல்ல, நடவடிக்கையும் மற்றும் வெளியில் அவர்களுக்கு டிக்கட் இல்லாமல் சுலபத்தில் சாப்பாட்டுச் சாமான், அறைகள் முதலியவை கிடைக்காததுமாகும்." ரெவிலூஷன்போது இந்த டைரக்ட்டரின் பெண்ஜாதி குழந்தைகள் எதிரிகளால் (ஒயிட்ஸ்களால்) கொல்லப் பட்டுவிட்டார்கள். இவர் ஆக்ஷியில் இது உள்பட 4 ஜெயில்கள் மேற்பார்வையில் இருக்கிறது.

இந்த 4 ஜெயிலில் இருந்து வருஷம் 1க்கு 8 மிலியன் ரூபிள் மீதியாகிறது. 2300கைதிகளின் வேலையால் ரூ8000000 ரூபிள் சர்க்காருக்கு லாபம். அதாவது ஒரு கைதியால் மீ275 ரூபிள் மீதியாகிறது. கைதிகளுக்கு அதிகமான சுதந்திரமும் சவுகரியமும் உண்டு. நன்றாய் நடந்து கொள்ளுகின்றவர்களுக்கு அதிக சவுகரியமும் லாபமும் உண்டு. ❞


**தலித் முரசு**

**நான்காண்டு இதழின் தொடர் திறனாய்வு**

**இதழியல் திறனாய்வு அரங்கம் - 1**

நாள்: **10.06.2001**
ஞாயிற்றுக் கிழமை

நேரம்: காலை 10.00 மணி
முதல் 1.00 மணிவரை

இடம்: கருத்தரங்கு அறை
எண். 735, தேவநேயப் பாவாணர்
மய்ய நூலகம், அண்ணா சாலை,
சென்னை - 2

***திறனாய்வாளர்கள்***

இதழாளர் **எ. சுரேஷ் பால்**
ஆய்விதழ்: 1997ஆம் ஆண்டு முழு இதழ்

இதழாளர் **க. சந்தான கிருஷ்ணன்**
ஆய்விதழ்: 1998ஆம் ஆண்டு முழு இதழ்

**இதழியல் திறனாய்வு அரங்கம் - 2**

நாள்: **24.06.2001**
ஞாயிற்றுக் கிழமை

நேரம்: காலை 10.00 மணி
முதல் 1.00 மணிவரை

இடம்: கருத்தரங்கு அறை
எண். 735, தேவநேயப்
பாவாணர் மய்ய நூலகம்

***திறனாய்வாளர்கள்***

இதழாளர் **சு. தீஸ்மாஸ் டி செல்வா**
ஆய்விதழ்: 1999ஆம் ஆண்டு முழு இதழ்

முனைவர் **ஆரோக்கிய தாஸ்**
ஆய்விதழ்: 2000 ஆம் ஆண்டு முழு இதழ்

**அனைவரும் வருக**

ஒருங்கிணைப்பு
**புரசை கோ. தமிழேந்தி**
அமைப்பாளர்

**திருவள்ளுவர் செந்தமிழ்ப் பேரவை**
76/72, சிவசண்முகபுரம், 'ஆ' பகுதி
புரசைவாக்கம், சென்னை - 600 007
பொது தொலைபேசி: 662 47 36




படிப்பகம்

www.padippakam.com



# கதைகளே வரலாறு வரலாறே கதைகள்

■ ராஜ் கவுதமன்

அடித்தள மக்களின் விழிப்புணர்ச்சி பற்றி நாவல்கள் எழுதி வந்த மாற்கு, இப்போது 'அருந்ததியர் வாழும் வரலாறு' என்ற மானுடவியல் துறை சார்ந்த நூலை எழுதியுள்ளார். 'மனித நேய அடிப்படையில் உருவான மானுட இயல் புத்தகம் இது' என்றும் '...நான் எவ்வாறு அருந்ததியர்களைப் பார்க்கிறேன் என்பதன் வெளிப்பாடுதான் இப் புத்தகம் என்று கூறலாம்' என்றும் அவரே தமது மானுடவியல் ஆய்வின் வரையறையை ஒப்புக் கொண்டுள்ளார்.

உயர் கல்வி வட்டாரங்களில் முற்றிலும் அகச்சார்பின்றி பின்பற்றப்படுகிற ஆய்வு நெறிமுறைகளும், கருவிகளும் களப்பணிசார்ந்த சடங்குகளும் இந் நூலில் கறாராகக் கையாளப்படாததால், மானுடவியல் துறையின் தொழில் நுட்பங்களை அறிந்திராத எவரும் இந் நூலுக்குள் எளிதாகப் புகுந்து உறவாட முடியும். வேறுமாதிரி சொன்னால், இந் நூலை ஒரு நாவலைப் போலப் படித் தனுபவிக்க முடியும்.

கால்டுவெல், லூயி தூமா, ஹார்டு கிரேவ் ஜூனியர் போன்ற அய்ரோப்பியர்கள் - தமிழகத்தின் நாடார், கள்ளர் போன்ற இன மக்கள் குறித்து மானுடவியல் ஆய்வுகளைச் செய்துள்ளார்கள். ஆனால், தமிழகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற அருந்ததியர் பற்றிய இன வரலாறு, தமிழில் சொல்லப்படுவது இதுவே முதல் முறை. இந்தப் பெருமை மாற்குவைச் சேரும். நம் அருகிலேயே காலங்காலமாய் வாழ்ந்து வந்திருக்கும் அருந்ததிய சமூகத்தின் கூட்டுப் பண்பாடு, சிந்தனை, செயல், நம்பிக்கை, வழிபாடு, மரபு வழிக் கதைகள், வீரர்கள் பற்றி முதன் முதலாக உணர்வுப் பூர்வமாக அறிய நேர்கிறது.

அப்படி நேர்கிறபோது, இந்தச் சாதிய சமுதாயத்தில், அருகருகே வாழ்ந்து கொண்டிருக்கிற சாதிகள், ஒன்றைப் பற்றி ஒன்று எத்தனை அறியாமையில் மூழ்கியிருக்கின்றன என்ற உண்மை புலப்படுகிறது. குறிப்பாக, அருந்ததியரின் வாழ்க்கை வரலாற்றில் எல்லா சந்தர்ப்பங்களிலும் ஊற்றெடுத்து வருகின்ற மரபுவழிக் கதைகள் வியப்பில் ஆழ்த்தக் கூடியவை. அவர்களது சமூக வாழ்வில், சிந்தனை முறையில் உயிரோட்டமாக இக்கதைகள் இணைந்து காணப்படுகின்றன. கதைகள் மூலமே ஓர் இனம் தன்னை நூற்றாண்டுக் கணக்கில் பாதுகாத்து வந்துள்ளது என்பதைப் பார்க்கும் போது, அடித்தள மக்களின் தன் இருப்புக்கும் அவர்கள் படைத்த கதைகளுக்கும் உள்ள நெருங்கிய பிணைப்பை அவதானிக்கலாம்.

ஓர் ஆசிரியனின் படைப்பான நவீன நாவல் என்ற புனைக்கதையைவிட, பூர்வ கால ஞாபகங்களோடு வாழுகின்ற அருந்ததியர் போன்ற இனங்கள் படைத்துள்ள மரபுவழிக் கதைகள், அந்த இனங்கள் வாழ்வதற்கான தார்மீக நியாயங்களையும் அவற்றின் பண்பாடுகளை இயக்குகின்ற உள்ளாற்றல்களையும் பன்மடங்கு பெற்றுள்ளன.

அடித்தள மக்கள் தங்கள் மீது திணிக்கப்பட்ட ஒடுக்குமுறைகளுக்கு இடையில் எப்படித் தங்களைத் தகவமைத்துத் தக்கவைத்துக் கொண்டார்கள் என்பதை அறிவதற்கு - அவர்களுடைய பண்பாட்டுப் பொக்கிசமான மரபுவழிக்கதைகள்


மாற்கு

பிரதானமானவை. இந்த ரீதியில் ஆய்வு செய்வதற்கு, இந் நூலைச் சிறந்த தகவல் களஞ்சியம் என்று சொல்லலாம்.

அருந்ததியரின் மரபுவழிக் கதைகள், வேறு பரிமாணத்தையும் கொண்டுள்ளன. ஆதிக்க சக்திகளின் மய்யநீரோட்ட வரலாற்றின் வஞ்சனைகளையும், பொய் புரட்டுக்களையும் அடையாளம் கண்டு அந்த வரலாற்றைத் தலைகீழாகக் கவிழ்த்துவிடும் சான்றுகள், அருந்ததியரின் கதைகளில் உள்ளன. ஆஷ்துரையை பார்ப்பன -வெள்ளாள சக்திகள் (இந்துத்துவம்) கொன்ற சம்பவம் மற்றும் கட்டபொம்மன் வெள்ளையரை எதிர்த்த காரணம் ஆகியவற்றின் பின்புலத்தை அறிந்து கொள்ள, அருந்ததியரின் கதைகள் துணைபுரிவதை மாற்கு வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளார். (பக். 59)

அருந்ததியர்களிடம் ஏராளமான நம்பிக்கைகள் உள்ளன. இவை அம்மக்களிடம் அவர்களுக்கு மறுக்கப்பட்ட கல்வி, அறிவு, சுயசிந்தனை, தத்துவவிசாரம், சாத்திரப் பயிற்சி ஆகியவற்றுக்கு மாற்று ஈடாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மனித மூளையின் ஒரு பாதியைச் செயல்படுத்த நீங்கள் தடை செய்தால், அதன் மறுபாதி அந்த இழப்பை ஈடு செய்துவிடும். இது, இன்றைய அறிவியல் உண்மை.

அறிவு சார்ந்த பகுதியை அருந்ததியரிடம் தடை செய்ததால் - நம்பிக்கை, படைப்பு சார்ந்த மறுபகுதி அவர்களிடம் பிரமாதமாகச் செயல்பட்டு வந்துள்ளது. அந்த நம்பிக்கையின் ஒரு பகுதி அவர்களது தெய்வ நம்பிக்கை. இதனை மாற்கு தமது அகவய நோக்கில், இறை நம்பிக்கை அதிகம் உள்ள இனம் ஒன்று உண்டு என்றால் - அதை அருந்ததியர் இனம் என்று துணிந்து சொல்லலாம்' (பக் 87) என்று தலைகீழாகக் குறிப்பிடுகிறார். அப்படி இல்லை. இறை நம்பிக்கை பல நம்பிக்கைகளில் ஒன்று. அவ்வளவுதான்.

அருந்ததியரின் குலதெய்வ நம்

நூல் : 'அருந்ததியர் வாழும் வரலாறு'
ஆசிரியர் : மாற்கு. பக்கம் : 352
விலை : 140/- வெளியீடு :
நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மய்யம்,
தூய சவேரியார் (தன்னாட்சி) கல்லூரி
பாளையங்கோட்டை - 627 002

“ வரலாற்றில் பல தவறான தகவல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அடித்தட்டு மக்களின் பார்வையிலிருந்து ஏற்கனவே எழுதப்பட்ட வரலாற்றைப் பார்க்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். எழுதப்பட்ட வரலாற்றிலும் அடித்தட்டு மக்களின் வரலாறு இல்லை. அடித்தட்டு மக்களின் வரலாற்றை அம்மக்களிடமிருந்துதான் அறிய வேண்டியுள்ளது. ”



படிப்பகம்

www.padippakam.com

**“ ஆதிக்க வர்க்கத்தின் அறநெறியை மீறி, ஒருவரை ஆதிக்க வர்க்கம் கொலை செய்துவிட்டது என்று வைத்துக் கொள்வோம். இந்தக் கொலைக்கு நியாயம் கேட்டுப் போராடக்கூடிய ஆட்பலமோ, பணபலமோ, ஆயுத பலமோ, அரசியல் பலமோ இவர்களிடம் இல்லை. என்ன செய்வது? தங்களிடம் இருக்கும் ஒரே ஆயுதம் வழிபடுவதுதான். எனவே, கொல்லப்பட்டவரைக் குல தெய்வமாக்கி அவரை வழிபடுகின்றனர். தங்களது எதிர்ப்பை, இவ்வாறு வழிபடுவதன் மூலம் காட்டுகின்றனர். ”**

பிக்கை, வழிபாடு, எல்லாமே அவர்களை மிகப்பெரிய ஆத்திகர்களாக அடையாளப்படுத்தவில்லை. ஆத்திகம் - நாத்திகம் என்ற விவகாரங்களை அவர்கள் கடந்தவர்கள் அல்லது அந்த ஆதிக்க முரண்பாட்டுக்குள் வரக்கூடாதவர்கள், வராதவர்கள். அது அவர்களின் விவாதப் பொருள் அல்ல. அவர்களது இறைநம்பிக்கை எந்தவித ஆதிக்கத்தையும் உற்பத்தி செய்யக்கூடியதல்ல. வேண்டுமானால், அருந்ததியரின் நூதனமான பெருந்தெய்வ வழிபாட்டை (வைணவக் கோயில், கடவுள் வழிபாடு) அப்படிச் சொல்லலாம்.

ஓரிடத்தில், ‘சாமி கும்பிட்டே பொருளாதாரத்தில் தாழ்ந்துவிட்ட சமூகம்...’ (பக் 87) என்று மாற்கு அருந்ததியரைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அவர்களின் வறுமைக்கு அவர்கள் சாமி கும்பிடுவதற்குச் செலவழிக்கும் பணவிரயம் முக்கிய காரணம் போல் குறிப்பிடுகிறார். மேலும், அருந்ததியர் சாமி கும்பிடுவதற்காகப் பணத்தையும் நேரத்தையும் அளவுக்கதிகமாகச் செலவழிப்பதாக மாற்கு கருதுகிறார். உடைமை மறுக்கப்பட்டு, உடைமையின்மையே உடைமையாகக் கொண்டு வாழ விதிக்கப்பட்ட மக்களுக்குப் பணம், நேரம் பற்றிய ஓர்மை எப்படி இருக்கும் என்பதை வெளியிலிருக்கும் நம்மால் முற்றாகப் புரிந்து கொள்ள முடியுமா?

பணத்திற்கும், நேரத்திற்கும் ஆதிக்க சாதியினரும், அருந்ததியரும் சம அளவிலான முக்கியத்துவம் கொடுப்பார்களா என்பது விவாதத்திற்குரியது. இரு தரப்பாரின் பார்வை வேறுபடுகிறது. உற்பத்திச் சாதனங்கள் மற்றும் உற்பத்திச் சக்திகள் மீது முழு ஆதிக்கம் கொண்டவர்களுக்கு நேரமும், பணமும் முக்கியமான விசயங்கள். இப்படி இல்லாதவர்கள் அருந்ததியர்கள். இவற்றைத் தங்களுடைய வாழ்க்கையின் அடிச்சரடான நம்பிக்கைக்குப் பலியிடுவது எதிர்பார்க்கத்தக்கதுதானே?

அருந்ததியர் இவ்விசயத்தில் பிழைக்கத் தெரியாதவர்கள், விபரம் தெரியாதவர்கள் என்று மற்றவர்கள் சொல்லலாம். ஆனால், பிழைப்பு, விவரம் பற்றிய பார்வை ஏற்றத்தாழ்வான சாதிய சமுதாயத்தில் - ஒடுக்கப்படுகின்ற அளவுக்கேற்ப மாறுபடும் என்பதை மறக்கலாகாது. அருந்ததியராகப் பிறந்து வாழ்ந்து பார்த்தால்தான் இது புரியும் என்று சொல்லத் தோன்றுகிறது.

இந்த நூலில் 4ஆவது அத்தியாயம், அருந்ததியர் பண்பாடு பற்றியது. மானுடவியலின் பாடத்திட்டம் பற்றி எதுவும் தெரிந்திராத ஒருவர் இத்தனை நுட்பங்களோடு எழுதியிருப்பது மலைப்பைத் தருகிறது. இன்று, இளமுனைவர்பட்டம், முனைவர் பட்டம் பண்ணுகிறேன் பேர்வழி எனப் புற்றீசல்களாய்ப் புறப்பட்டுள்ள நபர்கள், இந்த அத்தியாயத்தைப் படித்தால்தங்களைநினைத்து வெட்கித் தலைகுனிவார்கள். கடுமையானஉழைப்பு, சமூக அக்கறை, முழுஈடுபாடு ஆகிய பண்புகள் இன்று தமிழ்த் துறை - நாட்டுப்புறவியல் துறைகளில் காண்பதற்கு அரிதாகிக் கொண்டிருக்கின்றன. இந்தத் துறைகளில் மழைக்கோ, வெய்யிலுக்கோ ஒதுங்காத மாற்கு, இத்துறையினரால் சாதிக்க இயலாததை இந்த அத்தியாயத்தில் சாதித்துள்ளார்.




இந்நூலை உருவாக்கிய நாட்டார் வழக்காற்றியல் துறையை எவ்வளவு பாராட்டினாலும் தகும். சோற்றில் கல் இல்லாமல் இருப்பது போலத்தான் நூலில் பிழையில்லாமல் இருப்பதும். இந்த வகையில் நூலில் பிழைகளைக் காணவியலாது. ஆனால், ‘விருதுநகர் மாவட்டத்தில் 200 சதவிகிதம் மக்கள் தெலுங்கு பேசுகின்றனர்’ (பக் 10) என்ற 2ஆவது அத்தியாயத்தின் முதல் வாக்கியம், சோற்றில் பெரும் பாறாங்கல்லைப் போட்டிருக்கிறது. இது எப்படி நேர்ந்தது? அருந்ததியர் 20 சதவிகிதமா அல்லது 2 சதவிகிதமா என்பது தெரியவில்லை.

இனி முடிவாக, இந்நூலைப் படித்த பிறகு எழுந்த எண்ணங்களைக் கூறலாம் என நினைக்கிறேன். அருந்ததியர் ஒப்பீட்டளவில் மிகவும் சிறுபான்மையினர். ஆதிக்க சாதியைப் பொருளாதார ரீதியில் சார்ந்து வாழ்பவர்கள் என்பதால், அவர்களைப் பிடித்துள்ள அச்சம் அவர்களுக்கு நவீன யுகத்தில் பெருந்தடையாக உள்ளது தெரிகிறது. அவர்கள் இனிமேல் நம்பிக்கை சார்ந்த பாரம்பரியமான வாழ்க்கையில் நடைபோட முடியுமா என்பது சந்தேகமே.

நவீனத்துவ வாழ்க்கை முறையிலிருந்து அவர்கள் தங்களை சுய அகதிகளாக ஆக்கிக் கொள்ள முடியாது. நவீனத்துவத்திற்கு வந்தே ஆக வேண்டும். பழைய வீரர்களின் காலம் காலவதியாகி விட்டது. தங்களுக்கான அரசியல் அதிகாரத்தை அவர்கள் அம்பேத்கர் கூறியபடி, கல்வி, பணி, அரசியல் அங்கத்துவம் ஆகியவற்றில் உள்ள இட ஒதுக்கீட்டின் பலன்களை அபகரிப்பதன் மூலம் பெற்றாக வேண்டும். தங்களது பொருளாதாரத்தைச் சுய ஆதீனப்படுத்த வேண்டும். நடை உடை பாவனை பழக்க வழக்கம் அனைத்திலும் அவர்கள் ஒரு புரட்சியைச் செய்தாக வேண்டும். அதன் தொடக்கமாக மாற்கு, நூலின் இறுதியில் குறிப்பிட்ட அருந்ததியர் மேற்கொண்ட தீண்டாமை ஒழிப்பு நடைப்பயணத்தைக் குறிப்பிடலாம். புதிய மதுரை வீரர்கள் தோன்றியே ஆக வேண்டும்.

வரலாற்றின் பிரஜையாக இன்றி, அதன் நாயகனாக மாறினாலன்றி விடுதலை கிட்டாது. இந்நூல் இந்த மாற்றத்திற்கான மனபலத்தையும், தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தும் என்று நம்புவோம். ●



படிப்பகம்

www.padippakam.com

தமிழக வரலாற்றில் 1975ஆம் ஆண்டு மே மாதம் ஒரு முக்கியமான காலம். இக்கால கட்டத்தின் நாயகர் திருமதி சத்தியவாணிமுத்து. தி.மு.க. அரசிலிருந்து சத்தியவாணி முத்து தூக்கி எறியப்பட்டார். பதவி பிடுங்கப்பட்டு கோட்டையிலிருந்து வீட்டுக்கு வருவதற்குள், வீட்டு தொலைபேசி இணைப்பு, மின்சார இணைப்பு, குடிநீர் இணைப்பு, காவலர்கள் அத்தனையும் நொடிப்பொழுதில் பிடுங்கப்பட்டிருந்தது. வீட்டுக்கு வந்த சத்தியவாணிமுத்து, இதைக் கண்டு கடும் வேதனையும் அதிர்ச்சியும் அடைந்தார்.

தி.மு.க. தலைமை முதல் அடித்தொண்டன் வரை அவர்மீது வசை தாக்குதல் தொடுத்தனர். சத்தியவாணிமுத்துவின் வெளியேற்றம், தி.மு.க. அரசிற்கு அற்ப ஆயுளை உண்டாக்கி விட்டது என்று பத்திரிகைகள் 'ஆருடம்' கூறும் அளவிற்கு இந்த நிகழ்வு அதிர்ச்சி அளிக்கக் கூடியதாக இருந்தது. இந்த அதிர்ச்சியின் பின்னணிதான் - திராவிட அரசியலின் முகத்திரையைக் கிழிக்கிறது.

அக்காலத்தில், 'டாக்டர் அம்பேத்கர் பெயரில் ஒரு கல்லூரி அமைக்க வேண்டும்' என்பது தலித் மக்களின் பரவலான ஒரு கோரிக்கையாக இருந்து வந்தது. இதை நிறைவேற்ற திருமதி சத்தியவாணி முத்து தீவிரமாய் இருந்தார். இதை கருணாநிதி அரசு விரும்பவில்லை. நிதிப்பற்றாக்குறையை காரணம் காட்டி தட்டிக் கழிக்க முயன்றதோடு, கல்லூரிக்கான 50 சதவிகிதம் நிதியை மக்கள் தந்தால் - கல்லூரி கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும் என்ற நிலைப்பாட்டை எடுத்தது.

பின்பு இந்த நிதியை சேகரிப்பதில் - திருமதி சத்தியவாணி முத்து தீவிரமாக செயல்படவே, தி.மு.க. அரசிற்கு தர்ம சங்கடமாகி விட்டது. எனவே, இத்திட்டத்தைக் கைவிட வேண்டுமென்றால், சத்தியவாணி முத்தைக் கைகழுவ வேண்டிய நிலைக்கு வந்தது. ஆனால், வெளியேற்றுவதற்கான 'சாக்கு' கிடைக்கவில்லை.

இந்நிலையில், சென்னை அய்.சி.எப்.இல் எஸ்.சி./ எஸ்.டி. ஊழியர்கள் ஏற்பாடு செய்த கூட்டத்தில் சத்தியவாணி முத்து ஆற்றிய உரையை ஒருவாய்ப்பாக எடுத்துக்கொண்டது தி.மு.க அரசு. தி.மு.க. அரசு அறிமுகப்படுத்திய குடும்பக்கட்டுப் பாட்டுத் திட்டம், சில மலிவான சலுகைகளை குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்பவருக்கு அளித்தது. இதை சத்தியவாணிமுத்து கடுமையாக எதிர்த்தார். அதோடு இத்திட்டமானது, ஏழை தலித் மக்களை மலிவான சலுகைக்கு ஆசை காட்டி - குடும்பக்கட்டுப்பாடு செய்யத் தூண்டுவதுடன் சமூகத்தில் தலித் மக்களின் எண்ணிக்கையை குறைக்கும் சதி என சத்தியவாணிமுத்து குற்றம் சாட்டினார். அவ்வளவுதான்.

அரசின் திட்டத்தை அமைச்சரே எப்படி எதிர்க்கலாம் என்று கூறி பதவியைப் பறித்தது. இந்த பதவிப் பறிப்பை நியாயப்படுத்த தி.மு.க. வினர் நடத்திய பல பத்திரிகைகள் களமிறங்கின.

அதில் ஒன்று 'காண்டீபம்' என்ற இந்து பெயர் சூட்டிய திராவிட இதழ். இதன் ஆசிரியர் எஸ்.எஸ். மாரிசாமி, எம்.பி. 20.5.1974 நாளிட்ட அன்றைய இதழில் 'சத்தியவாணிக்கு சமர்ப்பணம்' என்ற தலைப்போடு கட்டுரை வெளியானது. இக்கட்டுரையை இங்கு வெளியிடுவதற்கான முக்கியக் காரணங்கள்:

1. தி.மு.க.வினர், அம்பேத்கரை ஒரு வடநாட்டுத் தலைவராக சித்தரிக்க முயன்றதோடு, அவருக்கு எதிராக ரெட்டமலை சீனிவாசன், தந்தை சிவராஜ் போன்றோரை நிறுத்த முயன்றனர்.

2. இவர்கள் அனைவரையும் சாதி ஒழிப்பு, சமத்துவப் புரட்சியாளர்களாகப் பார்க்காமல் வெறும் 'அரிஜனத் தலைவர்' களாகக் குறுக்க - திராவிட பகுத்தறிவாளர்கள் முயன்றதை இக்கட்டுரை சொல்கிறது.

3. கீழ்வெண்மணியின் ஓலம் மறையாத நிலையில் - தமிழகத்தில் தீண்டாமை அறவே ஒழிந்து போய் விட்டதாகவும், வடநாட்டில் மட்டுமே அது உயிர்வாழ்வதாகவும் ஒரு பொய்ப் பிரச்சாரத்தை தி.மு.க. ஊது குழல்கள் முழங்கின. அதற்காக அக்காலத்தில், அண்டை மாநிலங்களில் நடந்த தலித் மக்கள் மீதான வன்முறை கொடுமைகள் பட்டியலிட்டுக் காட்டப்பட்டன. அந்தப் பட்டியல் தலித் சமூகத்திற்கான ஒரு மாற்று ஆவணமாக இருக்கிறது.

**- கவுதம சன்னா**

# ஒப்புதல் வாக்குமூலம்

உத்திரப் பிரதேச மாநிலத்தில் முசாபர் நகர் என்ற மாவட்டம். இந்த மாவட்டத்தின் தென் பகுதியில் கந்தலா போலிஸ் சரகம் என்று ஒரு பகுதியிருக்கிறது. இந்த சரகத்திற்குள் எட்டு கிராமங்கள் இருக்கின்றன; அந்த எட்டு கிராமங்களிலும் கடந்த ஒரு மாத காலமாக 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதோடு ஆயுதம் தாங்கிய போலிசார் வேறு இரவு பகலாக ரோந்து சுற்றி வருகிறார்கள். மாலை மங்கி இருட்டுகிற நேரம் வந்தால், எந்த ஆண்மகனும் பெண் மகளும் தங்கள் குடிசைகளை விட்டு வெளியே வருவதில்லை. அப்படி தப்பித்தவறி அவர்கள் வெளியே வந்தால், ஆணாக இருந்தால் போலிசார் அவனை எதுவும் கேட்காமல் சுட்டுவிடுவார்கள். பெண்ணாக இருந்தால் பயங்கர காரியங்கள் நடைபெறுகின்றன. அவற்றை விவரிக்க அவசியம் இல்லை.



சத்தியவாணி முத்து

இச்சரகத்தில் வாழக்கூடிய மக்கள் யார் தெரியுமா? அத்தனை பேரும் தாழ்த்தப்பட்ட மக்கள். திருமதி சத்தியவாணிமுத்து, வாய்நோக வசைபாடினாரே - அந்த மகாத்மாவினால் அரிஜனங்கள் என்று செல்லமாக அழைக்கப்பட்ட அரிஜன மக்கள். அவர்கள் கதிதான், இந்திரா காங்கிரஸ் ஆளும் உத்திரப் பிரதேச மாநிலத்தில் இப்படியாக இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்பதை கீழே தருகிறோம்.

சென்ற திங்களில் மூன்று பேர் இக்கிராமத்தில் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதில் ஒருவர் போலிஸ்காரர். இச் கொலை நடந்த இடம் புனேரா என்ற கிராமம். இக்கொலை யைப் பற்றி பலவிதமாகக் கூறப்படுகிறது. ஆனால், டில்லி யிலிருந்து சென்ற நான்கு நிருபர்கள் தனித்தனியாக கொடுத் அறிக்கைகளைப் பார்த்தபோது, ஒரு சில உண்மைகள் கிடை திருக்கின்றன.

''ஏப்ரல் மாத மத்தியில் இக்கிராமத்திற்குள் ஆயுத தாங்கிய கொள்ளைக் கூட்டத்தினர் புகுந்து கொள்ளை அடித் இருக்கிறார்கள். அந்தக் கொள்ளை அடித்த கோஷ்டி காக்



படிப்பகம்

www.padippakam.com



உடை அணிந்து இருந்தது. தங்களது உடைமைகளைப் பறிகொடுத்த கிராமத்து மக்களில் ஒரு சில வாலிபர்கள் துணிந்து கொள்ளைக்காரர்களை விரட்டியிருக்கிறார்கள். அப்போது திருபுத்ராம் என்ற போலிஸ்காரர் இவர்கள் கையில் சிக்கியிருக்கிறார். அவரும் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர் என்று நினைத்து இந்த வாலிபர்கள் அவரை ஒரு வீட்டினுள் அடைத்துப் போட்டிருக்கிறார்கள். இந்த செய்தி, போலிஸ் தலைமையகத்திற்கு மறுநாள் எட்டியிருக்கிறது.

உடனே அவர்கள் பெரும் படையாக இக்கிராமங்களுக்கு வந்து இறங்கியிருக்கிறார்கள். பிடிபட்டிருக்கும் திருபுத்ராமை விடுவிக்க அவர்கள் சென்றபோது, அறையினுள் அந்த பேலிஸ்காரர் பிணமாகக் கிடந்திருக்கிறார். அதுதான் நடந்தது. உடனே அந்த போலிஸ்காரர்கள் தங்கள் தோளில் சுமந்து வந்த நம்பர் 303 என்ற பயங்கர இரட்டைக் குழாய் துப்பாக்கியை எடுத்து கண்மண் தெரியாமல் சுட்டிருக்கிறார்கள்.

இவர்கள் சுட்ட நேரம் பட்டப்பகல் 12 மணி. இதில் மாண்டவர்களின் எண்ணிக்கை இவ்வளவுதான் என்று திட்டவட்டமாகக் கூற முடியவில்லை. சில பேர் 50 பேர் இறந்தார்கள் என்கிறார்கள். இன்னும் சிலர் 100 பேர் என்கிறார்கள். மற்றும் சிலர் கணக்கிட இயலாது என்கிறார்கள். இதைக்குறித்து ஒரு மாஜி சிப்பாய் - அந்த கிராமத்துவாசி பன்வர்சிங் என்பவர் கூறுவதைக் கேளுங்கள்:

“ஏப்ரல் மாதம் 17ஆம் தேதி இரவு ஒரு கொள்ளைக் கூட்டம் எங்கள் கிராமத்திற்குள் நுழைந்தது. சுபேதார் பாபுராம் என்பவர் வீடு கொள்ளையடிக்கப்பட்டது. வீட்டிலிருந்த பெண்களை கொள்ளைக்காரர்கள் இடித்தும் உதைத்தும் நகைகளைக் கழட்டித் தரும்படியாகவும் கூறினார்கள். அப்போது அந்த சுபேதார் பாபுராம் திண்ணையில் படுத்திருந்தார். வீட்டினுள்ளே பெண்கள் குய்யோ முறையோ என்று கத்த, பாபுராம் வீட்டிற்குள் புகுந்திருக்கிறார். அதற்குள்ளாக கொள்ளைக்காரர்கள் சாமான்களை எடுத்துக்கொண்டு கொல்லைப் புற வழியாக ஓடியிருக்கிறார்கள்.

ஆனால், சுபேதார் பாபுராம் மாஜி வீரர் அல்லவா? அவர் அவர்களை விரட்டி இரண்டுபேரை பிடித்திருக்கிறார். அந்த இருவரையும் வெளிச்சத்தில் பார்த்தபோது, கிராமத்து வாசிகளுக்கு தூக்கிவாரிப்போட்டது. அந்த இருவரும் போலிஸ்காரர்கள். கைத்துப்பாக்கியோடு இருந்திருக்கிறார்கள். அந்த சுபேதாரின் மனைவி பத்திரிகைக்கு கொடுத்த அறிக்கையைப் பார்ப்போம். அந்த அம்மையாரின் பெயர் பிர்மாதேவி:

“என் கணவர், பிடிபட்ட இரண்டு போலிஸ் கொள்ளைக் காரர்களை ஒரு அறையில் போட்டு பூட்டினார். மறுநாள் காலை அவர் போலிஸ் ஸ்டேஷனுக்குச் சென்று நேற்றிரவு நடந்த கொள்ளையைப் பற்றி கூறினார். போலிசார் இவர் கொடுத்த புகாரை ஏற்கவில்லை. இதைப் பார்த்த சுபேதார் பாபுராம் முசாபர் நகர் போலிஸ் சூப்பிரண்டெண்டை பார்த்து விவரத்தைக் கூறியிருக்கிறார்.

அந்த அதிகாரி சுபேதார் கொடுத்த புகாரை எழுதிக் கொடுக்கச் சொன்னாராம். அதன் பிறகு என் கணவர் பிற்பகலில் கிராமத்துக்குத் திரும்பினார். அப்போதுதான் போலிஸ் அதிகாரிகள் துப்பாக்கி சகிதமாக அங்கு வந்து இறங்கினார்கள். அவர்கள் ஒவ்வொரு வீட்டையும் சுற்றிப் பார்த்து வந்தார்கள். கொள்ளைக்காரர்களை அடைத்து வைத்திருந்த அறையை திறக்கச் சென்றார்கள்.

அங்கிருந்த இரண்டு போலிஸ்காரர்களில் ஒருவர் செத்துக் கிடந்தார். அவ்வளவுதான். வந்த போலிஸ்காரர்கள் அத்தனை பேரும் கையில் வைத்திருந்த துப்பாக்கிகளைக் கொண்டு என் கணவரான பாபுராவை அடித்தார்கள். அவர் மயங்கி கீழே விழுந்தார். பாபுராமின் ஒன்று பட்ட சகோதரரான அர்ஜுன் சிங் இதைப்பார்த்து உதவிக்கு ஓடிவந்தார். உடனேபோலிசார், 'கிட்டே நெருங்காதே' என்றார்கள். அர்ஜுன் சிங் 'அடிக்காதீங்கயா அடிக்காதீர்கள், ஐயோ பாவம்' என்று சொன்னதும் அவரை என் கண்ணுக்கு முன்னாகவே சுட்டுக் கொன்றார்கள். இதைப் பார்த்த என் கணவரின் கடைசி தம்பி சோபாசிங் என்பவர் கீழே விழுந்த அர்ஜுன் சிங்குக்கு உதவி செய்ய அவர் அருகே சென்றார். போலிசார் என் கண் முன்பாகவே அவரையும் சுட்டுவிட்டார்கள். இதன் பிறகு அந்த எட்டு கிராமங்களிலும் போலிசார் நரக வேட்டையாடி இருக்கிறார்கள்.

●●

'டில்லிக்கு மிக அருகாமையிலுள்ள மீரட் மாவட்டத்தில் பாதுஷ்புரி என்னும் கிராமத்தில் ஒரு அரிஜன வாலிபனைப் பிடித்து உயிரோடு எரிக்க முயன்றிருக்கிறார்கள். அந்த வாலிபனுக்கு 21 வயது ஆகிறது.

இவ்வாறு எரிப்பதற்கு முன்பு அவனை 30 மணி நேரம் மரத்தில் கட்டி வைத்து தோலை உரிக்காத குறையாக அடித்திருக்கிறார்கள். பிறகு அவன்மீது நெருப்பை வைத்தார்கள். பல இடங்களில் நெருப்புக் காயங்கள் அவன் உடலில் இருக்கின்றன. கடைசி நிமிடத்தில் அந்தப் பையன் காப்பாற்றப் பட்டிருக்கிறான். அவனை கவலைக்கிடமான நிலையில் முகந்தலால் ஆஸ்பத்திரியில் அனுமதித்து இருக்கிறார்கள். இந்த செய்தி, டில்லியிலிருந்து வெளிவரும் 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகையில் 24.4.74ஆம் தேதியன்று போடப்பட்டிருக்கிறது.

ஆதிவாசிகள் என்று அழைக்கப்படும் அரிஜன மக்கள் பீகாரில் துல்காதி என்ற இடத்தில் அதிக கூலி கேட்டார்கள் என்ற காரணத்திற்காக அங்குள்ள நிலப்பிரபுக்கள் அவர்களைச் சுட்டதாகவும் அதில் பலபேர் மாண்டார்கள் என்

**தி.மு.க.வினர் அம்பேத்கரை ஒரு வடநாட்டுத் தலைவராக சித்தரிக்க முயன்றதோடு, அவருக்கு எதிராக ரெட்டமலை சீனிவாசன், தந்தை சிவராஜ் போன்றோரை நிறுத்த முயன்றனர். இவர்கள் அனைவரையும் சாதி ஒழிப்பு - சமத்துவப் புரட்சியாளர்களாகப் பார்க்காமல் வெறும் 'அரிஜனத் தலைவர்'களாகக் குறுக்க - திராவிடப் பகுத்தறிவாளர்கள் முயன்றதை இக்கட்டுரை சொல்கிறது.**



படிப்பகம்

www.padippakam.com

பதாகவும் போபாலில் இருந்து வெளிவரும் 'கிரானிக்கல்' என்ற பத்திரிகையில் 12.3.74 இதழ் செய்தி தருகிறது.

●●

எனவே, இந்த செய்திகளை எல்லாம் பார்க்கும்போது - அரிஜன மக்கள் துன்பத்திற்கும் அவமானத்திற்கும் உள்ளானார்கள். தமிழகத்தில் அல்ல; வடக்கேதான் என்பது அசைக்க முடியாத உண்மையாகிறது. அப்பேற்பட்ட நிலையில், திருமதி சத்தியவாணி முத்து அம்மையார் உண்மையிலேயே அரிஜனங்களுக்குப் பாடுபட வேண்டும் என நினைத்தால் என்ன செய்ய வேண்டும்? அவர் வடக்கே போய் புதுக் கட்சியைத் துவக்க வேண்டும்.

டாக்டர் அம்பேத்கரைப் பற்றி அம்மையார் அடிக்கடி பேசிவருகிறார். ஆனால், திரும்ப அம்மையாருக்கு எம்.சி.ராஜா, ரெட்டமலை சீனிவாசன் என்று தமிழகத்தில் தன்னலமற்ற இரு அரிஜன பிரமுகர்கள் இருந்தார்கள் என்று அவர்கள் ஆற்றியிருக்கும் சேவைகளையும் தெரிவிக்க ஆசைப்படுகிறோம்.

மகாத்மா காந்தி, எரவாடா சிறையில் உண்ணாவிரதம் இருந்தபோது அந்த உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி உலகத்திலுள்ள நல்லவர்கள் அத்தனைபேரும் வேண்டினார்கள். காங்கிரஸ் தலைவர்கள் அத்தனைபேரும் எரவாடா சிறைமீது படையெடுத்து மகாத்மாவின் காலைப் பிடிக்காத குறைதான். ஆனால், தமிழகத்தில் பிறந்த எம்.சி. ராஜா, தனது அற்புதமான சேவையினால் மகாத்மாவை உண்ணாவிரதத்தைக் கைவிடும்படியாக செய்தார்.

இன்னும் சொல்லப்போனால், எம்.சி.ராஜா செய்த பல தியாகங்கள்தான் இன்றையதினம் தமிழ் நாட்டில் அரிஜன மக்களுடைய எழுச்சிக்கே காரணம். அதேபோலதான் ரெட்டமலை சீனிவாசனும். எனவே, திருமதி அம்மையார் டாக்டர் அம்பேத்கரைப் பற்றி பேசுவதோடு இந்தியாவின் அரிஜன இயக்கம் எப்படி துவங்கியது என்பதை முதலில் படித்துத் தெரிய வேண்டும். பிறகு அரிஜன மக்கள் நலன்களுக்காக அவர் போராட்டத்தில் குதிக்கலாம். அவர் களத்தில் இறங்க வேண்டுமென்றால், களம் எங்கே இருக்கிறது என்று 'காண்டீபம்' காட்டியிருக்கிறது. அது வடக்கே இருக்கிறதேயொழிய தமிழகத்தில் இல்லை. அம்மையார் வடக்கே, தன் ரத கஜதுராக பதாதிகளுடன் படையெடுப்பாரா? ●

# துன்புறுத்துதலுக்கு ஆட்படுபவர்களுக்கான மறுவாழ்வு மய்யம்



துன்புறுத்துதல் என்பது, மனித இனத்திற்கே எதிரானது. அது மனிதனைக் கீழ்மைப் படுத்தி, மிருகத்தையும் விட கேவலமான முறையில் அவமானப்படுத்தி, அவன் எந்த வித வாழ்க்கையும் வாழ முடியாத நிலைக்குத் தள்ளிவிடுகிறது. ஒருவர் குற்றம் சாட்டப்பட்டவராக இருந்தாலும் அல்லது அவர் எத்தகைய குற்றவாளியாக இருந்தாலும் அவரைத் துன்புறுத்துவதற்கு - யாருக்கும் எந்த அதிகாரமும் இல்லை. இந்தியாவின் அரசியல் சட்டத்திலும், பன்னாட்டுச் சட்டங்களிலும் துன்புறுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், துன்புறுத்துதல்கள் தொடர்ந்து ரகசியமாகவே இன்னும் நடத்தப்பட்டு வருகின்றன. இது, மனித இனமே வெட்கித் தலை குனியக் கூடிய ஓர் அவலமாகும்.



ஒவ்வொரு ஆண்டும் சூன் 26 - துன்புறுத்துதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பண்பாட்டுரீதியிலான ஆதரவு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்நாளில் (சூன் 26, 2001) துன்புறுத்துதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் 'மக்கள் கண்காணிப்பகம்' என்ற மனித உரிமை அமைப்பு, மறுவாழ்வு மய்யம் ஒன்றை மதுரையில் துவங்கியுள்ளது.



மதுரையை மய்யமாகக் கொண்டு இம்மய்யம் செயல்பட்டாலும் - தென்னிந்திய அளவில் துன்புறுத்துதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மய்யமாகவே செயல்படும். எனவே, துன்புறுத்தல்கள் நடைபெறுவதைக் கண்டால், இம்மய்யத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு முகவரி :**

'சித்ரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மறுவாழ்வு மய்யம்'
மக்கள் கண்காணிப்பகம் - தமிழ் நாடு
7, பி.டி. ராசன் சாலை, 2ஆவது தெரு, மதுரை - 2
தொலைபேசி : 0452 - 532432, 531874



படிப்பகம்

www.padippakam.com



# நவீன 'சத்ரியர்கள்'

■ அயன்புரம் ராசேந்திரன்

பெரியார் வழி வந்ததாக சொல்லிக்கொள்ளும் வீரமணி, ஜெயலலிதா என்ற பார்ப் பனருடனும் - கருணாநிதி, வாஜ்பாய், அத்வானி போன்ற பார்ப்பனர் களுடனும் அரசியலில் உறவு கொண்டு, வரலாற்றை - பெரியார் வழிக்கு எதிரான திசையில் புரட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த வரலாற் றுப் புரட்டை நாம் இனம் கண்டாக வேண்டும்; இதில் அடங்கி இருக்கும் அரசியலை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதை வெறும் சுயநல அரசியலாக மட்டுமே நினைத்து ஒதுக்கிவிட முடியாது.

கருணாநிதி, வீரமணியிடம் ஏற்பட்டு வரும் - பார்ப்பனர்களுக்கு சார்பான அரசியல் மாற்றத்தை - அவர்களிடம் மட்டுமே ஏற்பட்டு வரும் தனித்த மாற்றமாகக் கொள்ள முடியாது. தமிழ்ச் சமூகத் தில் பார்ப்பனர்களுக்கு அடுத்த நிலையில் இருக்கும் சைவ வெள் ளாள சாதியினர், பார்ப்பனர்களை ம் மிஞ்சியவர்களாக - இந்து மத ..ங்காச்சாரங்களை, சாதிய நடை ..றைகளை மேற்கொண்டு - தங் ..ள் அதிகார எல்லைகளை விரிவு ..டுத்தி வருவதுபோல, இன்று பிற் ..டுத்தப்பட்ட சாதிகளில் இருந்து ..ருவான அரசியல், சாதி சங்கத் ..லைவர்கள், கட்சியிலுள்ள மாவட்ட, ..ட்டத் தலைவர்கள், செயலாளர்கள், ..ட்சியாளர்கள், அரசு அதிகாரிகள் ..வர்களிடமெல்லாம் - 'இந்துத்துவ ..ணாம்சங்கள்' பெருகி வருகின்றன.

காஞ்சா அய்லய்யா குறிப்பிடுவது ..ால, இவர்கள் 'புதிய சத்ரியர் ..ாக' வளர்ந்து வருகின்றனர். பார்ப் ..ர்களின் ஆதிக்கத்தை எதிர்த்துப் ..ாராடி அதிகாரத்தைக் கைப்பற் ..த்த முனைகின்ற இந்த 'புதிய சத்ரி ..ள்' - இந்துத்துவத்தை எதிர்ப் ..தயோ பார்ப்பனீய நடவடிக்கை ..லிருந்து விடுபடுவதையோ செய்யாமல் - இந்துத்துவ நடவடிக் கைகளில் வேகமாக ஈடுபட்டு வருகின்றனர். தங்களை 'சூத்திரர் களாக' அடக்கி ஒடுக்கிய இந்து மதத் தையும், பார்ப்பனீயத்தையும் அழிக்க இவர்கள் போர்க்குரல் எழுப்புவ தில்லை.

கிராமங்களில் நிலச்சுவான்தார் களாக, கோயில் அர்ச்சகர்களாக - கோயில் டிரஸ்ட்டிகளாக உழைக் காமல் அதிகாரம் செலுத்தி வந்த பார்ப்பனர்கள் கிராமத்தை விட்டு புதிய நகர அதிகார மய்யங்களை நோக்கி நகர்ந்து விட்ட பொழுது - அவர்கள் விட்டுச் சென்ற நிலங்களை யும், கோயில் நிர்வாகங்களையும் பற்றிக் கொண்ட பார்ப்பனரல்லாத சாதியினர் - 'புதிய சத்ரியர்'களாக



மாறி கடுமையான முறையில் தலித் மக்கள் மீது வன்முறையைக் கட்ட விழ்த்து வருவதை நாம் மறந்து விட முடியாது.

இவ்வாறான 'புதிய சத்ரியர்'களின் உருவாக்கத்தினூடே தான்' கருணாநிதி, வீரமணி போன்றோரின் - பார்ப்பனர் கள் சார்பான அரசியல் நடவடிக்கை களையும் நாம் புரிந்து கொள்ள வேண்டி யுள்ளது. தி.க., தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க., த.மா.கா., அ.தி.மு.க., (தலை மையைத் தவிர மற்றவர்கள்) ஆகிய இவர்களெல்லாம் ஒடுக்கப்பட்ட மக்க ளிலிருந்து உருவானவர்கள்தானே; இவர்களை நாம் ஆதரிக்க வேண்டாமா? என்ற கேள்விகள் எழலாம்.

ஆனால், இந்த ஒற்றை அம்சத் துடன் மட்டுமே இவர்களை நாம் ஆத ரித்துவிட முடியாது. இவர்கள் அனை வரும் பார்ப்பனர்களுடன் அதிகாரத் துக்காக மோதுவதும், பல நேரங் களில் சமரசமாகிப் போவதுமான நிலைப்பாட்டோடுதான் செயல்படு கின்றார்களே அன்றி - பார்ப்பனீயத் திற்கு எதிரான 'தலித் பண்பாட்டு' குணாம்சங்களை ஏற்பதில்லை.

இவர்கள் அனைவரும் பெரியார் போராடி வளர்த்த 'இந்துத்துவ' எதிர் கலாச்சார நடவடிக்கைகள் அனைத் தையும் ஒழித்துக்கட்டி விட்டு அரசியல் செய்வதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். இவர்கள் கடைசி யாக தொங்கிக் கொண்டிருந்த அந்த 'இடஒதுக்கீடு' என்னும் ஒற்றை அம்சமும் இன்று காற்றில் பறந்து போய்க் கொண்டிருக்கிறது.

எனவே, ஒடுக்கப்பட்ட மக்களே இந்த 'புதிய சத்ரியர்'களின் எழுச்சி என்பது இந்து வருண தரும சாதி நிலைப்பாட்டைக் கட்டிக் காப்பதா கவே உள்ளதை புரிந்து கொள்ள வேண்டும். இவர்களை 'நம்மவர் கள்' என்று எண்ணி ஏமாந்து போகக்கூடாது.

ஒடுக்கு முறைக்கு எதிராக நாம் செல்ல வேண்டிய பாதை, இந்த 'புதிய சத்ரியர்'களின் பாதை அல்லவே அல்ல. நாம் செல்ல வேண்யடி பாதை அம்பேத்கர் - பெரியார் பாதைகளே!

எனவே, சாதி ஒழிப்பு; பெண் ணடிமை ஒழிப்பு; தனியார் துறையில் இட ஒதுக்கீடு; தீண்டாமை ஒழிப்பு; சமஸ்கிருத எதிர்ப்பு; கருவறை நுழைவுப் போராட்டம்; ராமன் பட எரிப்பு; பிள்ளையார் சிலை உடைப்பு; இந்திய தேசிய எதிர்ப்பு; தலித் மக்கள் மீதான வன்கொடுமை ஒழிப்பு; 'நங்கள் இந்துக்கள் அல்ல' என்ற தொடர் பிரச்சாரம் என்ற மனித நேய செயல்பாடுகளை இடையறாது கொண்டு செல்வோம். ●



படிப்பகம்

www.padippakam.com



# தற்காப்புக் கலையில் சிறந்த தலித் இளைஞர்



மு. முருகன்

தற்காப்புக் கலையும், வீரவிளையாட்டும் வேறு யாரைவிடவும் தலித் மக்களுக்கு மிகத் தேவை யானது. அந்த வகைக் கலைகளில் ஒன்றான 'கராத்தே' வில் சிறந்து விளங்குகிறார், வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு அருகிலுள்ள மசிகம் சிற்றூரைச் சேர்ந்த மு. முருகன் என்கிற 26 வயது இளைஞர்.

சாதிய வெறிகொண்டு வெட்டவரும்போதும், தாக்கவும் தீயிடவும் வரும்போதும் - தலித் இளை ஞர்களுக்குத் தற்காப்புக்கலை துணையிருந்தால், சில உயிர்களாவது மிஞ்சுமே என்கிற ஆதங்கம் எழு கிறது. தலித் மக்கள் ஆயுதம் இழந்தவர்கள், ஆயுதம் பறிக்கப் பட்டவர்கள் என்றார் அம்பேத்கர். அத னால்தான் 'சிங்கங்களாக' மாற வலியுறுத்தினார்.

முருகன் 'கராத்தே'வில் கறுப்புப் பட்டை பெற்றவர். ஜப்பான் கென்சே மோபெனி என்கிற சிகப்புப் பட்டை பெற்றவரிடம் பயிற்சி பெற்றவர். முருகன், மாநில அளவி லும் தேசிய அளவிலுமாக இதுவரை 6 போட்டிகளில் பங்கேற்று 4 போட்டிகளில் சாம் பியன் பட்டம் பெற்றிருக்கிறார். 60லிருந்து 65 கிலோ பிரிவில் மூன்று முறை முதலாவ தாகவும், ஒருமுறை இரண்டாவதாகவும் வந்துள்ளார்.

அருண் பாண்டியன், கரண் உள்ளிட்ட பல நடிகர்களிடமும், முக்கிய பிரமுகர்க ளிடமும் பரிசுக் கேடயங்களைப் பெற்றிருக்கிறார். சமூக நோக்குடன் மிகக்குறைந்த கட்டணத்திற்கு, இந்த தற்காப்புக் கலையை இந்த இளைஞர் கற்றுத் தந்தும் வருகிறார் என்பது குறிப்பிடத் தகுந்தது.

- ஞானப்பறை

## தலித் முரசு வாழ்நாள் கட்டணம் செலுத்திய சமூக நீதிப் போராளிகள்

94. டாக்டர் எஸ். சின்னத்தம்பி கோபிசெட்டிப்பாளையம்
95. திரு. இரா. அதியமான், கோவை
96. திரு. எம். தனவேல் உடுமலைப்பேட்டை
97. Dr. Ambedkar Nursery & Primary School, Karai
98. டாக்டர். வி. குழந்தைவேலு, நெய்வேலி
99. திரு. சி. சிங், கன்னியாகுமரி
100. திரு. வி. கனகராஜ், இ.ஆ.ப., சென்னை
101. பொறியாளர் ஜெ. ஆனந்தராஜ் தூத்துக்குடி
102. திரு. எம். அர்ஜுனன், சென்னை
103. திரு. எஸ். ஆனந்த், சென்னை
104. திரு. அசுரன், கன்னியாகுமரி
105. திரு. டி. கோதண்டபாணி, பெங்களூர்
106. திரு. எஸ்.எஸ். தமிழினியன், தூத்துக்குடி
107. திரு. ஏ. இளங்கோவன், கிருஷ்ணகிரி

தலித் முரசு வாழ்நாள் கட்டணம் ரூ. 1000/-



# “யாருங்க இப்பல்லாம் ஜாதி பாக்கறாங்க”

## தலைமையாசிரியரின் சாதி வெறியாட்டம்

சாதி வெறியாட்டம் எந்த வடிவத்திலும் வரலாம். சேலம் தனம் வடிவத்திலும் வரலாம்; முன்னாள் அமைச்சர் அருணாச்சலத்தை விமானத்திலிருந்து இறக்கிவிட்ட ஜெயலலிதா வடிவத்திலும் வரலாம்.

வேலூர் மாவட்டம் குடியாத்தம் தாலுகாவில் பரதராமி என்னும் கிராமம். ஆந்திர எல்லையில் உள்ள இக்கிராமத்தில் அரசினர் மேல் நிலைப்பள்ளி உள்ளது.

இங்கு ஆறாம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்புவரை தமிழ், தெலுங்கு மொழி சொல்லித் தரப்படுகிறது. ஆண்டுக்கு ஒரு முறை முதல் மதிப்பெண் பெறும் +2 மாணவ - மாணவியருக்கு பெற்றோர் - மாணவர் சங்கத்தின் சார்பாக தங்கப் பதக்கமும் பெறும் பரிசுத் தொகையும் வழங்கப்படும். இது நல்லதுதானே என்று சொல்லலாம்.

ஆனால், 1999-2000ஆம் ஆண்டுக்கான முதல் மாணவ பிரேம்குமாருக்கு பாராட்டு விழாவும் நடத்தவில்லை; தங்கப் பதக்கமும் கொடுக்கவில்லை. காரணம்? வேறொன்றுமில்லை பிரேம்குமார் ஒரு தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்ததுதான்.

இது குறித்து தலைமையாசிரியரிடம் தலித் சங்கத்தலைவ குபேந்திரன் கேட்டபோது, ''எங்கள் விருப்பப்படிதான் விழா எடுப்போம்'' என்று கூறியிருக்கிறார்.

பாருங்கள், படித்து முதல் மாணவனாக வந்தாலும், சாதித முதலில் நின்று அலட்சியப்படுத்துகிறது. இத்தகைய சாதி வெறிபிடி ஆசிரியரிடம் படித்து - எந்த மாணவன்தான் முன்னேறுவான்?

- நம் செய்தி



படிப்பகம்

www.padippakam.com



## வெற்றிகளைக் குவிக்கும் தலித் வீராங்கனை

ஆசிய வலுதூக்கும் போட்டி அண்மையில் டெல்லியில் நடந்தது. சீனியர், ஜூனியர், சப்-ஜூனியர் ஆகிய பிரிவு ளில் ஆண், பெண்களுக்குத் தனித்தனியே போட்டி நடத்தப் ட்டது. இதன் மகளிர் 52 கிலோ எடைப்பிரிவில் இந்திய அணி ார்பில், தமிழக வீராங்கனை நெல்லை அய்ரின் கலந்து கொண்டார். வர் இந்தப் போட்டியில் 'ஸ்குவாட்' முறையில் 137.5 கிலோவும், பெஞ்ச்பிரஸ்' முறையில் 37.5 கிலோவும், 'டெட்லிப்ட்' முறையில் 30 கிலோவும் - மொத்தம் 305 கிலோ எடை தூக்கி 3ஆவது டத்தைப் பிடித்தார். தலித் வீராங்கனையான அய்ரின், மே 00இல் ரஷ்யாவில் நடைபெற்ற ஆசியப் போட்டியிலும் பங்கேற்று வற்றி பெற்றார் என்பது குறிப்பிடத் தகுந்தது. ■


# தலித் முரசு

சமூக நீதித் திங்கள் இதழ்

பெயர்.................................................

முகவரி ..............................................

.......................................

.......................................

டி.டி. மற்றும் எம்.ஓ. Dalit Media Network என்ற பெயருக்கு அனுப்பவும்.

**தலித் முரசு கட்டணப் படிவம்**

நான், தலித் முரசு இதழின் ஆண்டு / வாழ்நாள் கட்டணம் செலுத்த விரும்புகிறேன்.

- ஆண்டுக் கட்டணம்: ரூ. 100
- வாழ்நாள் கட்டணம் : ரூ. 1,000


## "தமிழர் தேசியக் கழகம்"

### நம்பிக்கையுடன் தமிழர்கள்

ஈழப்பிரச்சனை, தமிழ்த் தேசத் தன்னுரிமை, சாதி எதிர்ப்பு, தமிழர் விடுதலை, பெரியாரியல் இவை பற்றி தமிழக இளைஞர்களிடையே ஒரு தாக்கம் ஏற் பட்டிருந்தால் அதற்கு முக்கிய காரணம், சுப. வீரபாண்டியன் என்கிற கொள்கைப் போராளிதான்.

'விடுதலைக் குயில்கள்' அமைப்பு இருந்த போதும், அதைக் கலைத்துவிட்டு 'தமிழ் தமிழர் இயக்கம்' நடத்திய போதும், சுபவீ யின் பணி இளைஞர்களை எழுச்சியுறச் செய்தது. தோழர் தியாகு அவர்களுடன் ஏற்பட்ட கொள்கை முரண்பாட்டால், தற்பொழுது புதிய இயக்கம் ஒன்றைத் துவங்குகிறார் சுபவீ.

'தமிழர் தேசியக் கழகம்' என்கிற பெயரோடு அதே கொள்கைப் பிடிப்போடு ஊர் ஊராகப் பிரச்சாரம் செய்ய கிளம்புகிறார். வேறு சில இயக்கங்களும் தமிழர் தேசியக் கழகத்துடன் இணையவுள்ளன.

சுபவீ யுடன் அன்புதென்னரசன், மதுரை மாறன், சா. பேகன் ஆகியோர் அணிவகுக்கின்றனர். 'அனல் வீச்சு' என்கிற திங்களிதழும் சூன் 15 முதல் வருகிறது. தமிழர்கள், வழமைபோல் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர்.




கோவை வடக்கு மாவட்ட சோமனூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வெள்ளானைப்பட்டி என்ற கிராமத்தில், 'ஆதித்தமிழர் பேரவை'யின் பெயர்ப் பலகை - 'கொங்கு வேளாளர் பேரவை'யினரால் இடித்துத் தள்ளப்பட்டது. வன்மையான கண்டனத்திற்குரிய இச் செயலை செய்தவர்கள் மீது காவல் துறை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- தீபா



படிப்பகம்

www.padippakam.com

குமுதம்

# ஆபாசத்தின் தமிழ் வடிவம்



பனியா - பார்ப்பனக் கூட்டுத் தயாரிப்பான குமுதத்திற்கு ஒரு 'பாரம்பரியமான ஆபாசத்தனம்' உண்டு.

ஆண்களும் பெண்களும் வெறும் பாலியல் உறுப்புகள்.

அதிலும் பெண்கள், ஈழக் கவிஞர் அ. சங்கரி எழுதியது போல்,

*''எனக்கு*
*முகமில்லை*
*இதயமில்லை*
*ஆத்மாவுமில்லை*
*அவர்களின் பார்வையில்*
*இரண்டு மார்புகள்*
*நீண்ட கூந்தல்*
*சிறிய இடை*
*பருத்த தொடை*
*இவைகளே உள்ளன''*

ஆம். இந்த வரிகள், அப்படியே குமுதத்திற்குப் பொருந்தும். குமுதத்தின் உள்ளடக்கமும் இவ்வளவுதான்.

''அதென்ன, குமுதம் மட்டும்தான் ஆபாசமாக வருகிறதா? மற்ற பத்திரிகைக யோக்கியமா?'' என்ற கேள்வி வேகமாக வரலாம்.

''ஜெயலலிதா ஒருவர்தான் ஊழல் செய்தாரா? மற்றவர்கள் யோக்கியமா?''

''ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. தான் மதவாதமா? மற்ற கட்சிகள் யோக்கியமா?''

என்ற அயோக்கியத்தனமான கேள்விகளுக்கு சமமானதாகும் அந்தக் கேள்வி.

தமிழக அரசியலில் எல்லோரும் ஊழல் செய்தவர்கள்தான். ஆன ஜெயலலிதாவின் ஊழலுக்கு முன் அவர்கள் எம்மாத்திரம்?

எல்லாக் கட்சிகளும் இந்து மத சிந்தனை கொண்டவைதான். ஆனால், பா.ஜ.க. மு அவை எம்மாத்திரம்?

எல்லா வெகுஜன பத்திரிகைகளும், ஆபாச செய்திகள் வெளியிடுபவைதா ஆனால், குமுதத்தின் முன் அவை எம்மாத்திரம்?

ஆம். 'குமுதம்' - ஆபாசத்தின் தமிழ் வடிவம்.

உங்கள் வீட்டுக்குள் 'குமுதம்' என்கிற அந்த 'விபச்சார தரகனை' அனுமதிக்காதீர்

உங்கள் குழந்தைகளின் மனதில் பாலியல் வக்கிரங்களைத் தூண்டுவதற்கு நீங் பொறுப்பாகாதீர்கள்.

''சரி, இதெல்லாம் நியாயம்தான். பார்ப்பனர்களே பத்திரிகை உலகில் நிரம்பி இ நாட்களில் - பார்ப்பனரல்லாத ஒருவர் பத்திரிகை ஆரம்பித்து, பார்ப்பனப் பத்திரிகை விட முன்னணியில் கொண்டு வந்து நிறுத்தியதை நாம் பார்க்க வேண்டாமா?''

ஆபாசத்தில் என்னடா இட ஒதுக்கீடு?

பொறுக்கித்தனத்தில் பார்ப்பான் என்ன? பார்ப்பனரல்லாதவன் என்ன?

- சி

**தமிழில் அதிகம்**
**விற்பனையாகும் பத்திரிகை**
**'குமுதம்' என்பது**
**தமிழர்களுக்கு**
**அவமானம்**



படிப்பகம்

www.padippakam.com



# சட்டப் பேரவை உறுப்பினர்களின் கவனத்திற்கு...


புதிய சட்டசபை கூடி சுமார் ஒரு வருடமாகின்றது. இந்த ஒரு வருட காலத்தில், பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்குச் சட்டசபையின் மூலம் நிகழ்ந்த நன்மைகள் என்னவென்று பார்ப்போமானால், ஒன்றுமில்லை என்று சொல்ல வேண்டியதுடன், பல கெடுதிகள் நடந்திருப்பதாகவும் சொல்லாமலிருக்க முடியாது.

புது சட்டசபை கூடியவுடன் முதன் முதல் நடந்த சங்கதி, பார்ப்பனரல்லாதார் ஆதிக்கத்தில் இருந்த தாலுக்கா, ஜில்லா போர்டுகளைப் பார்ப்பன ஆதிக்கத்திற்குக் கொண்டுவர முயற்சிக்கப்பட்டது. அதிலும், பார்ப்பனர்களே சிறிது வெற்றி பெற்றார்கள்.

அடுத்ததாக, பார்ப்பனரல்லாதாரை ஒழிக்கப் பெரிதும் போராடிப் பாடுபட்டு வரும் வருணாசிரம தர்மத்திற்குச் சட்டசபை ஆதரவளித்து வருவதற்கு அறிகுறியாக, பிராமணன் - பஞ்சமன் என்கின்ற பாகுபாடுகளுக்கு ஆதாரம் கற்பிக்கப்பட்டது. இன்னும் இதுபோன்ற மற்றும் பல காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. இவை அவ்வளவும் பார்ப்பனர்களுக்கு அனுகூலமானதும், பார்ப்பனரல்லாதார்களுக்குப் பிரதிகூலமும் கொடுமையும் இழிவுமானவை என்பதில் சுயமரியாதையுள்ள பார்ப்பனரல்லாதார் யாருக்கும் சந்தேகமிருக்காது.

இது நிற்க. பார்ப்பனரல்லாதார்களுக்கு அனுகூலமாய் சிறீமதி முத்துலட்சுமி அம்மாளால் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அதாவது, 'கோயில்களின் பேரால் சில பெண்களுக்குப் பொட்டுக்கட்டி விபச்சாரத்திற்கு விடும் வழக்கத்தை நிறுத்த ஒரு சட்டம் கொண்டுவரும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகின்றது' என்கின்ற தீர்மானம். இது நிறைவேறி இருந்தாலும், காரியத்தில் ஒரு பலனையும் கொடுக்கத் தக்கதல்லவென்றே சொல்லுவோம். சர்க்காரைக் கேட்டுக் கொள்ளும் காரியம் என்ன பலனடையும் என்பது யாருக்கும் தெரிந்ததுதான்.

இதைத் தவிர, வேறு எவ்வித முக்கியத் தீர்மானமும் கொண்டுவரப்பட்டதாகவும் தெரியவில்லை. 4,5 முறை சட்டசபை கூடியாகி விட்டது. இதற்குள் பார்ப்பனர்களுக்கு ஏற்பட்ட நன்மை, பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்படவில்லை. பார்ப்பனர்கள் சுமார் 15 பேர்கள் தான் சட்ட சபையில் உண்டு; பார்ப்பனரல்லாதார் புற்றீசல் போல் பலபேர் இருக்கின்றார்கள்; இவர்கள் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதாரின் நன்மைக்காகவே சட்டசபைக்குப் போவதாகப் பறைசாற்றிப் பெரிய கிளர்ச்சி செய்து - பார்ப்பனரல்லாதாரின் ஓட்டுகளைப் பெற்றுப் போனவர்கள். இதுவரை என்ன செய்தார்கள்? எத்தனை தீர்மானங்கள் கொண்டு போனார்கள்? என்று கேட்கின்றோம்.



மந்திரி வேலைக்குப் பிரயத்தனப்பட்டதும், முடியாமல் போன பிறகு மந்திரிகளுடன் சண்டை போட்டதும், மந்திரிகளை மிரட்டி நியமனங்கள் பெற்றதும் அல்லாமல் வேறு என்ன காரியம் செய்ய முடிந்தது என்று பாமர மக்கள் நினைக்கும்படியாகத்தானே இருக்கின்றது? அதே காரியங்களைத்தானே பார்ப்பனர்களும் செய்து வருகின்றார்கள்? பார்ப்பன சூழ்ச்சிகளை எதிர்த்து வருவதை ஒரு வெற்றியாகச் சொல்லிக் கொள்ளலாம். ஆனாலும், இதுவேதானா நமது லட்சியம் என்று கேட்கின்றோம்.

எத்தனை மாநாடுகளில் நமது நலத்தைக் குறித்து எவ்வளவு தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன? அத்தீர்மானங்கள் அமுலில் வருவதற்குச் சட்ட சம்பந்தமான ஆதரவுகள் வேண்டியவைகளுக்குச் சட்டசபை மெம்பர்கள் ஆதரவுபெற முயற்சித்தார்களா? ஸ்தல ஸ்தாபனங்களில் நடக்கும் அக்கிரமங்களை ஒழிக்க ஏதாவது முயற்சித்தார்களா? பார்ப்பனரல்லாதார்களுக்குச் சரியான பிரதிநிதித்துவம் இல்லாத துறைகளில் பிரதிநிதித்துவம் கிடைக்க முயற்சித்தார்களா? என்று கேட்கின்றோம். ஒரு சமூகத்திற்கே பிரதிநிதிகளாகப் போய், தங்கள் காரியங்களை மாத்திரம் பார்த்துக் கொண்டார்கள் என்று சொல்லும்படி நடந்து கொள்ளுவது யோக்கியப் பொறுப்பாகுமா?

இதுவரை செய்த வேலைகள் கண்டிப்பாய்த் திருப்தியற்றதென்றும், அடுத்த தேர்தலில் பார்ப்பனரல்லாதார் என்று சொல்லிக் கொள்வது மாத்திரம், ஓட்டுப் பெறக்கூடிய யோக்கியதாபாத்திரமாகாதென்றும், செய்த வேலையைக் காட்ட வேண்டிய நிலைமை முதலியவைகள் கண்டிப்பாய் நேரிடுமென்றும் இப்போதே எச்சரிக்கை செய்கின்றோம். ◇

*- 'குடிஅரசு' - 11.12.1927*

> “எவ்வளவோ ஊக்கமும் எழுச்சியும் உள்ள இந்த காலத்தில் கூட, ஒரு காரியமும் செய்ய முடியவில்லையானால் - இனி எப்போதுதான் சாதிக்க முடியும்? ஆதலால் பார்ப்பனரல்லாத சட்டசபை மெம்பர்கள் ஒரு கூட்டம் கூட்டி, மீதி உள்ள காலத்திற்குள் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்காக என்னென்ன மசோதா கொண்டுபோக வேண்டியது என்று ஒரு முடிவிற்கு வந்து, அவைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம்.”

படிப்பகம்

www.padippakam.com

YEZHUTCHI DALIT MURASU, Tamil Monthly, Regd. No.: TN / CPMG-151 / 2001 Posted at Patrika Channel Egmore RMS / 1 Periodicals
Registered with the Registrar of Newspapers for India Under No. 71325 / 97 Licensed to Post without Prepayment Licence No. 47

# இரண்டாயிரம் ஆண்டு ஒடுக்குமுறைக்கு எதிரான குரல்

தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இதழ் மட்டுமல்ல...




5 ஆண்டுகளாக வெளிவருகிறது. வாங்கிப் படியுங்கள்.

Owned and Published by P. Chandragesan from No. 6, 97th Street, 15th Sector, K.K. Nagar, Chennai - 600 078 a
...ted by G.P. Ramachandran at Thamizhmarai Achagam, 32, 3rd Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Editor : P. Chandrages